
மாபெரும்
நம்பிக்கை
நன்மைக்கும் தீமைக்குமிடையே நடக்கிற யுத்தம் என்ன?
அதில் வெற்றிபெறுபவர் யார்?
தெளிவான விளக்கங்கள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

7

A. Antony Ajitha Mary

மாபெரும் நம்பிக்கை

IV B

நன்மைக்கும் தீமைக்குமிடையே நடக்கிற யுத்தம் என்ன?
அதில் வெற்றிபெறுபவர் யார்?
தெளிவான விளக்கங்கள்

A. Antony Ajitha Mary
IV B

19 ஆம் நூற்றாண்டில் எலன் ஜி ஒய்ட் எழுதிய
மாபெரும் போராட்டம் எனும் தலைசிறந்த புத்தகத்தின்
தழுவல்

தமிழாக்கம்: மார்சல் ஐசக்

A. Antony Ajitha Mary
VI F

தென்கிழக்கு இந்திய ஒன்றியம், செவந்-டே அட்வெண்ட்டிஸ்ட் திருச்சபை
197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை - 600 048

Tamil Edition 75,000 Copies
English Edition 4,00,000 Copies

Registered 2011
Copyrighted © 2011
All Rights Reserved

Published by Pr. K. Chelladurai for South East India Union of Seventh-day Adventists and Printed by Dr. Calvin N. Joshua at and for Oriental Watchman Publishing House, Post Box 1417, Salisbury Park, Pune 411 037, India.

முகவுரை

"இப்போது நாம் பார்ப்பதையும் உணருவதையும்விட வாழ்க்கையில் மேலானவை உள்ளன; நாளைய தினம் சிறப்பானது, வளமானது, மகிழ்ச்சியானது" எனும் நம்பிக்கை இருந்தால், எதிர்பாராத விபத்துகளும் அழிவுகளும் நம் குடும்பங்களைச் சின்னாபின்னாமாக்கினாலும், நம் வெற்றிக் கனவுகள் தவிடுபொடியானாலும், நோயும் மரணமும் நமக்குப் பிரியமானவர்களைப் பிரித்தாலும் நாம் நொடிந்துவிடாமல் முன்னேறமுடியும்.

அப்படிப்பட்ட நம்பிக்கையின் வரலாற்றைக் கூறும் புத்தகம் தான் 'மாபெரும் நம்பிக்கை'. 19 ஆம் நூற்றாண்டின் வரலாற்றுப் பின்னணியில் இது எழுதப்பட்டிருந்தாலும், 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான அருமையான கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அன்பின் தேவன் ஒரு வரைப்பற்றி இந்தப் புத்தகம் கூறுகிறது; மனிதர் சிருஷ்டிக் கப்படும் முன்னரே, அவர்களைப் பாதுகாக்கவும் இரட்சிக்கவும் திட்டமிட்டவர் அவர். மரணமும் உபத்திரவமும் உலகில் நுழைந்தபோது, நாம் அழிவதைப் பார்க்க அவர் ஒரு ஓரத்தில் கையைக் கட்டிக்கொண்டு சும்மா நிற்கவில்லை; மனிதரை இரட்சிக்கும் திட்டம் ஒன்றை வெளிப்படுத்தினார்; அந்தத் திட்டம் இன்று முழுவீச்சில் செயல்பட்டுவருகிறது.

வேத உபதேசங்களை விளக்கிக்கூற தங்களுக்கு உரிமை உண்டு என்று உரிமைபாராட்டிய அநேகரை வரலாறு முழுவதிலும் காணலாம். ஆனால், தேவனுடைய நாமத்தாலும் அதிகாரத்தாலும் செயல்படுவதாகச் சொல்லிக்கொண்ட அநேகர் சமாதானத்தையும் நம்பிக்கையையும் சீர்குலைத்து வந்ததையும் காணலாம். 'உண்மையில் தேவன் யார்?' என்பதை சரியாக அறியாததாலும் 'அப்படி ஒருவர் இருக்கிறாரா?' என்று சந்தேகிப்பதாலும் உலகம் இருளடைந்துள்ளது.

ஆனால், மனிதர்மேல் தேவன் வைத்திருக்கிற அன்பு குறைந்துபோகவே இல்லை. அவரைப் பிரசங்கிப்பதாகச் சொல்கிறவர்கள் அவரைப்பற்றி என்ன வேண்டுமானாலும் கூறட்டும்! தேவனைப்பற்றிய உண்மையை அவருடைய வார்த்தையில் காணலாம்; மெய்மனதோடு தேடுகிற யாவரும் அதைக் கண்

டடைவார்கள்.

நீங்கள் சத்தியத்தைத் தேடுகிறீர்களா? சமாதானத்தைத் தேடுகிறீர்களா? நம்பிக்கையைத் தேடுகிறீர்களா? எங்குத் தேடுவீர்கள்? தேசங்கள், அரசியல் போர்களில் ஈடுபட்டுள்ளன; உலகப்பொருளாதாரம் நொறுங்கிக்கொண்டிருக்கிறது; சுற்றுச்சூழல் பாதிப்பால் ஏற்படும் இயற்கை சீற்றங்கள் பெரும் அழிவை ஏற்படுத்துகின்றன; தட்ப வெப்ப நிலையிலும் கட்டுக்கடங்காத மாற்றம் ஏற்பட்டுள்ளது. நல்லதொரு எதிர் காலத்தை உருவாக்கவோ சந்தோஷமான வாழ்க்கையை அமைக்கவோ மனித அறிவு போதுமானதாக இல்லை.

ஆனாலும், நம்பிக்கை இல்லாமற்போகவில்லை. மனித வாழ்க்கையில் தேவனுடைய சுவடுகளைத் தேடிப்பாருங்கள்; உங்களை இரட்சிக்க அவர் ஆயத்தமாக உள்ளதைக் காணலாம். சாத்தானின் பொய்களிலிருந்து உங்களைக் காப்பாற்றக் கூடிய சத்தியங்களைக் கண்டுகொள்ளுங்கள். இன்று உங்கள் வாழ்க்கையை மாற்றி, நித்திய வாழ்வுபற்றிய வாக்குத்தத்தங்களைத் தருகிற சத்தியங்களைக் கண்டுகொள்ளுங்கள்.

இறுதியாக, வேதாகமத் தீர்க்கதரிசனங்களை ஆராயுங்கள்; இனி வரும் ஓர் உலகத்தைக் காணலாம். இந்த உலகம் நொறுங்கிப்போகலாம்; தேவன் நம் கரங்களைப் பிடித்திருக்கும் பிடி இறுகுவது தெரியும். நம் கரம் அவருடைய பிடியில் இருந்தால் தான், நம் எதிர்காலம் பாதுகாப்பாக இருக் கும்.

இந்தக் கணத்தில் நம் வாழ்க்கையில் என்ன நடந்தாலும் பரவாயில்லை; நம்மைச் சுற்றிலும் என்ன நடந்தாலும் பரவாயில்லை; நம் எதிர்காலம் குறித்து மாபெரும் நம்பிக்கையோடு இருக்கலாம். தேவன் இன்றைக்கு உங்களுக்கும் அருளும் மாபெரும் நம்பிக்கையை முழுமனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

- வெளியீட்டாளர்கள்

அதிகாரம் 1

உபத்திரவம் ஏன்?

தீமை ஏற்படுத்துகிற அழிவையும் வேதனையையும் பார்க்கிறவர்கள், 'எல்லையில்லா ஞானமும் வல்லமையும் அன்பும்கொண்ட ஒருவருடைய ஆளுகையின்கீழ் தீமை காணப்படுவது எப்படி?' என்று கேள்வி எழுப்புகிறார்கள். சந்தேகிக்கும் மனப்பான்மை வந்ததும், பரிசுத்த வேதாகமத்தைப் புறக்கணிப்பதற்குக் காரணமும் கிடைத்து விடுகிறது. தேவனுடைய குணம், அவருடைய ஆளுகையின் தன்மை, பாவத்தைக் கையாள அவர் பயன்படுத்தும் நியதிகள் ஆகியவைபற்றி வேதாகமம் சொல்வதை தெளிவாகக் காணமுடியாதபடி, சம்பிரதாயப் பழக்கங்களும் தவறான அபிப்பிராயங்களும் தடையாக நிற்கின்றன.

பாவத்தின் தோற்றத்தை விளக்குவது கடினம். பாவம் ஏன் நிலைத்திருக்கிறது என்பதற்குக் காரணம் சொல்வதும் கடினம். ஆனாலும், தேவனுடைய நியாயத்தையும் தயாளத்தையும் வெளிப்படுத்துமளவிற்கு, பாவத்தின் தோற்றம்பற்றியும், அதன் முடிவுபற்றியும் அறிந்துகொள்ளலாம். பாவம் உருவானதற்கு தேவன் எவ்விதத்திலும் காரணர் அல்லர். 'தன்னிச்சையாக தேவ கிருபை விலக்கப்பட்டது; தேவனுடைய ஆளுகையில் குறை இருந்தது; அதனால்தான் கலகம் ஏற்பட்டது' என்று சொல்லமுடியாது. பாவம் இடையில் புகுந்துவிட்ட ஒன்று; அது இருப்பதற்குக் காரணம் எதுவும் சொல்லமுடியாது. பாவத்திற்குக் காரணங் கற்பித்தல், அதை நியாயப்படுத்துவது ஆகும். சாக்குச் சொல்லமுடிந்தால், அதன்பின் அது பாவமாக இராது. தேவ ஆளுகையின் அடித்தளமான அன்பின் பிரமாணத்துக்கு

எதிராகப் போரிடும் நியதியின் செயல்பாடுதான் பாவம்.

பாவம் நுழைந்ததற்குமுன், பிரபஞ்சம் முழுவதிலும் சமாதானமும் சந்தோஷமும் நிறைந்திருந்தன. தேவன் மேல் பிரத்தியேக அன்பு இருந்தது; ஒருவர்மேல் ஒருவர் பாரபட்சமற்ற அன்பு இருந்தது. தேவனுடைய ஒரே பேறான கிறிஸ்து, இயல்பிலும் குணத்திலும் நோக்கத்திலும் நித்திய பிதாவிற்கு நிகரானவராக இருந்தார்; தேவனுடைய சகல ஆலோசனைகளிலும் திட்டங்களிலும் கலந்துகொள்ள அவர்மாத்திரமே தகுதிபெற்றிருந்தார். 'பரலோகத்திலுள்ள வைகளும் சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களா னாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக் கப்பட்டது'. கொலோ 1:16. அன்பின் பிரமாணம்தான் தேவனுடைய அரசாங்கத்தின் அடிப்படை; நீதியின் நியதி களுக்குக் கீழ்ப்படிவதைச் சார்ந்துதான், சர்வசிருஷ்டிகளின் சந்தோஷ வாழ்வு இருந்தது. கட்டாயத்தொழுகையில் தேவனுக்கு விருப்பமில்லை; அனைவரும் மனவிருப்பத் தோடு தம்மைத் தொழும்படி, தேர்ந்தெடுக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்த ஒருவன் தீர்மானித்தான். கிறிஸ்துவிற்கு அடுத்ததாக தேவனிடம் அதிக மதிப்பு பெற்றிருந்த அவனில்தான் பாவம் உருவா னது. லூசிபர் எனும் அவன், தான் விழுந்துபோவதற்கு முன், பாதுகாக்கும் கேருபீன்களில் முதன்மையானவன்; பரிசுத்தமுள்ளவன்; குறையற்றவன். வேதாகமம் சொல் வதைப் பாருங்கள்: "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன் ; பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது. நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணுப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற் களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட் டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய். உன் அழகினால்

உன் இருதயம் மேட்டிமையாயிற்று. தேவனுடைய நட்சத் திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன் என்றும், வடபுறங்களிலுள்ள ஆராதனைக்கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன் என்றும், உன்னதமான வருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன் னாயே" என்கிறார் கர்த்தராகிய ஆண்டவர். எசேக்கியேல் 28:12-17; 28:6; ஏசாயா 14:13,14.

பிதா தமது குமாரனுக்கு அருளியிருந்த மதிப்பை சாத்தான் இச்சித்தான். கிறிஸ்துவுக்குமாத்திரமே உரிய அதிகாரத்தைப்பெற, தூதர்களின் தலைவனாகிய இவன் விரும்பினான். பரலோக ஐக்கியத்தில் விரிசல் ஏற்பட்டது. சுயத்தை முக்கியப்படுத்தியதால், இதுவரை தேவ மகிமை மாத்திரமே நிறைந்திருந்த உள்ளங்களில் தீமையான சல சலப்பு உண்டானது. பரலோகச் சங்கங்களில் இருந்தவர்கள் லூசிபரிடம் மன்றாடினார்கள்; சிருஷ்டிகரின் தயவையும் நியாயத்தையும் அவருடைய பிரமாணத்தின் பரிசுத்தத் தையும் லூசிபரிடம் தேவகுமாரன் எடுத்துக் கூறினார். தேவனுடைய பிரமாணத்திலிருந்து விலகுவதால், தன் சிருஷ்டிகருக்கு அவமதிப்பை உண்டாக்க இருந்தான் லூசிபர்; அப்படியே தனக்கு அழிவை ஏற்படுத்தவும் இருந் தான். ஆனால், எச்சரிப்பால் அவன் உள்ளத்தில் எதிர்ப்பு தான் வளர்ந்துகொண்டே போனது. கிறிஸ்துவின்மேல் இருந்த பொறாமை தன்னை வெல்ல அவன் அனுமதித்து விட்டான்.

அகந்தையால் லூசிபரின் அதிகாரவெறி வளர்ந்தது. அவனுக்கு மேலான கனத்தை தேவன் கொடுத்திருக்க, அதைக் கொடுத்த சிருஷ்டிகருக்கு அவன் நன்றிசொல்ல வில்லை. தேவனுக்குச் சமமாக மாற விரும்பினான். ஆனால் தேவகுமாரன்தான் பரலோகத்தின் அரசராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார்; பிதாவுக்குச் சரிநிகர் அதிகாரத்தை யும் வல்லமையையும் பெற்றிருந்தார். தேவனுடைய ஆலோசனை அனைத்திலும் கிறிஸ்துவும் பங்குவகித்தார். ஆனால், அவற்றில் பங்கெடுக்க லூசிபர் அனுமதிக்கப்பட வில்லை. "கிறிஸ்துவுக்கு ஏன் முதலிடம்? லூசிபருக்கு

மேலாக அவர் கனப்படுத்தப்படுவது ஏன்?" என்று கேள்வி எழுப்பினான் அந்த வல்லமையான தூதன்.

தூதர்கள் மத்தியில் அதிருப்தி

தேவனுடைய பிரசன்னத்திலிருந்து வெளியேறி, தூதர்கள்மத்தியில் அதிருப்தி ஏற்படுத்த வேலைசெய்தான் லூசிபர். தேவன்மேல் பக்தியுள்ளவன்போல் நடித்து, தன் உண்மையான நோக்கத்தை மறைத்து, பரலோக ஜீவிகளைக் கட்டுப்படுத்திய பிரமாணங்கள்மேல் அதிருப்தி ஏற்படுத்த இரகசியமாக முயன்றான்; "அவற்றில் தேவையற்ற கட்டுப்பாடுகள் உள்ளன" என்றான். தூதர்கள் பரிசுத்த தன்மை உடையவர்களாய் இருப்பதால், தங்கள் மனம் சொல்வதற்குத்தான் அவர்கள் கீழ்ப்படியவேண்டுமென்று தூதர்களிடம் வற்புறுத்தினான். கிறிஸ்துவுக்கு மிகுந்த கனத்தைக் கொடுத்ததன்மூலம் தேவன் தனக்கு அநியாயம் செய்துவிட்டதாகக் கூறினான். தன்னை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல, பரலோக ஜீவிகள் யாவரும் ஒரு மேம்பட்ட அனுபவத்தைப் பெறும்படி, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவே தான் போராடுவதாகப் பசப்பினான்.

லூசிபரிடம் தேவன் நீடியபொறுமையோடு இருந்தார். தூதர்களுக்குமுன் பொய்களை அவன் தூற்றி வந்தபோதிலும், அவனுடைய உயர்பதவியை அவர் பறித்துவிடவில்லை. மனந்திரும்பி, கீழ்ப்படிந்தால் மன்னிப்பு பெறலாம் என்று மீண்டும்மீண்டும் அவனுக்குத் தெரிவித்தார். அவனுடைய தவற்றை அவனுக்கு உணர்த்துவதற்குப் பிரயாசம் எடுத்தார். அளவற்ற அன்பு இருந்தால்மட்டுமே அப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டமுடியும். இதற்குமுன் பரலோகத்தில் அதிருப்தியே ஏற்பட்டதில்லை. தன்னில் ஏற்பட்ட அந்த உணர்வின் தன்மையை லூசிபர்கூட முதலில் புரிந்து கொள்ளவில்லை. தான் மனக்குறை அடைவதில் நியாயமில்லை என்று தெரிந்ததும், தேவனுடைய நியதிகள் நியாயமானவை என்று லூசிபர் உணர்ந்தான்; பரலோகத்திற்குமுன் அதை அவன் ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஒத்துக்கொண்டிருந்தால், தன்னையும் இன்னும் ஏராளமான தூதர்களையும் அவன் காப்பாற்றி

யிருக்கலாம். தேவனிடம் திரும்பிச் சென்று, தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணியைச் செய்வதில் மனநிறைவு அடைந்திருந்தால், அவனுடைய பதவியும் அவனுக்கே திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால், அடங்கிப் போவதை அவனுடைய பெருமை தடுத்தது. தான் மனந் திரும்ப அவசியமில்லையென்று சாதித்தான்; தன் சிருஷ்டி கரை எதிர்த்துப் போராட முழுவதுமாகக் களத்தில் குதிக்கத் தீர்மானித்தான்.

தூதர்களை வஞ்சிக்க, தன் கூர்மையான அறிவின் ஆற்றல்கள் அனைத்தையும் லூசிபர் செலவிட்டான்; தூதர் களுடைய அனுதாபத்தைப் பெறவிரும்பினான். தான் தவறாகக் கணிக்கப்பட்டிருப்பதாகவும் தன்னுடைய உரிமை பறிபோனதாகவும் லூசிபர் நாடகமாடினான். கிறிஸ்துவின் வார்த்தைகளை முன்பு திரித்துக்கூறியவன், இப்போது நேரடியாகவே பொய்பேசினான்; பரலோகக் குடிகளுக்கு முன் தன்னை இழிவுபடுத்த தேவகுமாரன் திட்டமிட்டுள்ள தாகக் கூறினான்.

தன் விருப்பத்திற்கு இணங்காதவர்களுக்கு, பரலோக ஜீவிகளின் நலனில் அக்கறை இல்லையென்று குற்றஞ் சாட்டினான். சிருஷ்டிகரைத் திரித்துக்காட்டினான். தேவ னுடைய நோக்கங்களை தந்திரமாகப் புரட்டிப்பேசி, தூதர் களைக் குழப்புவது அவனுடைய வேலையாகிப்போனது. எளிதானவைகளைப் புதிரானவைபோல் காட்டினான்; தேவன் தெளிவாகச் சொல்லியவற்றின்மேல், தன் வஞ்சனையான சொற்களால், சந்தேகத்தை ஏற்படுத்தி னான். அவன் உயர்பதவியில் இருந்ததால், அவனுடைய பேச்சுக்கு தூதர்களிடையே செல்வாக்கு இருந்தது. அவனு டைய கலகத்தில் தாங்களும் இணையும்படி, அநேகர் தூண்டப்பட்டார்கள்.

கலகமாக உருவெடுத்த அதிருப்தி

அதிருப்தியுள்ள மனநிலை கலகமாக வெளிப்படும் மட்டும், தேவன் தம் ஞானத்தால், சாத்தானின் செயல்களை அனுமதித்தார். சாத்தானின் திட்டங்கள் நிறைவேறி, அவற்றின் மெய்யான நோக்கத்தை அனைவரும் காண,

அது அவசியமாக இருந்தது. பரலோக ஜீவிகள் லூசிபரை மிகவும் நேசித்தார்கள்; லூசிபரின் செல்வாக்கு பெரியதாய் இருந்தது. பரலோகக்குடிகள் மாத்திரமல்ல, இன்னும் பல உலகத்தினரும் தேவனுடைய ஆளுகையில் இருந்தனர்; தன்னோடு தூதர்களைக் கலகத்தில் ஈடுபடுத்திவிட்டால், மற்ற உலகத்தினரையும் அதில் பங்குபெற வைத்துவிடலா மென்று அவன் நினைத்தான். ஏமாற்றி, நயவஞ்சகமாகச் செயல்பட்டான். அவனுடைய ஏமாற்றுத்திறமை பலத்ததாக இருந்தது. அவன் குணத்தையும், அவனுடைய செய்கை எதில் போய் முடியுமென்பதையும் மெய்ப்பற்றுமிக்க தூதர் களால்கூட பகுத்தறிய முடியவில்லை.

சாத்தான் மிகுந்த கனம்பெற்றிருந்தவன்; அவனு டைய செய்கைகள் மர்மம் நிறைந்தவையாய் இருந்தன; அவற்றின் தன்மைகளை தூதர்களுக்கு அடையாளங்காட்டு வது கடினமாக இருந்தது. பாவம் முதிர்ச்சியடையாத நிலையில், அது எவ்வளவு தீமையானதென்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. தேவனுடைய பிரமாணங்களைப் புறக்கணித்தால் என்ன ஆகுமென்பதை தேவதூதர்களால் பகுத்தறிய முடியவில்லை. தேவனுக்குக் கனத்தை உண்டு பண்ணுவதாகவும் பரலோகவாசிகள் நலனுக்காகப் பாடுபடு வதாகவும் சாத்தான் முதலில் கூறினான்.

பாவப் பிரச்சனையைத் தீர்க்க, நீதியையும் உண்மை யையும்மாத்திரமே தேவன் பயன்படுத்தமுடியும். சாத் தான் பசப்பையும் வஞ்சனையையும் பயன்படுத்துவது போல, தேவன் பயன்படுத்தமுடியாது. அநியாயக்காரனின் உண்மையான குணத்தை அனைவரும் கண்டுகொள்ள வேண்டியிருந்தது. தான் யாரென்று தன் பாவச்செயல்கள் மூலம் சாத்தான் தன்னை வெளிப்படுத்தும்வரை எல்லோ ரும் காத்திருக்க வேண்டியிருந்தது.

தன்னுடைய போக்கினால் பரலோகத்தில் பிளவை ஏற்படுத்திவிட்டு, அதற்கும் தேவன்மேல் குற்றஞ்சுமத்தி னான் சாத்தான். தேவனுடைய நிர்வாகக்குறைபாட்டால் தான் தீமை விளைந்ததென்றான். அப்படியானால், தேவ னுடைய பிரமாணங்களில் என்ன மாற்றங்கள் செய்ய

வேண்டுமென்பதை அவன்தான் செல்படுத்திக் காட்ட வேண்டும். ஆனால், அவனுடைய கிரியைகளே அவன் குற்றவாளியென்று தீர்க்க இருந்தன. சர்வலோகத்திற்கும் முன்பாக இந்த வஞ்சகனின் முகத்திரை கிழிய இருந்தது.

பரலோகத்தில் இனி அவனை வைத்திருக்கமுடியாதென்று தீர்மானித்தவுடன், சர்வஞானியானவர் அழித்துவிடவில்லை. தாம் நியாயமுள்ளவரென்பதை சிருஷ்டிகள் உணர்ந்து, தம்மைத் தொழுதுகொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினார். பரலோகவாசிகளும், பிற உலகவாசிகளும் இதற்குமுன் பாவத்தின் விளைவுகளைக் கண்டதில்லை; சாத்தானை தேவன் அழித்திருந்தால், தேவனுடைய நியாயமும் இரக்கமும் அவர்களுக்குப் புரிந்திருக்காது. உடனடியாக, சாத்தானை அழித்திருந்தால், தேவனை அன்பினால் சேவிக்காமல், பயத்தால் சேவித்திருப்பார்கள்; வஞ்சகனின் செல்வாக்கை முற்றிலும் அகற்றமுடியாமல் போயிருக்கும். கலக ஆவியை துப்புரவாக விலக்கமுடியாமல் போயிருக்கும்; நித்திய காலமும் சர்வலோகங்கள் நலமோடு இருக்க, சாத்தானின் தன்மை வெளிப்பட்டு, தேவனுடைய ஆளுகைக்கு எதிரான அவனுடைய குற்றச்சாட்டுகளின் உண்மையான காரணங்கள் சர்வ சிருஷ்டிகளுக்கும் வெட்டவெளிச்சமாகத் தெரியவேண்டும்.

பாவத்தின் மோசமான விளைவுகளை அண்டசராசத்திற்கும் காட்டும் சாட்சியாக சாத்தானின் கலகம் மாற இருந்தது. தேவனுடைய அதிகாரத்தைப் புறக்கணித்து, அவன் ஆட்சிசெய்தால், என்ன நேரிடுமென்பது புலப்பட இருந்தது. பாவம், அதற்கான தண்டனை ஆகியவற்றிலிருந்து சகல பரிசுத்த ஜீவிகளுக்கும் நித்தியப் பாதுகாப்பு இருக்கும்படி, அந்தக் கலகப் பரிசோதனையை தேவன் அனுமதித்தார்.

அந்த மகா ஆக்கிரமிப்புக்காரனும் அவனுடைய சகல அனுதாபிகளும் பேரின்ப நகரிலிருந்து வெளியேற்றப்பட உத்தரவு பிறந்தபோது, சிருஷ்டிகரின் பிரமாணங்கள் தனக்குப் பிடிக்காதென்பதை அவன் வெளிப்படையாக ஒத்துக் கொண்டான். தேவனுடைய பிரமாணங்கள் தங்கள்

சுதந்தரத்தைப் பறிப்பதாகவும், தேவனுடைய பிரமாணங்களை ஒழிப்பதே தன் இலட்சியமென்றும் உறுதியாகக் கூறினான்; அந்தக் கட்டுப்பாடு இல்லையென்றால், பரலோகச் சேனைகள் இன்னும் மேம்பட்ட அனுபவத்தைப் பெறலாமென்றான்.

பரலோகத்திலிருந்து தள்ளப்படுதல்

தங்கள் கலகத்திற்கு கிறிஸ்துதான் காரணரென்று சாத்தானும் அவனுடைய கூட்டத்தாரும் குற்றஞ்சாட்டினார்கள்; தங்களைக் கண்டித்திருக்காவிட்டால் தாங்கள் கலகம்செய்திருக்க வாய்ப்பில்லை என்றார்கள். அவர்கள் மனது கடினப்பட்டது. ஒன்றுமறியாத தாங்கள் அநியாயமாக அடக்கப்படுவதாக தேவனைத் தூஷித்த அந்தக் கலகக்காரத் தலைவனும் அவனுடைய ஆதரவாளர்களும் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டார்கள். வெளி 12:7-9.

பூமியில் உள்ள கீழ்ப்படியாமையின் பிள்ளைகளில் சாத்தானின் ஆவி இன்றும் கலகத்தைத் தூண்டிவருகிறது. தேவ பிரமாணத்தை மீறுவதால் விடுதலைகிடைப்பதாக அவனைப்போல இவர்களும் அறிவிக்கிறார்கள். இன்றும் பாவத்தைக் கண்டித்தால் வெறுப்பைத்தான் சந்திக்க நேரிடுகிறது. மனிதர் தங்கள் குற்றத்தை நியாயப்படுத்துமாறும், அதற்கு மற்றவர்களின் அனுதாபத்தைப் பெறுமாறும் தூண்டுகிறான் சாத்தான். இவர்கள் தங்கள் தவறுகளிலிருந்து மனந்திரும்புவதற்குப் பதிலாக, தங்கள் குற்றத்தைக் கண்டிப்பவர்தாம் தங்கள் கஷ்டத்திற்குக் காரணர்போல், அவர்மேல் கோபங்கொள்கிறார்கள்.

பரலோகத்தில் தேவகுணத்தைப்பற்றி தவறாகப் பேசி, அவரை கடினமான கொடுங்கோலராகக் காட்டியது போல், இங்கேயும் காட்டி, மனிதரைப் பாவஞ்செய்யத் தூண்டுகிறான். நியாயமற்ற தேவனுடைய கட்டுப்பாடுகள் தாம் மனிதனை விழச்செய்வதாகவும், தன் கலகத்திற்கும் அவைதான் காரணம் என்றும் ஏமாற்றுகிறான்.

சாத்தானைப் பரலோகத்திலிருந்து துரத்தியதில், தேவன் தம் நியாயத்தையும் மதிப்பையும் விளங்கச்செய்தார். ஆனால், மனிதன் பாவம்செய்தபோதோ, விழுந்து

போன இனத்தை மீட்க, தம் குமாரனையே பலியாகக் கொடுத்து, தம் அன்பை விளங்கச்செய்தார். பாவநிவாரண மாக அவர் பலியானபோது, தேவ குணம் வெளிப்பட்டது. பாவம் எவ்விதத்திலும் தேவ ஆளுகைமேல் குற்றஞ்சுமத்த முடியாது என்பதற்குச் சிலுவை பலத்தசாட்சியாக உள்ளது. இரட்சகரின் பூலோக ஊழியத்தின்போது, அந்த மகா வஞ்சகனின் முகத்திரை கிழிந்தது. கிறிஸ்து தன்னைத் தொழவேண்டுமென்று அவன் தூஷணம்பேசியதும், இரட்சகர் சென்ற இடங்களிளெல்லாம் அவரை அவமதித்த தும், அவருடைய அன்பை மறுதலிக்கும்படி மக்களையும் ஆசாரியர்களையும் அவன் தூண்டியதும், 'சிலுவையில் அறையுங்கள்! அவனைச் சிலுவையில் அறையுங்கள் !!' என்று கூக்குரலிட வைத்ததும் சர்வலோகத்தையும் திகைக்க வைத்தன; கோபமடையச் செய்தன. இயேசுவை அழிக் கும்படி, அந்தகாரப் பிரபு தன் சகல வல்லமையையும் தந்திரத்தையும் உபயோகித்தான். இரட்சகரின் வாழ்வில் இக்கட்டையும் துன்பத்தையும் நிறைக்கும்படி, மனிதர்களை தன் முகவர்களாகப் பயன்படுத்தினான். தேவகுமாரனுக்கு விரோதமாக அவன் அடக்கிவைத்திருந்த பொறாமையும் வெறுப்பும் பகையும் குரோதமும் கல்வாரியில் வெடித்துச் சிதறின.

இப்போது, சாத்தானின் குற்றம் தெள்ளத்தெளிவாக விளங்கியது. தன் உண்மையான குணத்தை அவன் காட்டி விட்டான். தேவனுடைய குணம்பற்றி சாத்தான் சொன்ன பொய்க்குற்றச்சாட்டுகளின் உண்மையான நோக்கம் தெரிந்துவிட்டது. தம் சிருஷ்டிகள் தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று சொல்லுவதால், தேவன் தமக்குப் புகழ்ச்சியை விரும்புகிறாரென்றும், அதேநேரம் சுயத்தை மறுக்குமாறு மற்றவர்களைக் கட்டாயப்படுத்துவது அநியாயம் என்றும், அவரிடம் சுயமறுப்போ தியாகமோ இல்லையென்றும் சாத்தான் குற்றஞ்சாட்டினான். ஆனால், அன்பு எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்யமுடியுமோ அவ்வளவு பெரிய தியாகத்தை சர்வலோக அரசர் செய்து விட்டார். தேவன் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்! 2கொரி 5:19. பாவத்தை அழிக்கும்படி,

கிறிஸ்துதாமே தம்மைத் தாழ்த்தினார்; மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார்.

மனிதனுக்கு ஆதரவான வாதம்

தேவனுடைய நியாயம் வெளிப்பட்டதை பரலோகம் முழுவதும் கண்டது. விழுந்துபோன மனிதர்கள் மீட்கப் படக்கூடாதவர்களென்று லூசிபர் வாதிட்டான். ஆனால், நியாயப்பிரமாணத்தின் தண்டனையானது, தேவனுக்குச் சமமான இயேசுவின்மேல் விழுந்தது; கிறிஸ்துவின் நீதியை ஏற்றுக்கொள்ளவும், தாழ்மையோடு மனந்திரும்பி சாத்தானை வெற்றிகொள்ளவும் வழிபிறந்தது.

மனிதனை மீட்பதற்காகமாத்திரம் அல்ல; தேவனுடைய பிரமாணம் மாறாதது என்பதை சர்வலோகத்திற்கும் எடுத்துரைக்கவும்தான் கிறிஸ்து இப்பூமிக்கு வந்து மரித்தார். பிரமாணம் மாறாதது என்பதை கிறிஸ்துவின் மரணம்தான் உறுதிப்படுத்தியது; நியாயமும் இரக்கமும் தேவனுடைய அரசாங்கத்தின் அஸ்திபாரங்கள் என்பதை கிறிஸ்துவின் மரணம் எடுத்துரைத்தது. பாவத்திற்கான காரணம் எதுவும் இறுதி நியாயத்தீர்ப்பில் எடுபடாது. சர்வலோகத்தின் நீதிபரர், "எனக்கு எதிராக நீ கலகம்செய்தது ஏன்?" என்று சாத்தானைப் பார்த்து கேட்கும்போது, தீமையின் காரணனான அவன் பதிலேதும் சொல்லமுடியாது.

'எல்லாம் முடிந்தது' என்று இரட்சகர் இறுதியில் முழங்கினபோது, சாத்தானுக்குச் சாவுமணி அடித்தாயிற்று. நீண்ட யுகங்களாக நடைபெற்றுவரும் [1]**மாபெரும் போராட்டத்தின் முடிவு** அப்போது தீர்மானிக்கப்பட்டுவிட்டது; பாவம் இறுதியில் சுவடே இல்லாமல் அழிக்கப்படுமென்பது உறுதியாகிவிட்டது. "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப் போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்

---

[1] தேவனுடைய குணம், நியாயம், பிரமாணம் ஆகியவைபற்றி கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கிற போராட்டமே **மாபெரும் போராட்டம்**.

போகும்'' என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். மல்கியா 4:1.

இனி தீமை ஒருபோதும் எழும்பாது; தேவனுடைய பிரமாணம் விடுதலையின் பிரமாணமாகப் போற்றப்படும். சோதிக்கப்பட்டு ஜெயம்பெற்ற மனிதர்கள், 'தேவன் அறிவுக்கெட்டா அன்பும் அளவற்ற ஞானமும் உடையவர்' என்று தேவனை அறிந்துகொள்வதால், இனி அவரைத் தொழுவதிலிருந்து ஒருபோதும் பிறழமாட்டார்கள்.

அதிகாரம் 2

பாவத்தை ஜெயிப்பதற்கான நம்பிக்கை

'உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்.' ஆதி 3:15. இந்தப் பகை இயல்பிலேயே நமக்குள் இருப்பது அல்ல; தேவ கட்டளையை மனிதன் மீறினபோது, அவனுடைய இயல்பு மோசமாகி, சாத்தானோடு இசைந்துகொண்டது. விழுந்துபோன தூதர்களும், துன்மார்க்க மனிதர்களும் ஒரு மோசமான கூட்டணி அமைத்திருக்கிறார்கள். தேவன் தலையிட்டிராவிட்டால், சாத்தானும் மனிதனும் சேர்ந்து, பரலோகத்திற்கு எதிராக அணிதிரட்டியிருப்பார்கள்; மனித குடும்பம் முழுவதுமே தேவனுக்கு எதிராக ஒன்றுசேர்ந்திருக்கும்.

தனக்கும் ஸ்திரீக்கும், தன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகை உண்டாகுமென்று சாத்தான் கேள்விப்பட்டதுமே, தன்னுடைய வல்லமையை எதிர்க்க மனிதனுக்கு வழிபிறந்துவிட்டதென்பதை அவன் கண்டுகொண்டான்.

கிறிஸ்துவின் கிருபை

கிறிஸ்து மனிதனில் சாத்தானுக்கு எதிரான பகையை ஏற்படுத்துகிறார். மனதை மாற்றும் இந்தக் கிருபையும் புதுப்பிக்கும் இந்த வல்லமையும் இல்லாவிட்டால், சாத்தானின் பேச்சைக்கேட்க எப்போதும் ஆயத்தமாயிருக்கும் ஓர் அடிமையாக, மனிதனின் நிலை தொடர்ந்திருக்கும்.

ஆனால், ஆத்துமாவுக்குள் புகுத்தப்பட்ட புது நியதி, போராட்டத்தை உருவாக்குகிறது. கிறிஸ்து கொடுக்கும் வல்லமை, சாத்தானை எதிர்க்க மனிதனைப் பெலப்படுத்துகிறது. பாவத்தை நேசிக்காமல் அருவருப்பது, முற்றிலும் பரலோகத்திற்குரிய நியதியின் வெளிப்பாடாகும்.

இயேசுவை இவ்வுலகம் வரவேற்றவிதத்தில், கிறிஸ்துமேல் சாத்தானுக்கு இருக்கிற பகைமை தெளிவாக வெளிப்பட்டது. கிறிஸ்துவின் தூய்மையையும் பரிசுத்தத்தையும் பார்த்த துன்மார்க்கர் அவரைப் பகைத்தார்கள். மக்களின் பெருமையையும் இச்சையையும் அவருடைய சுயமறுப்பு பாரபட்சமின்றி கண்டித்தது. சத்தியத்தின் அரசருக்கு எதிராக சாத்தானும் தீய தூதர்களும் துன்மார்க்கரும் கைகோர்த்தார்கள். கிறிஸ்துவின் பின்னடியார்களிடமும் அதேவிதமான பகைமையைக் காட்டினார்கள். பாவத் தூண்டல்களுக்கு எதிர்த்துநிற்கும் எவர்மேலும் சாத்தான் கடுங்கோபங்கொள்வான். கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் சிறிதும் ஒத்துப்போகமுடியாது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்." 2தீமோ 3:12.

கிறிஸ்துவின் பிள்ளைகளை வஞ்சித்து, அவர்களின் மெய்ப்பற்றைக் கெடுக்க, சாத்தானின் கையாட்கள் தீவிரமாக முயல்கிறார்கள். அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற வேதத்தைப் புரட்டிப்பேசுகிறார்கள். துன்மார்க்கர் என்ன ஆவியோடு கிறிஸ்துவைக் கொன்றார்களோ, அதே ஆவியால் அவர் பிள்ளைகளையும் கொல்லப் பார்க்கிறார்கள். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்" எனும் முதல் தீர்க்கதரிசனத்திலேயே இது முன்னுரைக்கப்பட்டுள்ளது. ஆதி 3:15.

இன்று தடையேதுமின்றி சாத்தான் செயல்படுவது எவ்வாறு? கிறிஸ்துவோடு கிறிஸ்துவின் வீரர்களுக்கு உண்மையான உறவு இல்லாததுதான் காரணம். தங்கள் எஜமான் பாவத்தை வெறுப்பதுபோல் இவர்கள் வெறுப்பது இல்லை. அந்தகாரப்பிரபுவின் குணத்தைக் காணக்கூடாத குருடராக இருக்கிறார்கள். கிறிஸ்துவை எதிர்த்துப் போரிடுகிற ஒருவன்தான் தங்களுக்கும் சத்துரு என்பதை

அநேகர் அறியவில்லை. நற்செய்தியைப் பிரசங்கிப்பவர்கள்கூட அவனுடைய கிரியைகளின் விளைவுகளைக் கண்டுகொள்வதில்லை. அவன் இருப்பதைக்கூட அவர்கள் முற்றிலும் அலட்சியம்பண்ணுகிறார்கள்.

விழிப்புள்ள எதிரி

விழிப்புள்ள இந்த எதிரி ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு சபையிலும் ஒவ்வொரு சட்டசபையிலும் புகுந்து, குழப்பம்பண்ணி, வஞ்சித்து, ஏமாற்றி, எங்குமுள்ள ஆண்-பெண்-சிறுவர்களின் ஆத்துமாக்களையும் சரீரங்களையும் அழிக்கிறான். பகையும் சண்டையும் துரோகமும் கொலையும் விதைத்து, குடும்பங்களைப் பிரிக்கிறான். பின்பு, இவை அனைத்தையும் தேவன்தாம் நியமித்ததுபோலவும், இவை இருக்கத்தான் செய்யுமென்றும் உலகம் நினைத்துவிடுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்ற உறுதியாகத் தீர்மானிக்காத யாவரும் சாத்தானின் சீடர்கள். துன்மார்க்கரோடு தொடர்புவைத்துக்கொள்கிற கிறிஸ்தவர்கள் பாவத்தூண்டல்களுக்கு இடங்கொடுக்கிறார்கள். அவர்கள் தன்னை அடையாளம் கண்டுவிடாதபடி, சாத்தான் மாயத்திரை போட்டு அவர்களுடைய கண்களை மறைக்கிறான்.

உலகப் பழக்கங்களுக்கு ஒத்துப்போனால், உலகத்திற்கு ஒத்ததாக சபை மாறுமே தவிர, கிறிஸ்துவை உலகம் ஏற்றுக்கொள்ளாது. பாவம் பழகிப்போனால், அதன்மேல் வெறுப்பு வராது. நாம் நம் கடமையைச் செய்துவரும் நிலையில், நமக்குச் சோதனை ஏற்பட்டால், தேவன் நம்மைப் பாதுகாப்பது நிச்சயம்; ஆனால், பாவத்தூண்டலுக்கு நம்மையே நாம் ஆளாக்கினால், இன்றோ நாளையோ நாம் வீழ்வது நிச்சயம்.

சாத்தானுக்கு அடிமைப்பட்டிருந்தும் அதை உணராமல் இருப்போர் மூலமாகவே சோதனைக்காரன் வெற்றிகரமாகக் கிரியைசெய்கிறான். தாலந்தும் பண்பாடும் தேவன் தரும் ஈவுகள். ஆனால், தேவனிடமிருந்து ஒருவனை இவை விலக்குமானால், இவையே கண்ணிகளாகிவிடும். பண்பட்ட அறிவும் இனிய சுபாவங்களுமுடைய மனிதர்

பலர், சாத்தானின் பளபள ஆயுதங்களாக விளங்குகிறார்கள்.

அன்றுமுதல் இன்றுவரை காலாகாலமாகத் தொனிக்கிற தேவனுடைய எச்சரிப்பின் தொனியை ஒருபோதும் மறவாதிருங்கள். 'தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்'. 1பேதுரு 5:8; எபே 6:11. நம்முடைய மகா சத்துரு கடைசி யுத்தத்திற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான். இயேசுவைப் பின்பற்றும் யாவரும் இந்த எதிரியோடு போராடியே ஆகவேண்டும். கிறிஸ்துவின் முன்மாதிரியை எந்த அளவுக்கு ஒரு கிறிஸ்தவன் பின்பற்றுகிறானோ, அந்த அளவுக்கு சாத்தானின் தாக்குதல்களுக்கு இலக்காகிறான்.

பயங்கரமும் தந்திரமுமான சோதனைகளால் கிறிஸ்துவைத் தாக்கினான் சாத்தான்; ஆனால் ஒவ்வொரு முறையும் அவன் தோற்றுப்போனான். கிறிஸ்துவின் வெற்றியால் நாம் வெற்றிபெறுவதற்கான வழி உருவாகியுள்ளது. அந்த வெற்றியை நாடும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து பெலனளிப்பார். ஒருவனுடைய சம்மதம் இல்லாமல் அவனை சாத்தான் வெல்லமுடியாது. சுயசித்தத்தைக் கட்டுப்படுத்தவோ, பாவம்செய்யும்படி ஆத்துமாவைக் கட்டாயப்படுத்தவோ சாத்தானுக்கு அதிகாரம் கிடையாது. அவன் நமக்கு இக்கட்டை ஏற்படுத்தலாம்; ஆனால், நம்மைத் தீட்டுப்படுத்தமுடியாது. 'கிறிஸ்து வெற்றிசிறந்தார்' எனும் உண்மையானது, பாவத்திற்கும் சாத்தானுக்கும் எதிராகப் போராட அவர் அடியார்களை ஊக்கப்படுத்தவேண்டும்.

தேவ தூதர்களின் ஊழியச்சேவை

தேவதூதர்களையும் தீயஆவிகளையும்பற்றி வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது; மனிதர்களோடு அவர்களுக்கு நெருக்கமான தொடர்பு உள்ளது. 'இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்'

தேவதூதர்கள் எல்லோரும் மரித்தோரின் ஆவிகளென பலர் நினைக்கிறார்கள். எபி 1:14. ஆனால், இவர்கள் மரித்தவர் களிலிருந்து எழும்பிவரும் ஆவிகளல்லர் என்பதற்கு வேதா கமத்தில் ஆதாரம் இருக்கிறது.

மனிதன் சிருஷ்டிக்கப்படும் முன்னரே தேவதூதர்கள் இருந்தார்கள். இதைப்பற்றி, 'பூமியின் அஸ்திபாரங்கள் போடப்பட்டபோது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏக மாய்ப் பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள்' என்கிறது யோபு 38:7. மனிதன் விழுந்துபோனபிறகு, இன்னும் மனிதன் மரணத்தை ருசிபார்த்திராத நிலையில், ஜீவவிருட்சத்தைக் காவல்காக்க தூதர்கள் அனுப்பட்டார்கள். மனிதர்களைவிட மேலானவர்கள் தூதர்கள்; ஏனெனில், மனிதன், 'தேவதூதரிலும் சிறியவன்'. சங் 8:5.

"சிங்காசனத்தைச் சூழ்ந்திருந்த அநேக தூதர்களு டைய சத்தத்தைக் கேட்டேன்" என்கிறார் ஒரு தீர்க்கதரிசி. இராஜாதி இராஜாவுக்குப் பிரியமானதைச் செய்ய, அவர் பணிவிடைக்காரராய் அவருடைய சமுகத்தில் நின்றார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கும் ஆயிரம் பதினாயிரமான பேர்கள். வெளி 5:11; சங் 103:20,21; எபி 12:22. தேவனுடைய தூதுவர்களான அவர்கள் மின்னலின் தோற்றம்போல் பறந்துசெல்கிறார்கள். இரட்சகரின் கல்லறையருகில் தோன்றின தூதனுடைய முகம் 'மின்னல் போல்' இருந்தது; காவலர்கள் அவனுக்குப் பயந்து திடுக் கிட்டு, செத்தவர்கள்போல் விழுந்தார்கள். சனகெரிப் ராஜா தேவனைத் தூஷித்து, இஸ்ரவேலை மிரட்டியபோது, 'கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்'. எசே 1:14; மத் 28:3,4; 2 இராஜா 19:35.

தேவனுடைய பிள்ளைகளுக்குக் கிருபையின் ஊழி யங்களைச் செய்ய தூதர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஆபிர காமுக்கு ஆசீர்வாத வாக்குத்தத்தங்களைக் கொண்டுவந் தார்கள்; லோத்தை சோதோமின் அழிவிலிருந்து காப்பாற்றி னார்கள்; எலியாவை வனாந்தரத்தில் மரித்துப்போகாமல் காப்பாற்றினார்கள்; எலிசாவை எதிரிகள் சூழ்ந்துகொண்ட

போது, அக்கினிமயமான இரதங்களாலும் குதிரைகளாலும் காப்பாற்றினார்கள். சிங்கங்களுக்கு இரையாகாமல் தானியேலைக் காப்பாற்றினார்கள்; ஏரோதின் நிலவறையில் மரித்துப்போகாமல் பேதுருவைக் காப்பாற்றினார்கள்; கடலில் இரவுநேரப் புயல்காற்றிலிருந்து பவுலைக் காப்பாற்றினார்கள்; கொர்நேலியுவுக்கு நற்செய்தியை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் உண்டாக்கினார்கள்; அறிமுகமில்லாத ஒரு புறஜாதியானுக்கு நற்செய்தி அறிவிக்கும்படி பேதுருவிடம் கூறினார்கள். இப்படியாக, பரிசுத்த தூதர்கள் தேவ மக்களுக்குப் பணிவிடை செய்திருக்கிறார்கள்.

காவல் தூதர்கள்

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் ஒரு காவல் தூதன் நியமிக்கப்பட்டிருக்கிறான். 'கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.' தம்மை விசுவாசிப்பவர்களைக் குறித்துச் சொன்னபோது, 'அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்' என்றார் இரட்சகர். சங் 34:7; மத் 18:10. அந்தகாரப் பிரபுவின் ஓயாத இன்னல்களுக்கு ஆளாகும் தேவபிள்ளைகளுக்கு, காவல்தூதர்களின் ஓயாத பாதுகாப்பும் உண்டு. எண்ணிலடங்காத, தீவிரமான, சற்றும் அயராத தீயதூதர்களின் கூட்டத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியதிருப்பதால், அத்தகைய நிச்சயம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தீய தூதர்கள் தேவதிட்டங்களுக்கு எதிராளிகள்

இப்போது தீய ஆவிகளாய் இருப்போர் முதலில் சிருஷ்டிக்கப்பட்டபோது பாவமற்றவர்களாகத்தான் இருந்தார்கள்; இப்போது தேவனுடைய தூதுவர்களாக இருக்கும் பரிசுத்த ஜீவிகளுக்கு ஒத்த இயல்பையும் வல்லமையும் மகிமையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் பாவஞ்செய்து விழுந்தபிறகு, தேவனை அவமதிக்கவும் மனிதனை அழிக்கவும் அவர்கள் கூட்டுச்சேர்ந்திருக்கிறார்கள். சாத்தானுடைய கலகத்தில் இணைந்து, தேவனுடைய அரசாங்கத்திற்கு எதிராக ஒரே நோக்கத்தோடு போராடுகிறார்கள்.

தீய ஆவிகள் இருப்பதை பழைய ஏற்பாட்டு வரலாறு குறிப்பிடுகிறது; ஆனால், கிறிஸ்து இப்பூமியில் இருந்த போது, தீய ஆவிகள் தங்கள் வல்லமையை குறிப்பிடத்தக்க விதத்தில் வெளிப்படுத்தின. மனிதனை மீட்க கிறிஸ்து இப் பூமிக்கு வந்தார்; ஆனால், இவ்வுலகத்தை தன் கட்டுப்பாட் டிற்குக் கொண்டுவர சாத்தான் உறுதியாக இருந்தான். பாலஸ்தீனா தவிர பூமியின் மற்ற இடங்களில் சிலைவழி பாட்டை ஏற்படுத்துவதில் அவன் வெற்றியும் பெற்றிருந் தான். முற்றிலும் சோதனைக்காரனின் வசமாகாதிருந்த அந்தத் தேசத்திற்கு கிறிஸ்து வந்தார்; அங்கு தம் அன்பின் கரங்களை நீட்டினார்; பாவமன்னிப்பையும் சமாதானத்தை யும் தம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படி அழைத்தார். கிறிஸ்துவின் ஊழியம் வெற்றியடைந்தால், தங்களுடைய ஆட்சிக்கு சீக்கிரமே முடிவுகட்டப்படுமென்பதை இருளின் சேனைகள் புரிந்துகொண்டன.

கதரேனர் நாட்டின் இருவர் அசுத்த ஆவிகளால் பீடிக் கப்பட்டிருந்ததுபற்றி புதிய ஏற்பாடு சொல்கிறது. அவ் வாறு உபாதிக்கப்பட்டவர்கள் இயற்கையாகவே உண்டா கும் நோயால்மாத்திரம் பாதிக்கப்படவில்லை; தீய ஆவிகள் நேரடியாகவே அந்த மனிதர்களை ஆக்கிரமித்து, கிரியை செய்ததை இயேசு அறிந்தார். அதோகதியில், இழிவான நிலையில் இருந்த அந்த மனிதர், வலியால் துடித்து, நுரை தள்ளி, மூர்க்கங்கொண்டு, தங்களையே புண்படுத்திக் கொண்டார்கள்; தங்களண்டை வருவோருக்கு அச்சுறுத்த லாகவும் விளங்கினார்கள். குருதிவடிந்து, அலங்கோல மாய் இருந்த அவர்களின் சரீரங்களும், பித்துப்பிடித்த நிலையும், அந்தகார அதிபதிக்கு ரசனைமிக்கதாக விளங்கி யது. அவர்களை ஆக்கிரமித்திருந்த அசுத்த ஆவிகளில் ஒன்று, "நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பெயர் லேகியோன்" என்றது. மாற்கு 5:9. ரோமருடைய படை யில் லேகியோன் எனப்படும் பிரிவு ஒவ்வொன்றிலும் மூவா யிரத்திலிருந்து ஐயாயிரம்வரை வீரர்கள் இருப்பார்கள். இயேசு கட்டளையிட்டதும் அசுத்த ஆவிகள் அந்த மனிதர் களைவிட்டு ஓடின; அவர்கள் பணிவானவர்களும் சுய அறிவு உள்ளவர்களும் தாழ்மையானவர்களுமாக மாறி

னார்கள். ஆனால், அந்த அசுத்த ஆவிகள் ஒரு பன்றிக் கூட்டத்தையே கடலுக்குள் தள்ளிவிட்டன; கிறிஸ்து செய்த இந்த மாபெரும் அற்புதத்தைவிட, தங்களுக்கு ஏற்பட்ட இழப்பைத்தான், கதரேனர் பெரிதுபடுத்தி, அங்கிருந்து சென்று விடும்படி இயேசுவிடம் கூறினார்கள். மத் 8:23-24. அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு இயேசுவைக் காரணம் காட்டி, சுயநல பயத்தை அவர்களுக்குள் சாத்தான் உரு வாக்கினான்; அதன்மூலம் அவர்கள் இயேசுவின் வார்த்தை களுக்குச் செவிகொடுக்காதபடி செய்தான்.

பன்றிக்கூட்டத்தை அழிப்பதற்கு தீய ஆவிகளை கிறிஸ்து அனுமதித்தார்; ஆதாயத்திற்காக அசுத்தமான மிரு கங்களை வளர்த்த யூதர்களை இதன்மூலம் கண்டித்தார். அசுத்த ஆவிகளைக் கிறிஸ்து கட்டுப்படுத்தியிராவிடில், பன்றிகளை மட்டுமல்ல, மேய்ப்பர்களையும் உரிமையாளர் களையும்கூட அவை கடலுக்குள் ஆழ்த்தியிருக்கும்.

மனிதரையும் மிருகங்களையும் சாத்தான் கொடுமை யாக ஆட்டிப்படைப்பதை சீடர்கள் அறிவதற்காகவும், சாத் தானின் கண்ணிகளால் வஞ்சிக்கப்படாதிருக்கவும் கிறிஸ்து அந்நிகழ்ச்சியை அனுமதித்தார். சாத்தானின் கட்டுகளை உடைத்து, அவன் கட்டுப்பாட்டில் இருப்போரை விடுவிக்க தமக்கு வல்லமை உண்டென்பதை அந்நிகழ்ச்சிமூலம் மக்கள் கண்டுகொள்ள வேண்டுமென்றும் கிறிஸ்து விரும்பினார். இயேசு அங்கிருந்து புறப்பட்டார்; சுகம்பெற்றவர்களோ, தங்களுக்கு இரக்கங்காட்டிய தர்மதுரையின் கிருபையைச் சாட்சியாய் அறிவிக்க அங்கேயே இருந்தார்கள்.

இதுபோன்ற வேறு சம்பவங்களையும் வேதாகமத் தில் காணலாம்: சீரோபேனிக்கியாவைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ யின் மகளைப் பிடித்திருந்த அசுத்த ஆவியை இயேசு தமது வார்த்தையால் துரத்தினார். மாற்கு 7:25-30. இன்னொரு வாலிபனை பிடித்திருந்த ஆவி அவனைக் 'கொல்லும் படிக்கு, அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று'. மாற்கு 9:17-27. அவனை இரட்சகர் குணமாக்கினார். கப்பர் நகூமில் அசுத்த ஆவி பிடித்திருந்த இன்னொருவன், ஓய்வு நாளின் அமைதியைக் கெடுக்கும்படி சத்தமிட்டுக்கொண் டிருந்தான். லூக்கா 4:33-36. அவனை இரட்சகர் குணப்படுத்

தினார். அந்த அசுத்தஆவிகளை அறிவுபடைத்த ஜீவிகளாகக் கருதி, அவை மனிதரை வாதிப்பதைவிட்டு ஓடும்படி இயேசு கட்டளையிட்டதை ஒவ்வொரு சம்பவத்திலும் காணலாம். கப்பர்நகூமின் ஆலயத்தில்இருந்த 'எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப்போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.' லூக்கா 4:36.

அமானுஷ்ய வல்லமையைப் பெறவிரும்புகிற சிலர், சாத்தானின் ஆதிக்கத்தை விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பிசாசுகளோடு ஒத்துப்போகிறார்கள். மாயவித்தைக்காரரான சீமோன், எலிமா ஆகியோரும் பிலிப்பியில் பவுலையும் சீலாவையும் பின்தொடர்ந்த குறிகாரி போன்று குறிசொல்லும் ஆவிகளைப் பெற்றிருந்தவர்களும் இந்த வகையைச் சேர்ந்தவர்களே. அப் 8:9,18; 13:8; 16:16-18.

ஆபத்து

சாத்தானும் அவன் தூதர்களும் இருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ள மறுப்பவர்கள்தாம் எல்லாரையும் விட மிகப்பெரிய ஆபத்தில் இருக்கிறார்கள். தங்கள்சொந்த யோசனையின்படி நடப்பதாக நினைத்துக்கொண்டு, அந்த ஆவிகளின் ஆலோசனைகளுக்குத்தான் அநேகர் செவி கொடுக்கிறார்கள். இறுதிக்காலம் நெருங்கிவரும் நிலையில், மக்களை வஞ்சிக்க மிகுந்த வல்லமையோடு சாத்தான் செயல்படுகிறான்; தான் இல்லையென்கிற நம்பிக்கையை சாத்தான் எங்கும் பரவச்செய்கிறான். தன்னையும் தான் செயல்படும் விதத்தையும் யாரும் கண்டுவிடாதபடி செயல்படுவதுதான் சாத்தானின் யுக்தி.

மகா வஞ்சகனின் கண்ணிகளை நாம் கண்டுபிடித்துவிடுவோமோவென அவன் அஞ்சுகிறான். தன்னைப்பற்றி பிறர் ஏளனமாகவும் அருவருப்பாகவும் பேச அனுமதித்து, தன் உண்மையான குணத்தை வெற்றிகரமாக மறைத்துக் கொள்கிறான். 'சாத்தான் வடிவமற்றவன், அருவருப்பான தோற்றமுடையவன், பாதி மனித உருவமும் பாதி மிருக உருவமும் கொண்டவன்' என்று அவனை வர்ணிப்பது

அவனுக்குப் பிடிக்கும்; கேலியாகவும் ஏளனமாகவும் அவன் பெயரை உச்சரிப்பதும் அவனுக்குப் பிடிக்கும். மிகத்திறமையாக அவன் தன்னை மறைத்துக்கொள்வதால், 'அப்படி ஒருவன் உண்மையிலேயே இருக்கிறானா?' என்று கேள்வி எழும் சூழ்நிலை உருவாகிறது. சாத்தானுடைய செல்வாக்குபற்றிய அறிவில்லாதவர்களின் எண்ணங்களை சாத்தான் உடனே தன்வசமாக்கி விடுகிறான். எனவேதான், அவனுடைய இரகசியச்செயல்களை வேதாகமம் நமக்கு வெளிப்படுத்திக் காட்டி, நாம் ஜாக்கிரதையுடன் வாழ வழிவகுக்கிறது.

இயேசுவில் பாதுகாப்பு

நம் மீட்பரின் மகத்துவ வல்லமையில் நமக்குப் பாதுகாப்பும் விடுதலையும் உண்டு. தீயவர்களிடமிருந்து நம் பொருள்களையும் உயிரையும் பாதுகாக்க, வீட்டைப் பூட்டுகிறோம்; தாழ்ப்பாளிடுகிறோம். ஆனால், தீயதூதர்கள் பற்றி நாம் யோசிப்பதில்லை; அவர்களுடைய தாக்குதல்களை நம் சொந்தப் பெலத்தில் எதிர்கொண்டால் தோற்றுப் போவோம். தேவன் அவர்களை அனுமதித்தால், நம் மனதைத் திசைதிருப்பவும், நம் சரீரங்களைச் சித்திரவதை செய்யவும், நம் உடைமைகளையும் உயிரையும் அழிக்கவும் அவர்களால் கூடும். ஆனால், இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய கண்காணிப்பில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். பராக்கிரமம் மிகுந்த தூதர்கள் அவர்களைப் பாதுகாக்க அனுப்பப்படுகிறார்கள். தேவன் தம் மக்களுக்குக் கொடுக்கும் பாதுகாப்பை மீறி, அந்தத் தீயவன் எதுவுமே செய்யமுடியாது.

அதிகாரம் 3

ஆபத்தான ஏமாற்றுவேலைகள்

கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டம் கிட்டத்தட்ட முடிவை நெருங்கி விட்டது. மனிதனுக்காக கிறிஸ்து செய்யும் கிரியைகளை முறியடிக்க, இருமடங்கு வல்லமையோடு சாத்தான் செயல் படுகிறான். கிறிஸ்துவின் மத்தியஸ்த பணி முடிவடையும் மட்டும் மக்களை அந்தகாரத்திலும் பாவத்திலும் நிலைத் திருக்கச் செய்வதுதான் அவனுடைய குறிக்கோள். சபை யில் மெத்தனமாய் இருப்பவர்களை சாத்தான் பொருட் படுத்துவதே இல்லை. ஆனால், "இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?" என்று ஓர் ஆத்துமா கேட்டு விட்டால், களத்தில் குதிப்பான்; பரிசுத்த ஆவியானவரின் தாக்கத்தைப் போக்கடிக்க, முழுவல்லமையோடு கிறிஸ் துவை எதிர்ப்பான்.

ஒரு சமயம், தேவதூதர்கள் கர்த்தருக்கு முன்பாகக் கூடினார்கள்; சாத்தானும் கூட நின்றிருந்தான்; நித்திய ராஜாவுக்குமுன் பணிவதற்காக அல்ல, நீதிமான்களுக்கு எதிராக தனது கெட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வந் தான். யோபு 1:6. தேவனை ஆராதிக்கும்படி மனிதர் கூடும் போது, அவனும் அங்கு வந்துவிடுவான்; கூடியிருப்பவர் களின் மனதைத் தன் வசப்படுத்த, கருத்தாகச் செயல்படு வான். ஊழியக்காரர்கள் வேதாகமத்தை ஆராயும்போது, அவர்கள் பேசப்போகிற கருத்தை அவன் கவனித்துக் கொள்வான்; அந்தக் கருத்தில் யாருக்குத் தடுமாற்றம் ஏற் படுமோ, அவர்களை வஞ்சிப்பதற்குத் தன் தந்திரத்தையும் அறிவுக்கூர்மையையும் பயன்படுத்துவான். மேலும், யாருக்கு அந்த எச்சரிப்பு தேவைப்படுகிறதோ, அவர்

தேவவசனத்தைக் கேட்காதபடி, அவரை ஏதாவது வியா பாரக் காரியத்தில் ஈடுபடுத்துவான்; அல்லது, ஏதாவது யுக்தியைக் கையாண்டு, அவர் அந்தப் பிரசங்கத்தைக் கேட் காதபடி தடுத்துவிடுவான்.

மக்களைச் சூழ்ந்துள்ள அந்தகாரத்தின்நிமித்தம் தேவ ஊழியர்கள் பாரமடைவதை சாத்தான் காண்கிறான்; அக் கறையின்மையும் சோர்வும் நீங்குவதற்கு, தேவவல்லமை யும் தேவகிருபையும் வேண்டி அவர்கள் ஜெபிப்பதைக் கேட் கிறான்; உடனே தீவிரமாகச் செயல்படத் தொடங்குகிறான்; சுய இச்சையிலும் பாவ ஆசையிலும் அவர்களை மூழ்க்கி விட முயல்வான். இவ்வாறு அவர்களுடைய பகுத்தறிவை மங்கச்செய்வான்; எனவே, எதை அவர்கள் முக்கியமாக அறியவேண்டுமோ, அதை அறியாதுபோகிறார்கள்.

ஜெபிப்பதையும் வேதம் வாசிப்பதையும் நிறுத்துகிற வர்கள் தன் தாக்குதலில் மடிந்துபோவார்கள் என்பது சாத்தா னுக்குத் தெரியும். எனவே, மனதை ஆக்கிரமிக்கக்கூடிய கண்ணிகள் பலவற்றை அவன் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக் கிறான். தேவன் கிரியைசெய்யும் போதெல்லாம் அவனு டைய வலக்கை சகாக்கள் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஊக்கமிகுந்த, சுயநலமற்ற கிறிஸ்துவின் ஊழியர்களை வஞ்சகர்களாகவும் ஏமாற்றுக் காரர்களாகவும் காட்டுவார்கள். ஊழியக்காரர்களின் உண்மையான ஒவ்வொரு செயலின் நோக்கத்தையும் திரித்துக்கூறுவதும், வதந்தியைப் பரப்புவதும், அனுபவ மற்றவர்களின் மனதில் சந்தேகத்தை எழுப்புவதும்தான் அவர்களுடைய வேலை. ஆனால், உண்மையிலேயே அவர்கள் யாரென்பதும், யாருடைய முன்மாதிரியை அவர் கள் பின்பற்றுகிறார்களென்பதும், யாருடைய பணியை அவர்கள் செய்கிறார்களென்பதும் சீக்கிரமே வெளிப்படும். 'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்'. மத் 7:16; வெளி 12:10.

சத்தியம் பரிசுத்தப்படுத்துகிறது

தான் அழிக்க விரும்புவோரின் வெவ்வேறான ரசனை களுக்கு ஏற்றவாறு வெவ்வேறு மாறுபாடான கருத்துகளை

மகா வஞ்சகன் தயாரித்து வைத்துள்ளான். கடடர்களையும் திருந்தாதவர்களையும் சபைக்குள் கொண்டுவந்து, சந்தேகத்தை ஊக்கப்படுத்துவதுதான் அவன் திட்டம். தேவன் மேல் உண்மையான விசுவாசம் இல்லாத பலர், சத்தியத்தின் சில நியதிகளை ஒத்துக்கொண்டு, கிறிஸ்தவர்களெனும் பெயரைப் பெற்றுவிடுகிறார்கள். வேதாகமப் போதகமென்று தவறான கருத்துகளைப் பரப்ப இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்துவிடுகிறது. அன்பினால் ஏற்றுக்கொள்ளப்படும் சத்தியம், ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்துகிறதென்பது சாத்தானுக்குத் தெரியும். எனவே, தவறான கொள்கைகளையும் கட்டுக்கதைகளையும் வேறே சுவிசேஷத்தையும் புகுத்துவதற்கு அவன் முயல்கிறான். தேவ ஊழியர்கள் ஆரம்பமுதல் பொய்ப்போதகர்களை எதிர்த்து வருவதைக் காணலாம். அந்தப் பொய்ப் போதகர்கள் மோசமானவர்கள்; ஆத்துமாவிற்குக் கேடு விளைவிக்கும் பொய்களைப் புகுத்தினவர்கள். வேதாகமத்தைவிட்டு மனிதரைத் திருப்பியோரை எலியா, எரேமியா, பவுல் போன்றோர் எதிர்த்தார்கள். சரியான விசுவாசத்தை முக்கியமற்றதென்று கூறின மெத்தனப்போக்கை, சத்தியத்தின் பாதுகாவலர்களான பரிசுத்தவான்கள் இலேசாக விட்டுவிடவில்லை.

வேதவாக்கியங்களுக்கு தெளிவற்ற அர்த்தம் கற்பிக்கப்படுவதற்கும், கிறிஸ்தவத்தில் காணப்படும் முரணான கொள்கைகளுக்கும் காரணன் அந்தக் கொடிய எதிரிதான். சிந்தைகளைக் குழப்புகிற வேலை அது. பிடித்தமான ஒரு கொள்கைக்கு ஏற்றவாறு வேதவாக்கியங்களைத் திரிப்பது தான் சபைகளுக்குள்ளே பிணக்கும் பிரிவினையும் காணப்படுவதற்குப் பெரிதளவில் காரணமாக இருக்கிறது.

பொய் உபதேசங்களைச் சரியானவைகளாகக் காட்ட, வேதத்தின் கருத்தை விட்டுவிட்டு, தங்களுக்குப் பிடித்தமான வரிகளைப் பிடித்துக்கொள்கிறார்கள்; தங்கள் கருத்தை நிரூபிக்க வசனத்தில் பாதியைச் சுட்டிக்காட்டுகிறார்கள்; ஆனால் வசனத்தின் மறுபாதியோ அவர்களின் கருத்துக்கு முற்றும் எதிரானதாக இருக்கும். தங்கள் மாம்ச இச்சைகளுக்கு ஒத்துப்போகும்படி, சம்பந்தமற்ற கருத்துகளைக் கூறி, வலுசர்ப்பத்தின் தந்திரத்தோடு அதை ஆணித்தரமாக நிறுவு

கிறார்கள். சிலர் வேத எண்களையும் அடையாளங்களையும் பிடித்துக்கொள்வார்கள்; தங்கள் கற்பனைக்கு ஏற்றபடி அர்த்தங்கூறுவார்கள். வேதம் சொல்கிறபடி அவற்றுக்கு அர்த்தங்கூறமாட்டார்கள். பிறகு, தங்களுடைய கருத்து மாறாட்டத்தை வேதாகமப் போதகமென்று போதிப்பார்கள்.

முழுவேதாகமும் வழிகாட்டிதான்

ஜெபசிந்தையும் கற்றுக்கொள்ளும் மனதும் இல்லாமல், வேதவாக்கியங்களை ஆராயும் நேரங்களிலெல்லாம், எளிமையான வாக்கியங்கள்கூட அதன் உண்மை அர்த்தத்திற்கு மாறாகத்தான் தெரியும். வேதாகமம் முழுவதையும் அது சொல்கிறபடியே மக்களுக்குப் போதிக்கவேண்டும்.

நிச்சயமாக நிறைவேறும் தீர்க்கதரிசன வார்த்தையை தேவன்தாமே கொடுத்தார். 'சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளை' தானியேல், யோவான் போன்றோருக்கு வெளிப்படுத்துவதற்கு தேவதூதர்கள் வந்தார்கள்; கிறிஸ்துவும்தாமே இறங்கிவந்தார், வெளி 1:1. உண்மையோடு சத்தியத்தைத் தேடுகிறவர்கள் குழம்பி, வழிவிலகும் விதத்தில் நம் இரட்சிப்பு சம்பந்தப்பட்ட முக்கியமான காரியங்கள் சொல்லப்படவில்லை. ஜெபசிந்தையோடு தேவவார்த்தையை ஆராயும் யாவருக்கும் அது தெளிவாக விளங்கும்.

[2]**பரந்தமனப்பான்மை** என்று அலட்டுவோர், தங்கள் எதிராளியின் திட்டங்களைக் காணக்கூடாதிருக்கிறார்கள். வேதாகமக் கருத்துகளுக்குப்பதிலாக மனிதரின் யூகங்களைப் புகுத்தி, அவன் வெற்றிபெறுகிறான்; தேவனுடைய நியாயப்பிரமாணம் ஒதுக்கப்படுகிறது; நாங்கள் விடுதலை பெற்றவர்கள் என்று சொல்கிற சபைகள் உண்மையில் பாவத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றன.

அறிவியல் கண்டுபிடிப்புகள்மூலம் பெரிய வெளிச்சத்தை தேவன் அனுமதித்திருக்கிறார். ஆனால், மா பெரும் ஞானிகளும்கூட, வேதாகமத்தால் நடத்தப்படாவிட்டால், அறிவியலுக்கும் வேதாகமத்துக்கும் உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ளும் முயற்சிகளில் திகைத்துவிடுகிறார்கள்.

---

[2] வேதாகமத்துக்கு ஒத்துப்போகாத கருத்துகளையும் ஏற்றுக்கொள்கிற மனநிலை

அறிவியல்பற்றிய தங்கள் கருத்துகளோடு வேதக் கருத்துகள் ஒத்துப்போகவில்லையென்று பலர் திணறுகிறார்கள். அவ்வாறு ஒத்துப்போகாததற்குக் காரணம் மனிதர்தாம். மனிதரின் அறிவு குறைவுள்ளது; முழுமையற்றது. வெறும் கோட்பாடுகளை அறிவியல் உண்மைகளென்று ஏற்றுக்கொள்கிறார்கள். பிறகு, ஞானமென்று 'பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையினால்' தேவனுடைய வார்த்தையைச் சோதித்துப்பார்க்க நினைக்கிறார்கள். 1தீமோ 6:20. இயற்கை விதிகளை வைத்து, சிருஷ்டிகருடைய கிரியைகளை விளக்கமுடியாததால், வேதாகம வரலாறு நம்பத்தகுந்ததல்லவென்று நினைக்கிறார்கள். பழைய, புதிய ஏற்பாடுகளைச் சந்தேகிக்கிறவர்கள் இன்னும் ஒரு படி மேலேபோய், தேவன் ஒருவர் இருக்கிறாரென்பதையே சந்தேகிக்கிறார்கள். விசுவாச நங்கூரம் உடைவதால், அவ நம்பிக்கையெனும் பாறைகளில் மோதி உடைகிறார்கள்.

தேவன் வெளிப்படுத்தியிராத காரியங்களுக்கு கற்பனையான விளக்கங்களைச் சொல்லவைப்பது சாத்தானின் வஞ்சகங்களிலேயே பெரியது. தேவ ஆலோசனைகளின் அந்தரங்கங்கள் அனைத்தும் தனக்கு வெளிப்படுத்தப்படவில்லை என்பதுதான் லூசிபரின் மனக்குறை. தனக்கு வெளிப்பட்டிருந்த காரியங்களை அவன் மதிக்கவில்லை. மனிதருக்குள்ளும் அதேவித ஆவியைப் புகுத்தப்பார்க்கிறான். தேவன் தந்துள்ள கற்பனைகளைப் புறக்கணிக்குமாறு மனிதரைத் தூண்டுகிறான்.

துன்பத்துக்குப் பயந்து, சத்தியப் புறக்கணிப்பு

ஆன்மிக வாழ்வையும் சுயமறுப்பையும் முக்கியப்படுத்தாத உபதேசங்களை அதிக ஆர்வத்தோடு பலர் ஏற்றுக்கொள்கின்றனர். மனிதரின் ஆசைகளை நிறைவேற்றவும், சத்தியத்திற்குப் பதிலாக வஞ்சனையைப் புகுத்தவும் சாத்தான் ஆயத்தமாக இருக்கிறான். பாப்பு மார்க்கம் மனிதரின் இருதயங்களில் இடம்பிடித்ததும் அப்படித்தான். துன்பம் வருவதால் சத்தியத்தைப் புறக்கணிக்கும் புரொட்டஸ்ட்டன்ட் கிறிஸ்தவர்களும் அதே பாதையில்தான் செல்கிறார்கள். உலகத்தாரிடமிருந்து வேறுபடாமல் இருப்பதற்காக

எப்படி வாழவேண்டுமென்று யோசிக்கிறவர்கள், சத்தியத்திற்குப் பதிலாக 'கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தான்' ஏற்றுக்கொள்வார்கள். 2பேதுரு 2:1. **இவர்கள் ஒரு வஞ்சகத்தைப் பயத்தோடு பார்த்து விலகினாலும், இன்னொரு வஞ்சகத்தை ஏற்றுக்கொள்வார்கள்.**[2]

ஆபத்தான பொய்கள்

ஆவிமார்க்கத்தின் அற்புதங்கள்தாம் மகா வஞ்சகனுக்கு வெற்றிதரும் பெரிய கருவிகளாக உள்ளன. சத்தியத்தை மனிதர் புறக்கணிக்கும்போது வஞ்சகத்துக்கு இரையாகிறார்கள்.

'கிறிஸ்து தேவனில்லை' என்பது இன்னொரு பொய். 'இந்த உலகத்திற்கு வரும்முன்னர் கிறிஸ்து இருக்கவில்லை' என்பதும் பொய் உபதேசம்தான். பிதாவோடு தமக்குள்ள உறவைப்பற்றியும், ஆதிமுதல் தாம் இருப்பதைப்பற்றியும் நம்முடைய இரட்சகர் சொன்னவற்றை முற்றிலும் மறுக்கிற தவறான கொள்கை இது. 'தேவனுடைய வெளிப்பாடுதான் வேதாகமம்' எனும் நம்பிக்கையையும் இது மங்கச்செய்கிறது. கிறிஸ்துவின் தெய்வதன்மைபற்றி வேதாகமம் சொல்வதைப் புறக்கணிப்போரிடம் வாதிடுவது வீண். எவ்வளவுதான் திறமையாக வாதிட்டாலும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்ட தவறான எண்ணம் உடையவர்கள் கிறிஸ்துவை மெய்யாக அறிந்து கொள்ளமுடியாது; மனிதனின் மீட்புகுறித்த தேவனுடைய திட்டத்தையும் அறியமுடியாது.

இன்னொரு பொய்யும் நிலவுகிறது. அது, 'சாத்தான் என்று ஒரு நபர் இல்லை. மனிதனின் தீய எண்ணங்களையும் ஆசைகளையும்தான் வேதாகமம் அந்தப் பெயரால் குறிப்பிடுகிறது' என்று நம்புவதாகும்.

'ஒவ்வொரு மனிதனும் மரிக்கும்போது, இயேசு அவனுக்குத் தரிசனமாகிறார்; அதுதான் இரண்டாம்

---

[2] கிறிஸ்தவ உலகத்தின் பெரும்பகுதியினர் எவ்வாறு கொஞ்சம்கொஞ்சமாக வேதாகம உபதேசத்தைவிட்டு விலகிச்சென்றார்களென்பதை மாபெரும் போராட்டம் எனும் மூலப்புத்தகத்தில் நீங்கள் படிக்கலாம்

வருகை' என்று போதிப்பது, 'இயேசுதாமே இரண்டாம் முறை மேகங்கள்மேல் வருவார்' எனும் உண்மையிலிருந்து மனிதனின் மனதைத் திசைதிருப்புவதாகும். 'இதோ, அறை வீட்டிற்குள் இருக்கிறார்' என்று சாத்தான் சொல்லி வரு கிறான். மத்தேயு 24:23-26. இந்தப் பொய்யை நம்பி அநேகர் தொலைந்துபோகிறார்கள்.

'ஜெபத்திற்குப் பதிலுண்டு என்பது உண்மையல்ல; அற்புதம் நிகழ்வதாகச் சொல்வதெல்லாம் விதிக்கு முரணா னது. அற்புதங்கள் என்று எதுவுமில்லை' என்று அறிவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். 'மாறாத விதிகள்தாம் அண்ட சராசத்தையும் கட்டுப்படுத்துகின்றன. கடவுளும்கூட அந்த விதிகளுக்கு அப்பாற்பட்டுச் செயல்படுவதில்லை' என்று சொல்கிறார்கள். தேவன் தம்முடைய விதிகளுக்குக் கட்டுப்பட்டிருப்பது போலவும், அவர் சுதந்தரமாகச் செயல் பட வாய்ப்பில்லாதது போலவும் அவர்கள் பேசுகிறார்கள்.

கிறிஸ்துவும் அவர் அப்போஸ்தலர்களும் அற்புதம் செய்யவில்லையா? மனிதர் காண மனிதர்நடுவே இரட்சகர் நடந்துதிரிந்தபோது, விசுவாசிகளின் வேண்டுகோளுக்குச் செவிகொடுத்ததுபோல இன்றும் நம் ஜெபங்களுக்குச் செவி கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார். நாம் தேவனிடம் கேட்க வேண்டுமென்பது தேவ திட்டம். நாம் கேட்காவிட்டால் தேவன் சிலவற்றைக் கொடுக்கமாட்டார். அவற்றை நாம் விசுவாசத்தோடு கேட்டால், தேவன் நிச்சயம் தருவார்.

வேதாகமத்தின்மேல் சந்தேகம்

தேவவார்த்தை வரையறுத்துள்ள எல்லைக்குறிகளை தவறான உபதேசங்கள் அகற்றிவிடுகின்றன. சத்தியத்தின் ஒரு நியதியை மறுதலிப்பதோடு சிலர் நிறுத்திக்கொள்கிறார் கள். ஆனால், பலர் சத்தியத்தின் நியதிகளை ஒன்றன்பின் ஒன்றாக மறுதலித்து, கடைசியில் நாத்திகராகின்றனர்.

நியாயம், இரக்கம், மனிதாபிமானம்பற்றிய சரியான கருத்தை பொய் உபதேசங்கள் தவறாகக் காட்டுகின்றன. அதனால், இந்த உபதேசங்களைக் கேட்கிற பலர் இறை வனையே சந்தேகிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். மேலும், இந்த உபதேசங்கள் வேதாகமப் போதனைகள் என்று கூறப்

படுகின்றன. ஆதலால், வேதாகமம் தேவனுடைய வசனம் என்பதை ஏற்கவும் அவர்கள் மறுக்கிறார்கள்.

பாவத்தை தேவவார்த்தை கண்டித்து உணர்த்துவதால், வேறு சிலர் அதை நம்பத்தயங்குகிறார்கள். அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மனதில்லாதவர்கள் அதன் அதிகாரத்தைத் தூக்கியெறிய விரும்புகிறார்கள். கடமை தவறுவோர் பலர் தங்கள் தவற்றை நியாயப்படுத்தி, நாத்திகர் ஆகின்றனர். உடல்நலுங்காமல் வாழ விரும்புகிறவர்கள் தங்களை வருத்திக்கொள்ளாமலிருக்க, வேதாகமத்தைக் குறைகூறி, தங்களை ஞானிகளாகக் காட்டுகிறார்கள்.

அவநம்பிக்கை, சந்தேகம், நாத்திகம் போன்றவையே மதிப்பானவை என்று அநேகர் நினைக்கிறார்கள். இவர்கள் வெளிப்படையாகப் பேசுவதுபோலத் தெரியும். ஆனால், உள்ளே சுயநம்பிக்கையும் அகந்தையும் கொதித்துக்கொண்டிருக்கும். பிறர் மனதைத் திகைக்க வைக்கக்கூடிய காரியங்கள் எதையாவது வேதாகமத்திலிருந்து காட்டுவதில் அநேகர் மகிழ்ச்சியடைகிறார்கள். சர்ச்சையை விரும்புகிற தன்மை இருப்பதால், சிலர் முதலில் தவறான காரியங்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். பிறகு, அவநம்பிக்கையை வெளிப்படையாகவே பேசி, தெய்வ பக்தியற்றவர்களோடு சேருகிறார்கள்.

போதுமான ஆதாரம்

வேதாகமம் தெய்வீகமானது என்பதற்குப் போதுமான ஆதாரத்தை தேவன் அதில் கொடுத்திருக்கிறார். ஆனாலும், நித்தியமானவரின் யோசனைகளை முற்றிலும் புரிந்து கொள்ள அநித்தியமானவர்களின் ஞானம் போதாது. 'அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!' ரோமர் 11:33. இருந்தாலும், எல்லையில்லா வல்லமையுள்ளவரின் அளவற்ற அன்பையும் இரக்கத்தையும் கண்டுகொள்ள வழியுள்ளது. எவ்வளவு தூரம் நமக்குத் தெரிந்திருந்தால் நமக்கு நல்லதோ, அவ்வளவையும் நம் பரலோகத் தந்தை நமக்கு வெளிப்படுத்துவார். அதற்குமேல் சர்வவல்லவரின் கரத்தையே நாம் நம்பியிருக்க வேண்டும்; நம் தேவனு

டைய உள்ளம் முழுவதும் அன்பால் நிரம்பிவழிகிறது.

அவிசுவாசத்தை உண்டாக்கக்கூடிய எல்லாவற்றையும் தேவன் விலக்கிவிடமாட்டார். தேவனை நம்பாதிருக்க வழிதேடுவோருக்கு அது நிச்சயம் கிடைக்கும். எல்லாத் தடைகளும் நீங்குமட்டும் கீழ்ப்படிய முடியாதென நினைப்போர், ஒருபோதும் வெளிச்சத்திற்குள் வரமாட்டார்கள். புதிதாக்கப்படாத இருதயம் தேவனுக்கு விரோதமானது. ஆனால், ஆவியானவர் விசுவாசத்தை ஊக்குவிக்கிறார்; விசுவாசத்தைப் பேணினால் அது செழித்து வளரும். தீவிரமுயற்சி இல்லாமல் விசுவாசத்தில் வலுப்பெற எவராலும் முடியாது. குறைகாண்பதையே பழக்கமாக்கிவிட்டால், சந்தேக மனப்பான்மை ஆழமாக வேர்விட்டுவிடும்.

தேவ கிருபை தருகிற நிச்சயத்தைச் சந்தேகிக்கிறவர் கிறிஸ்துவைக் கனவீனம்பண்ணுகிறார். பிற தாவரங்கள் மேல் சூரிய ஒளி விழாமல்செய்து, நிழலினால் அவற்றை வாடிவதங்கச்செய்யும் பிரயோஜனமற்ற மரங்கள்போல் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை எப்போதும் அவர்களுக்கு எதிராகச் சாட்சியிடும்.

சந்தேகங்களிலிருந்து உண்மையாகவே விடுபட விரும்புகிறவர்கள் தாங்கள் அறியாததைக்குறித்து கேள்வி எழுப்புவதற்குப் பதிலாக, தங்களுக்கு ஏற்கனவே அருளப்பட்டிருக்கும் வெளிச்சத்திற்குச் செவிகொடுப்பார்களாக. இதுதான் அவர்களுடைய ஒரே நோக்கமாக இருக்கவேண்டும். அப்போது இன்னும் பெரிய வெளிச்சம்பெறலாம்.

சத்தியம் போலவே இருக்கிற போலிக்கருத்துகளை சாத்தான் பரப்புவான். ஏமாறுவதற்கு ஆயத்தமாயிருப்போரும், சத்தியம் எதிர்பார்க்கிற தியாகத்தைச் செய்ய மனதில்லாதோரும் அப்படிப்பட்ட போலிக்கருத்துகளினால் வஞ்சிக்கப்படுகிறார்கள். என்னதான் விலையானாலும், சத்தியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று உண்மையாகவே விரும்புகிற எந்த ஆத்துமாவையும் சாத்தானால் தன் வல்லமையின்கீழ் கொண்டுவரமுடியாது. கிறிஸ்துவே சத்தியம். அவரே, 'உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி'. 'அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால்

உண்டாயிருக்கிறதோ என்று அறிந்துகொள்ளுவான்.' யோவான் 1:9; யோவான் 7:17.

தம் மக்கள் பாவத்தூண்டல்களால் கடுமையாகச் சோதிக்கப்பட ஆண்டவர் ஏன் அனுமதிக்கிறார்? அவர்கள் வேதனை அவருக்குப் பிடிக்கும் என்பது அல்ல; அவர்களுடைய இறுதி வெற்றிக்கு அது தேவை என்பதே காரணம். அவர்களுக்குச் சோதனை வரும்போது எல்லாக் காலங்களிலும் அவர் தம் மகிமையால் தடுக்கமுடியாது; ஏனெனில், அந்தச் சோதனைகளின் நோக்கமே, பாவ ஆசைகள் யாவற்றையும் எதிர்த்துநிற்க அவர்கள் பழகவேண்டும் என்பது தான். தேவனுடைய பிள்ளைகள் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்து விட்டுவிட்டு, அவர் வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டால், துன்மார்க்கராலும் பிசாசுகளாலும் தேவசமுகத்திலிருந்து அவர்களை விலக்கவே முடியாது. வெளியரங்கமானதோ, அந்தரங்கமானதோ ஒவ்வொரு பாவச் சோதனையையும் வெற்றிகரமாக எதிர்த்து நிற்கலாம். 'பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.' சகரியா 4:6.

'நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமை செய்கிறவன் யார்?' 1பேதுரு 3:13. கிறிஸ்துவுக்குள் வாசஞ்செய்யும் ஆத்துமா பெலவீனமாயிருந்தாலும், அந்தகாரச் சேனைகள் முழுவதும் அந்த ஆத்துமாவுக்கு ஈடாக முடியாதென்பதை சாத்தான் நன்கு அறிவான். அதனால்தான், சிலுவை வீரர்களை அவர்கள் பெலனான அரணிலிருந்து விலக்குவதற்கு முயல்கிறான்; தன் இடத்தில் கால்வைக்கும் எவரையும் அழித்துவிட, பதுங்கி இருக்கிறான். தேவனைச் சார்ந்திருந்து, அவருடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதால் மாத்திரமே நாம் பாதுகாப்பாக இருக்கமுடியும்.

ஜெபம் இல்லாமல், ஒருநாள் அல்ல, ஒரு மணி நேரம்கூட எவருக்கும் பாதுகாப்பு இல்லை. தேவ வார்த்தையைப் புரிந்துகொள்ள ஞானம் தருமாறு ஆண்டவரிடம் மன்றாடுங்கள். வேதாகம வாக்கியங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றிற்கு தன் சொந்த விளக்கங்களைக் கூறுவதில் சாத்

தான் கில்லாடி; அதன்மூலம், நம்மைத் தடுமாறி விழப் பண்ண அவன் நினைக்கிறான். மனத்தாழ்மையோடு வேதத்தை ஆராயவேண்டும். சாத்தானின் கண்ணி களுக்கு எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அதே வேளையில், 'எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் இரட்சியும்' என்று நித்தமும் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். மத்தேயு 6:13.

அதிகாரம் 4

நித்திய வாழ்க்கை

பரலோகத்தில் கலகத்தைத் தூண்டிவிட்ட சாத்தான், தேவனுக்கு எதிரான தன்னுடைய போராட்டத்தில் பூமியின் குடிகளையும் ஈடுபடுத்த விரும்பினான். தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்து, ஆதாம்-ஏவாள் பூரண மகிழ்ச்சியோடு காணப்பட்டார்கள். தேவகட்டளை நம் சுதந்தரத்தைப் பறிக்கிறதென்று பரலோகில் சாத்தான் கிளப்பின பொய்க்கு எதிரான ஒரு சாட்சியாக அது விளங்கியது. பூமியை தன் வசமாக்கவும், உன்னதமானவருக்கு எதிராக தன்னுடைய ஆளுகையை இப்பூமியில் நிலைநிறுத்தவும் விரும்பின சாத்தான் அதற்காக மனிதரை விழப்பண்ணத் தீர்மானித்துக்கொண்டான்.

ஆபத்தான இந்த எதிரியைப்பற்றி ஆதாம்-ஏவாளுக்கு எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. சாத்தானோ தன் நோக்கத்தை மறைத்து, இரகசியமாகச் செயல்பட்டான். சர்ப்பம் முன்பு கவர்ச்சியான தோற்றத்துடன் இருந்தது; அப்படிப்பட்ட ஒரு சர்ப்பத்திலிருந்து, ஏவாளிடம் சாத்தான் பேசினான்: 'நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?' என்று கேட்டான். அவனிடம் பேச்சுக்கொடுத்த ஏவாள், அவனுடைய தந்திரத்தில் அகப்பட்டுக்கொண்டாள். ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், 'நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம்' என்று சொன்னார்" என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள்

சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்'' என்று சொன்னது. ஆதி 3:1-5.

ஏவாள் விழுந்தாள்; அவளுடைய பேச்சைக் கேட்டு ஆதாமும் பாவம்செய்தான். சர்ப்பத்தின் வார்த்தைகளை நம்பினார்கள்; தங்கள் சிருஷ்டிகரைச் சந்தேகப்பட்டார்கள்; அவர் தங்கள் சுதந்தரத்தைப் பறிப்பதாக நினைத்தார்கள்.

ஆனால், 'அதை நீ புசிக்கும்நாளில் சாகவே சாவாய்' எனும் வார்த்தைகளின் அர்த்தம்பற்றி ஆதாம் புரிந்து கொண்டது என்ன? இருந்த நிலையைவிட உன்னதமான ஒரு நிலையை அடையவிருந்தானா? தேவனுடைய தீர்ப்பு அப்படி இருக்கவில்லை. அவன் செய்த பாவத்திற்கு தண்டனையாக அவன் மண்ணிற்குத் திரும்பவேண்டு மென்று தேவன் ஆதாமிடம் கூறினார். "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புவாய்'' என்றார். ஆதி 3:19. தங்கள் மூடத்தனத்தைக் காணும்படி அவர் களுடைய கண்கள் திறந்தன. இந்த விதத்தில்தான், 'உங்கள் கண்கள் திறக்கப்படும்' என்று சாத்தான் சொன்ன வார்த்தை கள் உண்மையாயின. அதாவது, தீமை என்னவென்று அறிந்துகொண்டார்கள்; மீறுதலின் கசப்பான பலனை அனு பவித்தார்கள்.

ஜீவ விருட்சத்தில் நித்திய வாழ்வுக்கான வல்லமை இருந்தது. உரிமையோடு, எப்போதும் அந்த மரத்தின் கனி யைப் புசிக்கவும், நித்தியமாக வாழவும் ஆதாமுக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால், பாவம்செய்ததால், ஜீவ விருட்சத்திடமிருந்து விலக்கப்பட்டான்; மரணத்திற்குக் கீழ்ப்பட்டான். மீறுதல் அழியாமையைப் பறித்துவிட்டது. தேவன் தம் குமாரனை பலியாகக் கொடுத்து, சாவாமை யைப் பெறும் வழியை ஏற்படுத்தியிராவிட்டால், விழுந்து போன மனிதருக்கு எந்த நம்பிக்கையுமே இருந்திருக்காது. 'எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லா ருக்கும் வந்ததுபோல' கிறிஸ்துவானவர், 'ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக் கினார்'. கிறிஸ்துவின்மூலமாகமாத்திரமே அழியாமை

யைப் பெறமுடியும். 'குமாரனிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பது இல்லை'. ரோமர் 5:12; 2 தீமோ 1:10; யோவான் 3:36.

முதல் பொய்

கீழ்ப்படியாமல் உன்னதமாக வாழமுடியுமென்று சொன்னவன் மிகப்பெரும் வஞ்சகன். 'நீங்கள் சாகவே சாவதில்லை' என்று ஏதேனில் சர்ப்பம் சொன்னதுதான், ஆத்துமாவின் அழியாமைபற்றி பிரசங்கிக்கப்பட்ட முதல் பிரசங்கமாகும். சாத்தான் சொன்னதைமாத்திரம் ஆதார மாகக் கொண்ட இந்தக் கொள்கை இன்றும் பிரசங்க மேடைகளில் பேசப்படுகிறது; நம் முதல் பெற்றோர்போல பெரும்பாலான மனிதர்கள் இதை ஏற்றுக்கொள்கிறார்கள். 'பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்' என்று ஆண்டவர் சொல்லியுள்ளார். எசே 18:20. ஆனால், 'பாவஞ்செய்கிற ஆத்துமா சாவதில்லை, அது நித்தியமாக வாழும்' என்று திரித்துக் கூறப்படுகிறது. விழுகைக்குப் பின்னரும், ஜீவ விருட்சத்திடம் மனிதன் அனுமதிக்கப்பட்டிருந்தால், பாவம் அழிக்க முடியாததாகியிருக்கும். ஆதாம் குடும்பத்தில் ஒரு வர்கூட ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்க அனுமதிக்கப் படவில்லை. அதனால், அழியாத பாவி என்று எவனும் இல்லை.

விழுகைக்குப்பின், சாத்தான் தன் தூதர்களிடம், 'மனி தன் இயல்பிலேயே அழியாதன்மையுள்ளவன்' எனும் நம் பிக்கையை வலியுறுத்தும்படி கட்டளையிட்டான். முதலில் இந்தப் பொய்யை மக்கள் நம்பும்படிச் செய்தான். பிறகு, 'பாவி நித்தியநித்தியமாக வாதிக்கப்படுவான்' என்று மனிதர் முடிவுபண்ண, அவர்களை வழிநடத்துமாறு தன் தூதருக்குக் கட்டளையிட்டான். 'தமக்குப் பிரியமாக நடக்கா தவர்களை தேவன் நரகத்திற்குள் தள்ளுகிறார்; அவர்கள் அவியா அக்கினியில் துடிதுடிப்பார்கள். அவர்களைச் சிருஷ்டித்தவர் அதை மனநிறைவோடு பார்ப்பார்' என்று சொல்லி, பழிவாங்கும் கொடியவராக தேவனைச் சித்தரிக் கிறான்; மனிதரின் நன்மையை நாடுகிறவர் நம் தேவன்;

அவருக்குத் தன்னுடைய தன்மை இருப்பதாக சாத்தான் காட்டுகிறான். தேவன் அன்பே உருவானவர். சாத்தானோ கொடுங்கோலன். மனிதனைப் பாவஞ்செய்யத் தூண்டி விட்டு, அவர்களை அழித்துவிட நினைக்கும் எதிரி அவன். 'மரித்த பாவிகள் பூமியில் கொஞ்சக்காலம் வாழ்ந்தபோது செய்த பாவங்களுக்காக, சதாகாலமும் நித்திய நரக அக்கினியில் வாதிக்கப்படுவார்கள்' எனும் உபதேசமானது அன்புக்கும் இரக்கத்திற்கும் நியாயத்திற்கும் எவ்வளவு புறம்பானது!

தேவவார்த்தையில் எங்கே அப்படிச் சொல்லப்பட்டுள்ளது? இல்லை, தேவனுடைய புத்தகத்தில் அப்படிச் சொல்லப்படவே இல்லை. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், "நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், நீங்கள் ஏன் சாகவேண்டும்?" என்றுதான் தேவன் சொல்கிறார். எசே 33:11.

ஓயாத சித்திரவதையைக் கண்டு தேவன் மகிழ்ச்சியடைவாரோ? அக்கினியில் தள்ளப்படுகிறவர்கள் வேதனையில் அலறுவதையும் முனகுவதையும் பார்த்து அவர் இன்பமடைவாரோ? எல்லையில்லா அன்புள்ளவருக்கு வேதனைக் கூக்குரல்கள் இன்னிசையாகத் தொனிக்குமோ? எத்தனை தூஷணமான எண்ணங்கள் இவை! எப்போதும் பாவம் ஏதாவது ஓரிடத்தில் இருந்துகொண்டே இருக்குமெனில், தேவ மகிமை மதிப்புடையதாகவா இருக்கும்?

நித்திய வாதைபற்றிய தவறான போதனை

நித்திய வாதைபற்றிய தவறான போதனையால் தீங்குதான் விளைகிறது. வேதாகமம் சொல்கிற மதத்தில் அன்பும் தயவுமே அடிப்படை. பொய் உபதேசம் அதை மோசமானதாகவும் பயப்படத்தக்கதாகவும் காட்டுகிறது. தேவனுடைய குணத்தை தவறான கோணங்களில் சாத்தான் சித்தரிக்கிறான். இரக்கமுள்ள நம் சிருஷ்டிகரை பயத்தோடும் திகிலோடும் வெறுப்போடும் பார்க்கும்படிச்

செய்துவிட்டான். தேவன்மேல் அச்சம் ஏற்படுத்துகிற பிரசங்கங்கள் உலகமுழுதும் பரவி, இலட்சக்கணக்கானோரை சந்தேகவாதிகளாகவும் அவிசுவாசிகளாகவும் மாற்றியுள்ளன.

வேசித்தனத்தின் மதுவாகிய பொய் உபதேசங்களில் ஒன்று நித்தியவாதை; பாபிலோன் அதை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்துவிட்டாள். வெளி 14:8; 17:2. **பொய்யான ஓய்வுநாளை**[1] ரோமிலிருந்து ஏற்றுக்கொண்டது போல, இக்கருத்தையும் கிறிஸ்துவின் ஊழியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். நம் முன்னோர்கள் சொன்னார்களென்று, தேவ வார்த்தையை விட்டுவிட்டு, பொய் உபதேசங்களை ஏற்றுக்கொண்டால், பாபிலோனுக்குச் சொல்லப்பட்ட ஆக்கினைத்தீர்ப்பில் பங்குபெறுவோம்; அவளுடைய வேசித்தன மதுவைக் குடிக்கிறவர்களாகிறோம்.

வேறு பலர் இதற்கு எதிர்மாறான ஒரு தவறுக்குள் வழிநடத்தப்படுகிறார்கள். ‘தேவன் அன்புள்ளவர், மன உருக்கமுள்ளவர்’ என்று வேதாகமம் சொல்வதை வைத்து, தம் சிருஷ்டிகளை நித்தியமாக எரியும் அக்கினிக்குள் போடமாட்டாரென்று சரியாக நம்புகிறார்கள். ஆனால், ‘இயல்பிலேயே ஆத்துமா அழிவில்லாதது’ என்று தவறாக எண்ணுவதால், மனிதர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்களென்று முடிவுசெய்கிறார்கள். அதாவது, தேவனுடைய கட்டளைகளை அவமதித்து சுயநல இன்பத்திலேயே பாவிமூழ்கியிருந்தாலும், அவருடைய தயவுக்குப் பாத்திரராகலாமென்பது அவர்கள் கருத்து. தேவனுடைய இரக்கம் பற்றிய தவறான இந்த உபதேசம், தேவநியாயத்தைப் புறக்கணிக்கும் மாம்ச இருதயத்திற்கு ஏற்றதாக உள்ளது.

எல்லாரும் இரட்சிக்கப்படுவார்களா?

மனிதர் அனைவருமே இரட்சிக்கப்படுவார்கள் என்று நம்புவோர், வேதவாக்கியங்களுக்கு எதிர்த்துநிற்கிறார்கள். பெயரளவில் கிறிஸ்துவுக்கு ஊழியம்செய்கிறவர், “நீங்கள் சாகவேசாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே

---

[1] ஓய்வுநாளைப்பற்றி அதிகம் அறியவேண்டுமா? இந்தப் புத்தகத்தில் அதிகாரம் 8 ஐப் படியுங்கள்

உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் நன்மைதீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்" என்று ஏதேனில் சாத்தான் சொன்ன பொய்யைத்தான் மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிறார். ஆதி 3:4,5. கொலைகாரர், திருடர், விபசாரக்காரர் போன்ற மோசமான பாவிகளும், மரணத் திற்குப்பின் நித்திய மகிழ்ச்சியில் பங்குபெறலாமென்று அறி விக்கிறார். லௌகீக மனதைத் திருப்திப்படுத்தும் அருமை யான கட்டுக்கதை இது.

மரிக்கும் தருவாயில் மனிதர் அனைவருமே நேரடி யாகப் பரலோகத்திற்குச் சென்றுவிடலாமென்றால், வாழ்க் கையைவிட மரணமே விரும்பக்கூடியதாக இருக்கும். இதை மனதில்வைத்து, அநேகர் தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்கள். ஏமாற்றமும் நெருக்கமும் மிஞ்சி நிற்கும்போது, வாழ்க்கையை அறுத்துக் கொண்டு, நித்திய உலகிற்குப் பறந்துவிடலாமென நினைக்கிறார்கள்.

தம்முடைய கட்டளையை மீறுகிறவர்கள் தண்டனை பெறுவார்களென்று உறுதியான ஆதாரத்தோடு தேவன் தம் வார்த்தையில் சொல்லியிருக்கிறார். 'பாவியை நியாயப் படி தண்டிக்கமாட்டார்; தேவன் மிகுந்த இரக்கம் உள்ளவர்' என்று சொல்வோமோ? கல்வாரிச் சிலுவையைப் பாருங் கள். தேவ கட்டளையை மீறினால் தண்டனை உண்டு என்ப தற்கும், 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்பதற்கும் தேவ குமாரனுடைய மரணம் சாட்சியாக இருக்கிறது. ரோமர் 6:23. பாவமில்லாதவரான கிறிஸ்து மனிதனுக்காக பாவ முள்ளவரானார். மனிதரின் மீறுதலை அவர் சுமந்தார்; பிதா வின் முகம் அவருக்கு மறைக்கப்பட்டது; அவருடைய உள் ளம் உடைந்தது; மரணம் நேரிட்டது. பாவிகள் மீட்கப்படும் படி, இந்தப் பாடுகளைப் பட்டார். விலைபேறப்பெற்ற இப் பாவநிவாரணத்தை ஏற்றுக்கொள்ளாத ஒவ்வோர் ஆத்து மாவும், மீறுதலின் தண்டனையைப் பெற்றாகவேண்டும்.

நிபந்தனைகள் சொல்லப்பட்டுள்ளன

'தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்' எனும் இந்த வாக்குத்தத்தம் தாகமாயிருக்கிறவர்களுக்குத்தான் உரியது. 'ஜெயங்

கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளு வான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமா ரனாயிருப்பான்.' வெளி 21:6,7. சகலத்தையும் சுதந்தரிக்க வேண்டுமானால், அதற்கு நிபந்தனை உண்டு; நாம் பாவத்தை மேற்கொள்ளவேண்டும்.

'துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை'. பிரசங்கி 8:13. 'தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பு வெளிப்ப டும் கோபாக்கினை நாளிலே' பாவி கோபாக்கினையைப் பெறுவான். 'தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.' 'பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்.' ரோமர் 2:5,6,9.

'விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாரா தனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனு டைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தர மடைவதில்லை.' 'ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ள வர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிர வேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிற வர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விப சாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்கார ரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்.' எபே 5:5; வெளி 22:14,15.

தேவன் பாவத்தை எவ்வாறு அணுகப்போகிறாரென மனிதருக்கு அறிவித்திருக்கிறார். 'துன்மார்க்கர் யாவரை யும் அழிப்பார். அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படு வார்கள்; அறுப்புண்டுபோவதே துன்மார்க்கரின் முடிவு.' சங் 145:20, சங் 37:38. தேவனுடைய அரசாட்சியின் அதி காரம், கலகத்தை அதமாக்கும்; தேவன் இரக்கமும் தயாளமு மானவர்; அதேசமயம் அவர் தண்டனை தராமலிருக்கப் போவதும் இல்லை.

மனிதனின் சித்தத்தை தேவன் கட்டாயப்படுத்துவ தில்லை. அடிமைத்தனக் கீழ்ப்படிதலை அவர் விரும்புகிற தும் இல்லை. தாம் அன்புக்குப் பாத்திரர் என்பதை நன்கு உணர்ந்து, தம் கரத்தின் சிருஷ்டிகள் தம்மேல் அன்புகூர

வேண்டுமென்று அவர் விரும்புகிறார். தம் ஞானத்தையும் நியாயத்தையும் தயவையும் உணர்ந்து, அதினிமித்தம் அவர்கள் தமக்குக் கீழ்ப்படிவதையே அவர் விரும்புகிறார்.

'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்' என்று நம் இரட்சகர் வகுத்த நியதிக்கு இசைவாகத்தான், தேவனுடைய அரசாங்கத்தின் நியதிகள் இருக்கின்றன. மத் 5:44. சர்வலோகத்திற்கும் நன்மை உண்டாக, தேவன் நியாயமான தண்டனை வழங்குகிறார். அவருடைய நியாயத்தீர்ப்புகளைப் பெறுகிறவர்களுக்கும் அது நன்மைதான். முடிந்தால் பாவிகளை சந்தோஷமாக வைத்திருக்கவே அவர் விரும்புகிறார். அவர்களைச் சுற்றிலும் தம் அன்பின் அடையாளங்களை வைத்திருக்கிறார்; தம் இரக்கங்களைப் பெறக்கூடிய வழிகளைக் காட்டுகிறார். ஆனால், அவர்கள் அவருடைய அன்பைப் புறக்கணிக்கிறார்கள்; அவருடைய கட்டளையை அவமதிக்கிறார்கள்; அவருடைய இரக்கத்தை வெறுக்கிறார்கள். அவருடைய ஈவுகளை நித்தமும் பெற்றுக்கொண்டு, ஈவுகளைக் கொடுக்கும் அவரையோ கனவீனம் பண்ணுகிறார்கள்; அவர்களுடைய மாறுபாட்டை தேவன் நீண்டகாலம் பொறுத்திருக்கிறார். இந்தக் கலகக்காரரைக் கட்டி இழுத்து, தம் பக்கத்தில் கொண்டுவந்து, தம் சித்தத்தைச் செய்யக் கட்டாயப்படுத்துவாரா?

பரலோகம்செல்ல ஆயத்தமில்லை

சாத்தானைத் தங்கள் தலைவனாகத் தெரிந்துகொண்டவர்கள் தேவ பிரசன்னத்திற்குச் செல்லவிரும்புவது இல்லை. அகந்தை, வஞ்சனை, காம இச்சை, கொடூரம் போன்றவை அவர்களுடைய நிரந்தர குணங்களாகிவிடுகின்றன. பூமியில் தாங்கள் வெறுத்தவர்களோடு என்றென்றும் வாழும்படி, அவர்கள் பரலோகத்திற்குச் செல்ல முடியுமா? பொய்யனுக்கு ஒருபோதும் சத்தியம் பிடிக்காது; அகந்தையுள்ளவனுக்கு சாந்தகுணம் மனநிறைவு தராது; சீர்கெட்டவனுக்கு பரிசுத்தம் பிடிக்காது; சுயநலமுள்ளவனுக்கு சுயநலமற்ற அன்பில் ஈடுபாடு இருக்காது. சுயநல இன்பங்களில் மூழ்கியுள்ளோருக்கு பரலோகம் என்ன சந்தோஷத்தைத் கொடுத்துவிட முடியும்?

தேவன்மேலும், சத்தியத்தின்மேலும், பரிசுத்தத்தின் மேலும் இருதயத்தில் பகையை நிறைத்திருப்பவர்கள், பரலோகக் கூட்டத்தாரோடு சேர்ந்து, துதித்துப் பாடுவது சாத்தியமா? தவணைநாட்கள் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டன. ஆனால், பரிசுத்தத்தை நேசிப்பதற்கு அவர்கள் தங்கள் மனதைப் பக்குவப்படுத்தவில்லை. பரலோகத்தின் தன்மையை அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. இப்போது காலம் கடந்துவிட்டது.

தேவனுக்கு விரோதமாகக் கலகம்செய்து அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, பரலோகத்திற்கு அவர்கள் தகுதியற்ற வர்கள் எனும் நிலைக்கு அவர்களைக் கொண்டுவந்து விட்டது. பரலோகத்தின் பரிசுத்தமும் சமாதானமும் அவர் களுக்கு பட்சிக்கிற அக்கினியாக இருக்கும். அந்தப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து தப்பியோடி, அழிந்துபோக விரும்புவ தால், தங்களை மீட்பதற்காக தம் உயிரையே கொடுத்த வரின் முகத்தைவிட்டு தங்களை ஒளித்துக்கொள்ள முயலு வார்கள். துன்மார்க்கர் தாங்களே தங்கள் அழிவைத் தெரிந்து கொள்கிறார்கள். பரலோகம் வேண்டாவென்று அவர்களே தாம் தீர்மானித்துக்கொள்கிறார்கள்; தேவனோ நியாயமும் இரக்கமும் உள்ளவர். பாவிகள் குணமாக விரும்பாதவர் களெனும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை, நோவா கால ஜலப்பிரளயம்போல, கடைசிக்கால அக்கினியும் விளங்கச் செய்யும்; கலகம்செய்தே அவர்கள் பழகிவிட்டார்கள். வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில், அவர்கள் மீறுதலி லிருந்து கீழ்ப்படிதலுக்கும், பகைமையிலிருந்து அன்புக்கும் மாற இயலாத அளவிற்கு காலம் கடந்துவிடும்.

இரண்டு முடிவுகள்

'பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்மடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.' நீதிமான்கள்தாம் ஜீவனைச் சுதந்தரிக்கிறார்கள். பாவிகளோ மரணத்தைச் சுதந்தரிக் கிறார்கள். ஒன்று, நித்திய ஜீவனை அடையவேண்டும்; அல்லது, 'இரண்டாம் மரணத்தைச்' சந்திக்கவேண்டும். ரோமர் 6:23; வெளி 20:14.

ஆதாம் செய்த பாவத்தால், மனித இனம் முழுவதிற்கும் மரணம் நேரிட்டது. எல்லோருமே ஒரேவிதமாகக் கல்லறைக்குள் செல்கிறார்கள். ஆனால், இரட்சிப்பின் திட்டத்தால் எல்லோருமே கல்லறையிலிருந்து எழும்பப்போகிறார்கள். 'நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பார்கள்'. 'ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'. ஆனால், இந்த இரண்டு வகையான மக்களுக்கும் வித்தியாசம் இருக்கும். 'பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படிக்கு எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படிக்கு எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். அப் 24:15; 1கொரி 15:22; யோவான் 5:28,29.

துன்பத்தின் முடிவு

உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்கள் எல்லோரும் பாக்கியவான்களும் பரிசுத்தவான்களுமாய் இருக்கிறார்கள். லூக் 20:35; வெளி 20:6. மனந்திரும்பி, விசுவாசித்து, பாவமன்னிப்பைப் பெறாதவர்களோ தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக, பாவத்தின் சம்பளத்தைப் பெறுவார்கள். அந்தத் தண்டனையின் முடிவு 'இரண்டாம் மரணம்'.

ஒரு பாவி தன்னுடைய பாவங்களைவிட்டு விலகாமல் அதில் நிலைத்திருக்கும்போது, அவனை இரட்சிக்க தேவனால் இயலாது. எனவே, அவன் தன் மீறுதல்களின் மூலம் தன் ஜீவனைப் புறக்கணித்துவிடுகிறான். அதனால், அவனுடைய ஜீவனை அவர் எடுத்துப்போடுகிறார்; மேலும், அந்த ஜீவனுக்கு அவன் தன்னைத் தகுதியற்றவனாகக் காட்டிவிட்டான். 'இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்றுவிசாரித்தாயானால் அவன் இல்லை' என்கிறது சங்கீதம் 37:10. அவர்கள் "இராதவர்களைப் போல இருப்பார்கள்" என்கிறார் ஒபதியா. ஒபதியா16. அவர்கள்

நம்பிக்கையின்றி நித்தியமாக ஒழிந்துபோவார்கள்.

இப்படியாக, பாவத்திற்கு முடிவுகட்டப்படும். 'ஜாதிகளைக் கடிந்துகொண்டு, துன்மார்க்கரை அழித்து, அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி குலைத்துப் போட்டீர். சத்துருக்கள் என்றென்றைக்கும் பாழாக்கப்பட்டார்கள்' சங் 9:5,6. பரலோகம் முழுவதிலும் ஒரே தொனியோடு, ஒரு ஸ்வரம்கூட பிசகாமல், பாடப்பட்ட பாடலை யோவான் கேட்டதாக வெளிப்படுத்தல் சொல்கிறது. அவியா அக்கினியில் நெளிந்துகொண்டிருக்கிற பாவிகள் தேவனைத் தூஷிக்கிற சத்தம் எதையும் அவர் அப்போது கேட்டதாகச் சொல்லப்படவில்லை. இரட்சிக்கப்பட்டோரின் பாடல்களுக்கு இடையில் நரகத்திலிருந்து பாவிகளின் கூக்குரல் எதையும் கேட்டதாகவும் சொல்லப்படவில்லை.

'ஆத்துமா அழிவில்லாதது' எனும் பொய் உபதேசத்தை வைத்துதான், மரித்தவர்களுக்கு உணர்வு இருக்கிறதெனும் உபதேசம் இருக்கிறது. நித்திய நரகம் எனும் உபதேசம்போல இந்த உபதேசமும் வேதாகமத்திற்கும் பகுத்தறிவுக்கும் மனித உணர்வுகளுக்கும் எதிரானது.

'மீட்கப்பட்டவர்கள் இறந்தவுடன் பரலோகம் சென்று, பூமியில் நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' எனும் ஒரு கருத்து நிலவுகிறது. பூமியில் மக்கள் படும் வேதனைகளையும் கஷ்டங்களையும் பரலோகிலிருப்பவர்கள் பார்த்துக்கொண்டிருந்தால், அவர்கள் எவ்வாறு சந்தோஷமாக இருக்கமுடியும்? மனந்திருந்தாத பாவிகள் மரித்ததும், அவர்கள் ஆத்துமா நரக அக்கினிக்குள் தள்ளப்படுகிறதென்பது எத்துணை அருவருப்பான நம்பிக்கை!

வேதவாக்கியங்கள் என்ன சொல்கின்றன? மரித்தவன் எதையுமே அறியான். 'அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.' 'உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றி

லும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை.' 'பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை. நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான்.' 'மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?' சங் 146:4;பிர 9:5,6;ஏசா 38:18,19;சங் 6:5.

பெந்தெகொஸ்தே நாளில் பேசின பேதுரு, "தாவீது மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே" என்று சொன்னார். அப் 2:29,34. உயிர்த்தெழும்நாள்மட்டும் கல்லறைக்குள்தான் தாவீது இருப்பார் என்றால், மரிக்கும் நீதிமான்கள் உடனே பரலோகத்திற்குச் செல்வதில்லை என்பது உறுதிப்படுகிறது.

உயிர்த்தெழுதலில் நித்திய வாழ்வு

இயேசு தம் சீடர்களிடமிருந்து பிரியும் நேரம் வந்தது. அவர்கள் சீக்கிரமே தம்மிடம் வரலாமென்று அவர்களிடம் அவர் சொல்லவில்லை. 'ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்' என்று சொன்னார். யோவான் 14:2,3. மேலும், 'கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்' என்கிறார் பவுல். 1தெச

4:16-18. ஆண்டவர் வரும்போது, கல்லறையின் கட்டுகள் தகர்க்கப்படும்; 'கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்' நித்திய ஜீவனைப் பெறும்படி எழுந்திருப்பார்கள்.

புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளதின்படி அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்; தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாகப் பலனடைவார்கள். மரிக்கும்போது இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறுவதில்லை. 'மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்.' 'இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கு, ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங் கூடக் கர்த்தர் வருகிறார்'. அப் 17:31; யூதா 14,15.

மரித்தவர்களில் சிலர் ஏற்கனவே பரலோகத்தில் சந்தோஷமாகவும், வேறு சிலர் நரகத்தில் வேதனைப்பட்டுக் கொண்டும் இருந்தால், இன்னொரு நியாயத்தீர்ப்பு எதற்கு? சாமான்யரும் புரிந்துகொள்ளும்விதத்தில்தான் தேவ வார்த்தை சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு கொள்கையில் நியாயம் இருக்கிறதென்று தெளிந்த புத்தியுள்ளவர் எவரும் சொல்லமுடியுமோ? மரித்த நீதிமான் ஏற்கனவே வெகுகாலமாக தேவனுடைய பிரசன்னத்தில் இருந்தால், 'உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்று ஏன் அவரை இனிமேல் வரவேற்கவேண்டும்? ஏற்கனவே வாதையில் கிடக்கும் பாவிகளைப் பார்த்து, 'சபிக்கப்பட்டவர்களே, நித்திய அக்கினியிலே போங்கள்' என்று ஆண்டவர் மீண்டும் ஏன் நியாயந்தீர்க்கவேண்டும்? மத் 25:21,41.

'ஆத்துமா அழிவில்லாதது' எனும் கோட்பாடு, அஞ்ஞான மாக்கத்திலிருந்து ரோமில் நுழைந்த தவறான உபதேசம். மார்ட்டின் லூதர் இதுபற்றிப் பேசும்போது, "**போப்புகளின் கட்டளைகளாகிய குப்பைமேட்டிலுள்ள அருவருப்பான கட்டுக்கதை இது**"[2] என்கிறார். 'உயிர்த்தெழும்வரை மரித்தவர்கள் நித்திரையாயிருக்கிறார்கள்' என்றுதான் வேதாகமம் சொல்கிறது.

---

[2] E. Petavel, The Problem of Immortality, p. 255.

களைத்துப்போன நீதிமான்களுக்கு இளைப்பாறுதல் ஓர் ஆசீர்வாதம். இளைப்பாறுகிற காலம் சிறியதோ, பெரியதோ எதுவானாலும், அவர்களைப் பொருத்தமட்டில், அது ஒரு கணப்பொழுதுதான். அவர்கள் நித்திரைசெய்கிறார்கள்; தேவ எக்காளச் சத்தம் கேட்கும்போது, மகிமையான அழியாமையைத் தரித்துக்கொள்ள எழுந்திருப்பார்கள். 'கடைசி எக்காளம் தொனிக்கும்போது, மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.' 1கொரி 15:51-54.

நித்திரையிலிருந்து அவர்கள் எழுப்பப்பட்டதும், எந்தக் கணத்தில் அவர்களுடைய உயிர்பிரிந்ததோ, அந்தக் கணத்திலிருந்து அவர்களுடைய நினைவு தொடரும்; மரிப்பதற்குச் சற்றுமுன் இருந்த வேதனையான உணர்வு நினைவுக்கு வரும்; கல்லறையின் வல்லமையில் அகப்பட்டதும் நினைவுக்கு வரும். ஆனால், கல்லறையிலிருந்து அவர்கள் எழுந்திருக்கும்போது, 'மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?' எனும் ஜெய தொனிதான் அவர்களுடைய முதல் சந்தோஷ உணர்வாக இருக்கும். 1 கொரி 15:55.

அதிகாரம் 5

போலி நம்பிக்கை

'ஆத்துமா அழிவில்லாதது' எனும் கருத்து, பிற மார்க்கத்திலிருந்து முதலில் உள்ளே நுழைந்து, விசுவாசம் தடம்புரண்ட இருண்ட காலத்தில் கிறிஸ்தவ விசுவாசத் தோடு இணைக்கப்பட்டது. பின்னர், 'மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்' எனும் உண்மை பிடுங்கியெறியப்பட்டது. பிரசங்கி 9:5. செத்தவர்களின் ஆவிகள்தாம், இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும் படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளென்று அநேகர் நினைக்கிறார்கள். எபி 1:14.

செத்தவர்களின் ஆவிகள் உயிரோடிருப்பவர்க ளுக்கு ஊழியஞ்செய்ய அனுப்பப்படுவதாக நம்புவது நவீன ஆவிமார்க்கத்திற்கு வழிநடத்துகிறது. நவீன ஆவி மார்க்கம் சொல்வதாவது: தாங்கள் உயிரோடிருந்தபோது பெற்றிருந்ததைவிட மரித்தபின் மனிதர் அதிக ஞானத்து டன் இருந்தால், அவர்கள் ஏன் பூமிக்கு திரும்பி, உயிரோடி ருப்பவர்களை வழிநடத்தக்கூடாது? மரித்தவர்களின் ஆவி கள் பூமியில் உயிரோடிருக்கும் தங்கள் சிநேகிதரைச் சுற்றி வருமானால், அவர்களோடு ஏன் பேசக்கூடாது? மரித்த பிறகும் மனிதனுக்கு உணர்வு இருப்பதாக நம்புகிறவர்கள், இந்த ஆவிகள் வெளிப்படுத்தும் 'தெய்வீக வெளிச்சத்தை' ஏன் புறக்கணிக்கவேண்டும்? புனிதமாகக் கருதப்படும் இந்த வழிகள்மூலமாக சாத்தான் கிரியைசெய்கிறான். விழுந்துபோன தூதர்கள்தாம் ஆவி உலகத் தூதுவர்கள் போல் காட்சியளிக்கிறார்கள்.

இறந்துபோனவர்களுடைய உருவத்தை அவர்கள்

உறவினர்முன்பாகத் தோன்றச்செய்ய, அந்தகாரப்பிரபு வல்லவன். வேறுபடுத்திப் பார்க்கவே முடியாத அளவிற்கு, போலி உருவத்தைத் தோன்றச் செய்ய அவனால் முடியும். தங்களுக்குப் பிரியமானவர்கள் பரலோகத்தில் சந்தோஷ மாக இருப்பதாக நினைத்து, அநேகர் தங்களைத் தேற்றிக் கொள்ளுகிறார்கள். ஆபத்தை அறியாமல், 'வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும்' செவி கொடுக்கிறார்கள். 1தீமோ 4:1.

ஆயத்தப்படாமல் மரித்த பாவிகூட ஆவியாக வந்து, 'பரலோகத்தில் நான் சந்தோஷமான உன்னத நிலையில் இருக்கிறேன்' என்று சொல்வதாகச் சொல்லப்படுகிறது. ஆவிகளின் உலகத்திலிருந்து வந்தவைபோல் தோன்றும் ஆவிகள் சொல்லும் எச்சரிப்புகள் சிலசமயங்களில் சரியான வையாக இருக்கும். அதை ஒருவர் நம்ப ஆரம்பித்து விட்டால், வேதவாக்கியங்களுக்கு புறம்பான கருத்துகளை அவை சொல்லும். வருங்கால நிகழ்வுகள் இவையென்று சிலசமயங்களில் அவை முன்னுரைக்கும். அவற்றையும் பிற பொய் உபதேசங்களையும் மனிதர் ஏற்றுக்கொள்வார் கள். தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் புறக்கணிப் பார்கள்; கிருபையின் ஆவியை அவமதிப்பார்கள். கிறிஸ்து வின் தெய்வதன்மையை மறுதலித்து, கிறிஸ்து தங்களுக்குச் சமமானவரென்று இந்தத் தீய ஆவிகள் காட்டுகின்றன.

வஞ்சகத்தின் விளைவுகள் பெரும்பாலும் மெய் வெளிப்பாடுகள்போல் ஏற்றுக்கொள்ளப்படுவது உண்மை தான். ஆனாலும், தீயதூதர்கள் நேரடியாகவே தங்கள் அசா தாரண வல்லமையை வெளிப்படுத்தி, குறிப்பிடத்தக்க அற் புதங்களைச் செய்யமுடியும். ஆவிமார்க்கம் என்பது மனி தனின் ஏமாற்று வேலை என்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால், இயற்கைக்கு மாறான வெளிப்பாடுகளை நேரடி யாக அவர்கள் காணும் சூழ்நிலை ஏற்படும்போது, அவை தேவனிடமிருந்து வந்தவை என்று நம்பிவிடுகிறார்கள்; தேவனுடைய மகா வல்லமையென ஏமாந்துபோகிறார்கள்.

பார்வோனின் ஊழியர்கள் சாத்தானின் உதவியோடு தேவனுடைய கிரியை போலவே செய்துகாண்பித்தார்கள்.

யாத் 7:10-12. ஆண்டவருடைய வருகைக்கு முன்பு, 'சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும்' சாத்தானின் செயல் இருக்குமென்று பவுல் சொல்கிறார். 2தெச 2:9,10. 'அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கும்' என்கிறார் யோவான். வெளி 13:13,14. இங்கு முன்னுரைக்கப்படுபவை சாதாரண ஏமாற்றுவேலைகள் அல்ல. செய்வதுபோல் பாசாங்குகாட்டும் அற்புதங்களால் அல்ல, சாத்தானின் முகவர்கள் உண்மையாகவே செய்யும் அற்புதங்களால் மனிதர் வஞ்சிக்கப்படுவார்கள்.

புத்தியை ஈர்க்கும்விதத்தில்

பண்பாடும்நாகரிகமும்தெரிந்தவர்களுக்கு ஆவிமார்க்கத்தை அறிவுபூர்வமான விதத்தில் எடுத்துக் காட்டுகிறான் சாத்தான். அதில் அன்பும் கருணையும் நிறைந்திருப்பதாகவும், மகிழ்ச்சிதருவதுபோலவும் மனிதரின் மனதுக்கு ஏற்றவிதத்தில் சித்தரித்துக் காட்டுகிறான். மனிதர் தங்கள் சுயஞானம்குறித்து பெருமைபாராட்டி, நித்தியமானவரை தங்கள் இருதயங்களில் மறுதலிக்கும்படி வழிநடத்துகிறான்.

சுயத்தை மேன்மைப்படுத்தும் ஆசையை ஏதேனில் ஏவாளுக்குத் தூண்டிவிட்டது போலவே, இன்றும் மனிதருக்குத் தூண்டிவிட்டு, அவர்களை வஞ்சிக்கிறான் சாத்தான். 'நீங்கள் நன்மைதீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்' என்கிறான். ஆதி 3:5. 'தேவத்துவத்தை அடையுமளவு வளரக்கூடிய ஒரு சிருஷ்டிதான் மனிதன்' என்று ஆவிமார்க்கம் போதிக்கிறது. மேலும், 'நியாயத்தீர்ப்பு குறித்து பயம்வேண்டா. நமக்குநாமே நீதிபதிகள்' என்றும் அது போதிக்கிறது. 'நியாயமும் பூரணமும் உள்ள எந்தச் சிருஷ்டியும் கிறிஸ்துதான்' என்[illegible]னாரு[illegible]தும் நிலவுகிறது.

மனிதனின் [illegible]வமான தன்மையை அ[illegible]ாக

வைத்துதான் நியாயத்தீர்ப்பு என்கிறான் சாத்தான். இது நம் வளர்ச்சிக்கு அல்ல; விழுகைக்குத்தான் வழிநடத்தும். தான் நியமித்துக்கொள்கிற தரத்துக்குமேல் தூய்மையிலும் நற்குணத்திலும் மனிதன் உயர வாய்ப்பே இல்லை. சுயம் தான் பிரதான நோக்கமாக இருக்குமானால், எவ்வித உன்னத நிலையையும் அவன் அடையவே முடியாது. மனிதனை உயர்த்தும் வல்லமை தேவகிருபைக்கு மாத்திரமே உள்ளது. மனிதன் தன் சுயத்திலேயே விடப்பட்டால், அவனுடைய வளர்ச்சி கீழ்நோக்கிதான் இருக்கும்.

சிற்றின்பப் பிரியனுக்குப் பிடிக்கும்விதத்தில்

சிற்றின்பத்திலும் இச்சையிலும் நாட்டமுள்ள ஒருவனுக்கு ஆவிமார்க்கம் தன்னை ஒளித்துக்காட்டுவது இல்லை. தங்கள் ஆசை இச்சைகளுக்கு ஏற்றவாறே அதன் வழிமுறைகள் இருப்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள். ஒரு மனிதன் எந்தப் பாவத்தைச் செய்ய மிகவும் விருப்பப்படுகிறானோ, அதை சாத்தான் குறித்துக்கொள்கிறான். அதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறான். தங்கள் இச்சைப்படி நடக்கவிட்டு, சரீர- மன-ஒழுக்க ஆற்றலைப் பெலவீனப்படுத்துகிறான். சிற்றின்ப ஆசையில் உலவவிட்டு, மிருகசுபாவத்தைக் கொடுத்து, ஆயிரக்கணக்கானோரை அழிக்கிறான். 'மெய்யான அறிவு எல்லாப் பிரமாணங்களுக்கும் மேலாக மனிதனை உயர்த்துகிறது. எதைச் செய்கிறோமோ அவை எல்லாமே நல்லவைதாம். எந்தப் பாவமும் தவறானதே அல்ல' என்று ஆவிகளைச் சொல்லவைத்து, தன் வேலையை முடிக்கிறான். 'ஆசைதான் உன்னத நியதி, சுதந்தரம்தான் அதற்கான உரிமம், மனிதன் தனக்குமட்டும்தான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்' என்று மக்கள் நம்பினால், யார்தான் சீர்கெட்டுப் போகாமல் தப்பமுடியும்? இச்சையின் தூண்டுதல்களுக்கு அநேகர் ஆவலோடு செவிகொடுக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகக் கூறும் ஆயிரக்கணக்கானோரை சாத்தான் தன் வலையில் விழவைத்துவிடுகிறான்.

ஆனால், அந்தக் கண்ணியைக் கண்டுகொள்வதற்கு போதுமான வெளிச்சத்தை தேவன் கொடுத்திருக்கிறார்.

ஆவிமார்க்கத்தின் அடித்தளமே வேதாகமத்திற்கு புறம் பாகத்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ‘மரித்தவர்கள் ஒன்றுமே அறியார்கள்’ என்றும், ‘அவர்களுடைய சிந்தைகள் அழிகின்றன’ என்றும், ‘பூமியில் இருப்போரின் இன்பத்திலும் துன்பத்திலும் அவர்கள் பங்கெடுப்பதில்லை’ என்றும் வேதாகமம் சொல்லுகிறது.

தடைசெய்யப்பட்ட தொடர்பு

மேலும், செத்தவர்களின் ஆவிகள் என்று தங்களை அழைத்துக்கொள்கிற ஆவிகளோடு பேசுவதை தேவன் தடைசெய்திருக்கிறார். பிற உலகங்களிலிருந்து வருவதாகச் சொல்லப்படும் ஆவிகளான ‘குறிசொல்லும் ஆவிகளை’ வேதாகமம் ‘பிசாசுகளின் ஆவிகள்’ என்று அழைக்கிறது. எண் 12:1-3; சங் 106:28; 1கொரி 10:20; வெளி 16:14. அவற்றோடு ஐக்கியம் வைத்திருப்பது மரண தண்டனைக்கு ஏதுவானதாக இருந்தது. லேவி 19:31; 20:27. ஆனால், ஆவிமார்க்கம் இப்போது விஞ்ஞானிகளையும் திருச்சபைகளையும் சட்டமன்றங்களையும் அரசவைகளையும் விட்டுவைக்கவில்லை. பழைய ஏற்பாடு கண்டித்த பில்லிசூனியம்தான் இப்போது வேறு உருவில் வந்து, மக்களை பெரிதாக ஏமாற்றிக்கொண்டிருக்கிறது.

கீழ்த்தரமானவர்கள்கூட பரலோகத்தில் இருக்கிறார்களெனக்காட்டி, “தேவனையும் வேதாகமத்தையும் நம்பாவிட்டாலும், உன் இஷ்டப்படி வாழ்ந்தாலும் பரலோகம் செல்லலாம்” என்று உலகிற்குச் சொல்கிறான் சாத்தான். ‘தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!’ என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது. ஏசா 5:20.

வேதாகமம் கட்டுக்கதைபோல் சித்தரிக்கப்படல்

அப்போஸ்தலர்களின் ஆவிகள் எனும் பெயரில் வருகிற பிசாசுகள் அதே அப்போஸ்தலர்கள் முன்பு சொன்ன உண்மைகளை மாற்றிப்பேசுகின்றன. ‘வேதாகமம் ஒரு கட்டுக்கதை. மனிதஇனத்தின் துவக்கத்தில் அது அவசியமாக

இருந்தது. ஆனால், இப்போது அது வழக்கிழந்துவிட்டது' என்று உலகத்தை நம்பச்செய்கிறான் சாத்தான். அவனை யும் அவனைப் பின்பற்றுகிறவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற ஒரு புத்தகத்தை அவன் மறைக்கப்பார்க்கிறான்; உலக இரட்சகர் சாதாரண ஒரு மனிதன் என்கிறான். ஆவி மார்க்கத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் நம் இரட்சகரின் வாழ் வில் எவ்வித விசேஷமும் இல்லை என்கிறார்கள். கிறிஸ்து செய்த அற்புதங்களைவிட தாங்கள் செய்யும் அற்புதங்கள் மேலானவை என்கிறார்கள்.

கிறிஸ்துவைப் போர்வையில் ஆவிமார்க்கம் இப்போது உலாவருகிறது. அதன் போதனைகள் தெளிவாகத் தெரி கின்றன. ஆவிமார்க்கம் இப்போது மிகவும் ஆபத்தான, தந்திரமான, வஞ்சகமானவிதத்தில் கிரியைசெய்துவருகி றது. கிறிஸ்துவையும் வேதாகமத்தையும் ஏற்றுக்கொள்வ தாகச் சொல்கிறது. ஆனால், புதுப்பிக்கப்படாத இருதயம் ஏற்றுக்கொள்ளக்கூடியவிதத்தில் வேதாகமத்தைத் திரித்துக் காட்டுகிறது. தேவனுடைய பிரதான குணம் அன்புதான் என்று சொன்னாலும், அது அவருடைய பெலவீனம்போல் காட்டுகிறது. பாவத்தின்மேல் தேவனுக்குள்ள வெறுப்பை யும், பரிசுத்த பிரமாணங்களையும் அது எடுத்துரைப்ப தில்லை. வேதாகமம்தான் விசுவாசத்தின் அடிப்படை என் றாலும், [illegible] கட்டுக்கதைகள் மனிதனை நடத்து கின்றன. முன்போல கிறிஸ்து மறுதலிக்கப்படுகிறபோதி லும், அந்த வஞ்சகத்தை அவர்கள் உணர்வதில்லை.

ஆவிமார்க்கத்தின் வஞ்சக வல்லமையைப்பற்றிச் சரி யான கருத்துடையவர்கள் வெகுசிலர்தாம். தங்கள் ஆர்வத் திற்கு அது தீனிபோடுவதால், அநேகர் அதை விளையாட் டாக எடுத்துக்கொள்கிறார்கள். ஆவிகளின் கட்டுப்பாட் டிற்குள் அகப்பட்டுவிட்டோமென்பதைப் புரிந்துகொண்டால் பயந்து விடுவார்கள். விலக்கப்பட்ட இடத்தில் ஒருவர் காலடிவைத்தால், அவர் சித்தத்திற்கு எதிராக தன் வல்லமை யைப் பயன்படுத்துகிறான் சத்துரு. தன் வழிநடத்துதலின் படி அவர் தன் சிந்தையைச் செலுத்த வழிநடத்தி, அவரைச் சிறைவைக்கிறான். ஆக்கபூர்வ ஜெபத்தால் கிடைக்கும் தேவவல்லமையால்தான் அவரை விடுவிக்கமுடியும்.

தெரிந்தே பாவம்செய்கிறவர்கள் சாத்தானின் சோதனைகளை வருவித்துக்கொள்கிறார்கள். தேவனிடமும் பாதுகாக்கிற தூதர்களிடமும் இருந்து தங்களை விலக்கிக்கொள்வதால், பாதுகாப்பை இழந்துவிடுகிறார்கள்.

அவர்கள் உங்களை நோக்கி, 'அஞ்ஞானம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள்' என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. ஏசா 8:19, 20.

மனிதனின் இயல்புபற்றிய உண்மையையும் மரித்தோரின் நிலைபற்றிய உண்மையையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மனிதருக்கு இருந்தால், ஆவிமார்க்கத்தில் சாத்தானின் வல்லமையும் பொய்களும் சம்பந்தப்பட்டிருப்பதை கண்டுகொள்ளலாம். ஆனால், வெளிச்சத்தைக் காண விரும்பாமல், பலர் தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள்; அவர்களைச்சுற்றி சாத்தான் வலைபின்னுகிறான். 'இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால், அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.' 2 தெச 2:10, 12.

ஆவிமார்க்கத்தை எதிர்க்கிறவர்களை சாத்தானும் அவன் தூதர்களும் தாக்குகிறார்கள். பரலோகத் தூதர்கள் சாத்தானை விரட்டாவிட்டால், ஓர் அடிகூட அவன் நகர மாட்டான். கிறிஸ்துவின் நாட்களில் செய்ததுபோல, இன்றும் வேத வாக்கியங்களைச் சுட்டிக்காட்டி, அதன் போதனைகளைப் புரட்டுகிறான். இந்த இக்கட்டுக்காலத்தில் நிலைநிற்க விரும்புகிறவர்கள், வேதவாக்கியங்கள் சொல்வதை நன்றாக அறிந்திருக்கவேண்டும்.

வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளுங்கள்

இறந்துபோன நம் உற்றார்உறவினர் பெயரில் பிசாசு நம் உணர்வுகளை வசப்படுத்துகிறான். அற்புதங்களைச்

செய்கிறான். 'மரித்தவர்கள் ஒன்றும் அறியாதவர்கள்; மரித்தவர்கள்போல் தோன்றுபவை பிசாசின் ஆவிகள்' எனும் வேதாகமச் சத்தியத்தைக் கொண்டு நாம் அவைகளை எதிர்க்கவேண்டும்.

தேவ வார்த்தையை நம்பாதவர்கள் எல்லோரும் ஏமாற்றமும் தோல்வியும் அடைவார்கள். அநீதியான சகல வஞ்சகங்களோடும் சாத்தான் கிரியைசெய்துவருகிறான்; அவனுடைய ஏமாற்றுவேலைகள் இன்னமும் அதிகரிக்கும். ஆனால், சத்தியத்தை அறியும் ஆசைகொண்டு, கீழ்ப்படிவதன்மூலம் தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரிப்போர் அனைவருக்கும் சத்தியத்தின் தேவனில் நிச்சயமான பாதுகாப்பு உண்டு. தம்மை நம்பும் ஒரு ஆத்துமாவைக்கூட சாத்தான் மேற்கொள்ளாதிருக்க, பரலோகிலுள்ள தூதர்கள் அனைவரையும் அனுப்ப இரட்சகர் ஆயத்தமாக இருக்கிறார். 'இக்கட்டு நாளில் தப்புவதற்காக பரலோகம் தந்திருக்கும் சத்தியங்களை ஒரு பாவி புறக்கணித்தாலும், அவன் தண்டிக்கப்படுவதில்லை' என்று நம்பி, தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்கிறவர்கள் ஆவிமார்க்கத்தின் வஞ்சகங்களை, அதாவது சாத்தானின் பொய்களை ஏற்றுக் கொள்வார்கள்.

இரட்சிப்பின் திட்டம்பற்றியும், சத்தியத்தைப் புறக்கணிப்போர் சந்திக்கவேண்டிய தண்டனைபற்றியும் வேதாகமம் சொல்வதை இந்தப் பரியாசக்காரர் பரிகசிக்கிறார்கள். தேவ பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய நினைப்போருக்குக் குறுகிய மனமும் பெலவீனமும் மூடநம்பிக்கையும் இருக்கிறதென்று நினைத்து, அவர்களுக்காக இந்தப் பரியாசக்காரர் பரிதபிக்கிறார்கள். சோதனைக்காரனிடம் இவர்கள் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்துவிட்டதால், அவனோடு மிகவும் ஐக்கியமாகி, அவனுடைய ஆவியைப் பெற்றுவிடுகிறார்கள். அதனால், அவனுடைய கண்ணியிலிருந்து தப்பவேண்டுமென்கிற ஆசை அவர்களுக்கு வருவதே இல்லை.

"நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்" என்றும், "நீங்

கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்'' என்றும் ஏதேனில் ஏவாளிடம் சாத்தான் சொன்ன பொய்தான், அவனுடைய கிரியைக்கு அஸ்திபாரமாக இருக்கிறது. ஆதி 3:4,5. கடைசிக்காலத்தில் அவனுடைய வஞ்சனை உச்சக்கட்டத்தை அடையும். 'தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்தஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிற' என்று சொல்கிறார் தீர்க்கதரிசி. வெளி 16:13, 14.

தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, அவருடைய வல்லமையின்கீழ் இருப்பவர்கள் தவிர மற்ற எல்லாருமே இந்த வஞ்சனையின் பிடிக்குள் இழுக்கப்படுவார்கள். பொய்யான பாதுகாப்பை நம்பி, மக்கள் ஏமாந்துவருகிறார்கள்; தேவகோபம் ஊற்றப்படும்போதுதான் அவர்கள் தங்கள் நிலையைக் காண்பார்கள்.

அதிகாரம் 6

மெய்யான சமாதானம்

தேவவார்த்தை எங்கெல்லாம் உண்மையோடு பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் தெய்வாதீன விளைவுகள் ஏற்படுகின்றன. தங்கள் மனசாட்சி புத்துயிர்பெறுவதை பாவிகள் உணர்கிறார்கள். அவர்களுடைய சிந்தைகளும் இருதயங்களும் உணர்வடைகின்றன. தேவனுடைய நீதியைப் புரிந்துகொண்டு, "இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று கதறுகிறார்கள். ரோம் 7:24. சிலுவை வெளிப்பட்டதால், கிறிஸ்துவின் புண்ணியம் தவிர வேறெதுவும் தங்களுடைய மீறுதல்களை நிவிர்த்திசெய்ய முடியாதென்பதை அறிந்துகொள்கிறார்கள். 'முற்காலத்தில் நடந்த பாவங்களிலிருந்து' இயேசுவின் இரத்தத்தால் அவர்கள் மன்னிப்புப்பெறுகிறார்கள். ரோமர் 3:25.

இந்த ஆத்துமாக்கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்று, புதிதான ஜீவனுள்ளவர்களாய், தேவகுமாரனுடைய காலடிகளில் நடக்கவும், அவருடைய குணத்தைப் பிரதிபலிக்கவும், அவர் பரிசுத்தராயிருப்பதுபோல தங்களைப் பரிசுத்தப்படுத்தவும் நடக்க எழுகிறார்கள். முன்பு அவர்கள் வெறுத்த காரியங்கள் இப்போது அவர்களுக்குப் பிடிக்கின்றன; முன்பு அவர்கள் விரும்பின காரியங்கள் இப்போது பிடிக்கவில்லை. அகந்தைபோய் தாழ்மையும், தற்புகழ்ச்சிபோய் அக்கறையும், ஆணவம் போய் தன்னடக்கமும் வருகிறது. குடிகாரர்களுக்குத் தெளிந்த புத்தி வருகிறது; மோசமானவர்களுக்கு நற்புத்தி வருகிறது. மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பை

நாடாமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தை நாடுவார்கள். 1பேதுரு 3:3,4.

மனதைத் தூண்டுகிற அழைப்பைப் பெற்ற பாவிகள் எழுப்புதல் அடைந்தார்கள். சுயத்தை மறுப்பதற்கு தயங்காமல், கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடுவதை சந்தோஷமாக எண்ணின ஆத்துமாக்களில் கனிகள் காணப்பட்டன. இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டோரின் வாழ்க்கை மாறினதைப் பிறர் கண்டனர். அன்பு ஆவிக்குரிய எழுப்புதல் ஏற்பட்ட சமயங்களிலெல்லாம், இத்தகைய விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால், இக்கால எழுப்புதல்களில், குறிப்பிடத்தக்க ஒரு வித்தியாசம் காணப்படுகிறது. அதிகமானோர் மனமாற்றம் பெறுகிறார்கள்; ஆலயம்செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதற்காக, ஆவிக்குரிய வாழ்க்கையின் தரம் உண்மையாகவே அதிகரித்திருக்கிறதென அதை வைத்துச் சொல்லமுடியவில்லை. பிரகாசமாக ஜொலிக்க ஆரம்பிக்கும் தீபம் சீக்கிரமே அணைந்துவிடுகிறது.

பிரபல எழுப்புதல் கூட்டங்கள் இன்று மக்களுடைய உணர்ச்சி சார்ந்து இருக்கின்றன; புதிதான, வியப்பூட்டுகிற காரியங்களைத் தெரிந்துகொள்ளும் ஆசையை உண்டுபண்ணுகின்றன. அவ்வாறு மனம்மாறுகிறவர்கள் வேதாகமச் சத்தியத்திற்குச் செவிகொடுக்க விரும்புவதில்லை. கூட்டங்களில் அவர்களுடைய உணர்ச்சி தூண்டப்படாவிட்டால், அவற்றில் அவர்களுக்கு நாட்டம் ஏற்படுவதில்லை.

உண்மையாகவே மனமாறுகிற ஆத்துமாக்களுக்கு தேவனோடுள்ள உறவும், நித்திய காரியங்களும்தான் வாழ்க்கையில் மகத்தானவையாகத் தோன்றும். இன்றுள்ள பிரபலமான சபைகளில் தேவனிடம் அர்ப்பணிக்கிற ஆவி இருக்கிறதா? மனமாறுகிறவர்கள் அகந்தையையும் உலக ஆசையையும் விட்டொழிப்பதில்லை. தாங்கள் மனமாறுவதற்கு முன்பு இருந்த நிலையை மாற்றுவது இல்லை; சுயத்தை மறுப்பது இல்லை; இயேசுவின் தாழ்மையையும்

சாந்தத்தையும் பின்பற்றுவதும் இல்லை. பல சபைகளில் தேவ பக்தி என்பது கிட்டத்தட்ட இல்லாமல் போய்விட்டது.

கிறிஸ்துவின் உண்மைச் சீடர்கள்

விசுவாசம் வெகுவாகக் குறைந்துவரும் நிலையிலும் கிறிஸ்துவை உண்மையோடு பின்பற்றுகிறவர்கள் அந்தச் சபைகளிலும் இருக்கிறார்கள். அப்போஸ்தலர்களின் காலத்திற்குப்பிறகு கண்டிராத ஆதிபக்தியை உண்டாக்கு கிற மாபெரும் எழுப்புதல் ஒன்று தேவனுடைய இறுதி நியா யத்தீர்ப்பு பூமியில் வருவதற்குமுன் தேவமக்கள்மத்தியில் உண்டாகும். தேவ ஆவியானவர் ஊற்றப்படுவார். தேவன்மேலும் அவருடைய வார்த்தையின்மேலும் உள்ள அன்பை இவ்வுலகப் பற்று போக்கடித்துள்ள சபைகளிலி ருந்து அநேகர் வெளிவருவார்கள். ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்கென ஒருகூட்ட மக்களை ஆயத்தப் படுத்தும் மாபெரும் சத்தியங்களை ஏராளமான ஊழியர் களும் மக்களும் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வார்கள்.

ஆத்துமாக்களின் சத்துரு இந்தப் பணியைத் தடுக்க விரும்புகிறான். அப்படியொரு எழுப்புதல் ஏற்படுவதற்கு முன் போலி எழுப்புதலை ஏற்படுத்தி, நற்பணியைத் தடை செய்ய முயல்வான். எந்தச் சபைகளையெல்லாம் அவன் தன் அதிகாரத்தின்கீழ் வைத்திருக்கிறானோ, அங்கெல்லாம் தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதங்கள் ஊற்றப்படு வதாகக் காட்டுவான். வேறொரு ஆவி அங்குக் கிரியை செய்துகொண்டிருக்க, 'தேவன் அதிசயவிதமாகக் கிரியை செய்கிறார்' என்று ஏராளமானோர் மகிழ்ச்சியடைவார்கள். பக்திமார்க்கத்தின் போர்வையில் தன் செல்வாக்கை கிறிஸ் தவ உலகத்திற்குள் பரப்புவதற்கு சாத்தான் முயல்வான். மெய்யோடு பொய்கலந்து, ஒருவித உற்சாக உணர்வை ஏற் படுத்துவதால், வழிவிலகலுக்கு வழிபிறக்கிறது.

அப்படிப்பட்ட இயக்கங்களின் தன்மையை, தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் கண்டுபிடிப்பது கடினமல்ல. வேதாகமத்தின் சாட்சியை மனிதர் புறக்கணிக்கும்போதும், தெளிவான சத்தியங்களை விட்டுத் திரும்பும்போதும், அங்கே தேவஆசீர்வாதம் அருளப்படாதென்று உறுதியாகச்

சொல்லலாம். சுயமறுப்பும் உலகஆசைமேல் வெறுப்பும் இருந்தால்தான், ஆத்துமாக்களைச் சோதிக்கும் தெளிவான சத்தியங்களைப் புறக்கணிக்காமல் இருக்கமுடியும். 'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்' எனும் விதியை வைத்துப்பார்த்தால், இத்தகைய இயக்கங்கள் தேவஆவியின் கிரியையால் உருவாகவில்லை என்பதைக் கண்டுகொள்ளலாம். மத் 7:16.

தேவவார்த்தையின் சத்தியங்கள்தாம் சாத்தானுடைய வஞ்சகங்களுக்கு எதிரான கேடகங்கள். இந்தச் சத்தியங்களைப் புறக்கணிப்பதுதான் இன்று உலகில் பெருமளவில் காணப்படும் தீமைகளுக்கு வழிவகுத்துள்ளது. நியாயப்பிரமாணத்தின் முக்கியத்துவத்தைப் பலர் மறந்துவிட்டார்கள். தேவனுடைய கற்பனைபற்றி தவறாகக் கூறப்படும் கருத்தால் 'மனமாற்றம், பரிசுத்தமாக்கப்படுதல்' போன்றவற்றில் தவறான கொள்கைகள் புகுந்துவிட்டன; பக்தியின் தரம் குறைந்துவிட்டது. இன்றைய எழுப்புதல் கூட்டங்களில் தேவ ஆவியானவரின் பிரசன்னம் காணப்படாததின் இரகசியம் இதுதான்.

சுயாதீனப் பிரமாணம்

கிறிஸ்து தமது மரணத்தின்மூலம் நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டதாக கிறிஸ்தவ ஊழியர்கள் பலர் போதிக்கிறார்கள். நியாயப்பிரமாணம் சுமக்கமுடியாப் பாரமென்று சிலர் கூறுகிறார்கள். நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை 'நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்படுதல்' என்கிறார்கள்; நற்செய்தியின்கீழ் 'விடுதலை' மாத்திரமே உண்டென்கிறார்கள்.

ஆனால், தேவனுடைய பரிசுத்த பிரமாணம்பற்றி தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் அப்படி நினைக்கவில்லை. 'நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே(சுயாதீனத்திலே) நடப்பேன்' என்கிறார் தாவீது. சங்கீதம் 119:45. 'சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணம்' என்கிறார் யாக்கோபு. யாக். 1:25. 'ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள்வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும்

அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கிய வான்கள்' என்று ஆசீர்வதிக்கிறார் யோவான். வெளி 22:14.

நியாயப்பிரமாணத்தை மாற்றவோ ஒதுக்கவோ வழி இருந்தால், பாவத்தின் தண்டனையிலிருந்து மனிதரை இரட்சிக்க, கிறிஸ்து மரித்திருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. 'வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவதற்கு' தேவகுமாரன் வந்தார். ஏசா 42:21. 'நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல் லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது' என்றார். மத்தேயு 5:17,18. தம்மைப்பற்றி அவர், 'என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது' என்கிறார். சங்கீதம் 40:8.

தேவபிரமாணம் மாறாத் தன்மையுள்ளது; தன்னைக் கொடுத்தவரின் குணத்தை வெளிப்படுத்துவது. தேவன் அன்புள்ளவர்; அவருடைய பிரமாணமும் அன்பே உருவா னது. 'அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலா யிருக்கிறது.' ரோமர் 13:10. 'உம்முடைய வேதம் சத்தியம். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்.' சங் 119:142,172. "நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" என்கிறார் பவுல். ரோமர் 7:12. இப்படிப்பட்ட பிரமாணம், அதைக் கொடுத்தவர் போலவே மாறாதது.

தேவனுடைய பிரமாணத்தோடு மனிதரை இசையச் செய்து, தேவனோடு ஒப்புரவாக்கும் வேலையைத்தான் மனமாற்றமும் பரிசுத்தமாகுதலும் செய்கின்றன. ஆதியில் மனிதன், தேவபிரமாணத்தோடு முற்றிலும் இசைந்திருந் தான். ஆனால் பாவமானது, அவனுடைய சிருஷ்டிகரிட மிருந்து அவனைப் பிரித்துவிட்டது. அவனுடைய இருத யம் தேவபிரமாணத்திற்கு எதிராகக் கலகம்செய்தது. 'மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியா

மலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது' ரோமர் 8:7. ஆனால், தேவனோடு மனிதன் ஒப்புரவாகவும், தன் சிருஷ்டிகரோடு அவன் இசைந்திருக்கவும், 'தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'. இது புதுபிறப்பின் ஓர் அனுபவம்; இல்லையேல், அவன் 'தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்'. யோவான் 3:16,3.

பாவ உணர்த்துதல்

பாவத்தை உணர்வதுதான் தேவனோடு ஒப்புரவாவதற்கான முதல்படி. 'நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது' என்கிறது 1 யோவான் 3:4; ரோமர் 3:20. பாவி தன் பாவத்தை உணரவேண்டுமானால், தேவனுடைய கண்ணாடிமுன் நின்று, தன் குணத்தைச் சோதிக்க வேண்டும். நீதியான குணத்தின் பரிபூரணத்தை அது காட்டும்; அவன் தன் குணக்குறைபாட்டைக் காண உதவும்.

நியாயப்பிரமாணமானது மனிதனுக்கு அவனுடைய பாவத்தை வெளிப்படுத்துகிறது. ஆனால், பாவத்தை அதனால் அகற்றமுடியாது. மீறுகிறவனுக்கு மரணம்தான் தண்டனையென அது அறிவிக்கிறது. பாவத்தின் சீர்கேடு அல்லது ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து கிறிஸ்துவின் நற்செய்தி மட்டுமே அவனை விடுவிக்கமுடியும். தேவ பிரமாணத்தை அவன் மீறுவதால், மனந்திரும்பி தேவனிடம் செல்லவேண்டும்; கிறிஸ்துவையும் அவருடைய தியாக மரணத்தையும் விசுவாசிக்கவேண்டும். அப்படியாக அவன் 'முற்காலத்தில் நடந்த பாவங்களுக்கு' மன்னிப்பு பெற்று, தேவனுடைய பிள்ளையாகிறான். ரோமர் 3:25.

பாவமன்னிப்பும் இரட்சிப்பும் – மார்ட்டின் லூதர்

தேவனிடம் சமாதானம்பெற விரும்பின மார்ட்டின் லூதர் அதற்காக துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். அடிமைவேலைசெய்து, வீடுவீடாகப் பிச்சையெடுக்க வேண்டியிருந்தது. இந்த அவமானங்களை எல்லாம் பொறுமையோடு தாங்கிக்கொண்டார்; தன் பாவம்தீர இவையெல்

லாம் அவசியமென்று மார்ட்டின் லூதர் நினைத்தார்.

'தூங்காமல் உபவாசமிருத்தல், தனக்குதானே கசையடி கொடுத்தல்' என்று தன் பாவஇயல்புகளை அடக்குவதற்கு மிகவும் தீவிரமான ஒரு வாழ்க்கையை மேற்கொண்டார். அதுபற்றி அவர், "துறவற வாழ்க்கையால் ஒருவன் பரலோகத்தைப் பெறமுடியுமானால், நிச்சயம் பரலோகத்திற்கு நான் தகுதிபெற்றிருப்பேன். நான் அப்படியே வாழ்ந்திருந்தால், மரிக்கும்மட்டும் நான் என்னை சித்திரவதை செய்துகொண்டுதான் இருந்திருப்பேன்"[1] என்கிறார். எவ்வளவோ முயன்றும், பாரப்பட்ட அவருடைய ஆத்துமாவுக்கு விடுதலை கிடைக்கவில்லை. மனமுறிவால் அமிழ்ந்து போகும் நிலைக்கு ஆளானார்.

எல்லாம் இழந்துவிட்டதாகத் தெரிந்தநிலையில் நண்பர் ஒருவரை அவருக்கு அறிமுகப்படுத்தினார் தேவன். ஸ்ட்டௌப்பிட்ஸ் எனும் அந்த நபர் வேதவார்த்தையை லூதருக்கு விளங்கினார்; சுயத்தை நோக்காமல் இயேசுவை நோக்குமாறு கூறினார். "உன் பாவங்களின்நிமித்தம் உன்னையே நீ சித்திரவதை செய்யாமல், மீட்பரின் கரங்களில் உன்னை ஒப்புக்கொடுத்துவிடு. அவரையும் அவருடைய நீதியான வாழ்க்கையையும் அவருடைய பாவநிவாரண மரணத்தையும் விசுவாசி. தேவனுடைய தயவின் நிச்சயத்தை நீ பெறும்படி, தேவகுமாரன்தாமே மனிதனாக வந்தார். முந்தி உன்னில் அன்புகூர்ந்தவரிடம் நீ அன்பாயிரு"[2] என்று அறிவுறுத்தினார். அவருடைய வார்த்தைகள் லூத்தரின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. துக்கப்பட்டிருந்த அவருடைய ஆத்துமாவில் சமாதானம் பிறந்தது.

அதன்பிறகு, பிரசங்க மேடைகளிலிருந்து லூத்தருடைய எச்சரிப்பின் தொனி எதிரொலிக்க ஆரம்பித்தது. பாவத்தின் அருவருப்பான தன்மையை மக்களுக்கு எடுத்துரைத்தார்; மனிதன் தன் சுயகிரியைகளால் பாவப்பழியிலிருந்து விடுதலைபெறவோ, அதன் தண்டனை

---

[1] J. H. Merle D' Aubigne, History of the Reformation of the Sixteenth Century, bk 2, ch3.

[2] Ibid, bk 2, ch 3.

யிலிருந்து தப்பவோ முடியாது. தேவனிடம் மனந்திரும்பிச் செல்வதும், கிறிஸ்துவில் விசுவாசம்வைப்பதும் மட்டுமே பாவியை இரட்சிக்கமுடியும். கிறிஸ்துவின் கிருபையை விலைகொடுத்து வாங்கமுடியாது; அது இலவசம். பாவ மன்னிப்பை விலைகொடுத்து வாங்கத்தேவையில்லை என்றும், சிலுவையில் அறையப்பட்ட மீட்பரை விசுவாசத் தோடு நோக்கிப்பார்க்கவேண்டுமென்றும் ஆலோசனை கூறினார். வேதனையாளன் தன் சொந்த அனுபவத்தைக் கூறி, கிறிஸ்துவை விசுவாசித்தபிறகுதான், சமாதானமும் சந்தோஷமும் தனக்குக் கிடைத்ததைச் சொன்னார்.

பாவமன்னிப்பு: கீழ்ப்படிதல் தேவையில்லையா?

பாவம் மன்னிக்கப்பட்ட பாவி, அதன்பிறகு தேவகட்டளையை மீறலாமா? அதாவது, 'விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே.' 'பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?' என்கிறார் பவுல். 'நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல' என்கிறார் யோவான். புதிதாகப் பிறக்கும்போது, இருதயம் தேவனோடு இசைகிறது; தேவகட்டளைக்கு ஒத்துப்போக முடிவுசெய்கிறது. பாவியில் இந்த மாற்றம் நிகழ்ந்ததும், அவன் மரணத்திற்குப் பதிலாக ஜீவனைப் பெறுகிறான்; கலகத்திற்குப்பதிலாகக் கீழ்ப்படிதலைப் பெறுகிறான்; மீறுதலுக்குப் பதிலாக மெய்ப்பற்றைப் பெறுகிறான். பழைய வாழ்க்கை ஒழிகிறது; ஒப்புவாகுதலும் அன்பும் விசுவாசமும் உடைய புதிய வாழ்க்கை ஆரம்பிக்கிறது. அப்போது, 'மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்.' 'உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுவதும் அது என் தியானம்' என்பது ஆத்துமாவின் பாடலாக இருக்கும். ரோமர் 3:31; 6:2; 1 யோவான் 5:3; ரோமர் 8:4; சங். 119:97.

நியாயப்பிரமாணம் இல்லாமல், பாவத்தைப் பற்றின மெய்யுணர்வை மனிதர்கள் பெறமாட்டார்கள்; மனந்திரும்ப

வேண்டியதின் அவசியத்தை உணரமாட்டார்கள்; பாவத்தைப் போக்க கிறிஸ்து இரத்தம் சிந்தவேண்டியதிருந்ததை உணரமாட்டார்கள். இருதயத்தில் மெய்யான மாற்றம் இல்லாமல், வாழ்க்கையில் சீர்திருத்தம் இல்லாமல், இரட்சிப்பின் நம்பிக்கையை மேலோட்டமாக ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவோடு ஐக்கியமே இல்லாமல் சபையில் சேருவார்கள்.

பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன?

தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் புறக்கணிப்பதால் பரிசுத்தமாக்கப்படுதல்பற்றி தவறான கருத்துகள் எழுகின்றன. ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இந்தக் கருத்துகளை பலர் ஏற்றுக்கொள்கிறார்கள்.

''நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவ சித்தம்'' என்கிறார் பவுல். பரிசுத்தமாகுதலைப் பெறும்விதத்தை வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. 'உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்' என்று தம் சீடர்களுக்காக வேண்டிக்கொண்டார் இரட்சகர். விசுவாசிகள் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்கிறார் பவுல். 1தெச 4:3; யோவான் 17:17; ரோமர் 15:15.

ஆவியானவரின் வேலை என்ன? 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்' என்று சீடர்களிடம் கூறினார் இயேசு. யோவான் 16:13. 'உம்முடைய வேதம் சத்தியம்' என்கிறார் சங்கீதக்காரர். தேவனுடைய கற்பனை, 'பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும்' இருப்பதால், அந்தக் கற்பனைக்குக் கீழ்ப்படிவதால் உருவாகும் குணமும் பரிசுத்தமானதாகத்தான் இருக்கும். அப்படிப்பொரு குணமுடைய பூரண முன்மாதிரி கிறிஸ்துதான். "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொள்கிறேன்", "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்" என்கிறார். யோவான் 15:10; 8:29. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவரைப் போல் மாறவேண்டும்; பிரமாணத்தின் நியதிகளுக்கு இசைவானதாய் அவர்களுடைய குணங்கள் தேவ கிருபையால் மாறவேண்டும். வேதம் கூறும் பரிசுத்தமாகுதல் இதுதான்.

விசுவாசத்தால்மாத்திரமே

கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும், இருதயத்தில் வாசஞ்செய்யும் ஆவியானவரின் வல்லமையாலும்தான் இந்த மாற்றம் ஏற்படமுடியும். கிறிஸ்தவனுக்குச் சோதனைகள் நிச்சயம் வரும்; ஆனால், நித்தமும் அவன் அதற்கு எதிராகப் போராடுவான். அங்குதான் கிறிஸ்துவின் உதவி அவசியம். மனிதனின் பெலவீனத்தோடு தேவபெலம் இணைகிறது. 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்' எனும் விசுவாசத்தொனி எழும்புகிறது. 1கொரி 15:57.

பரிசுத்தமாக்கப்படுதலின் பணி படிப்படியாக நடைபெறும் ஒன்று. மனம்மாறும் பாவி தேவனிடம் சமாதானமடைவது, கிறிஸ்தவ வாழ்க்கையின் ஓர் ஆரம்பம்தான். தொடர்ந்து அவன் 'பூரணனாகும்படி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷனாகும்வரை' வளரவேண்டும். 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரமஅழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்'. எபி 6:2; எபே 4:11; பிலி 3:14.

வேதாகமம் சொல்கிற பரிசுத்தமாகுதலைப் பெறுகிறவர்கள் தாழ்மை உள்ளவர்களாக இருப்பார்கள். சர்வ வல்லவரின் பூரணத் தன்மையோடு ஒப்பிடும்போது, தாங்கள் அபாத்திரரென்று கண்டுகொள்வார்கள். மெய்யான பரிசுத்தமாகுதலுக்கு ஒரு நல்லமுன்மாதிரி தானியேல் தீர்க்கதரிசி. தன்னுடைய மக்களுக்காக தேவனிடம் அவர் மன்றாடினபோது, தான் நல்லவனென்றோ பரிசுத்தனென்றோ அவர் சொல்லவில்லை. மாறாக, இஸ்ரவேலரின் பாவத்தில் தனக்கும் பங்குண்டென்று கூறினார் மதிப்பிற்குரிய அந்தத் தீர்க்கதரிசி. தானி 10:11; 9:15,18,20; 10:8,11.

கல்வாரிச் சிலுவையின் நிழலில் நடந்துசெல்வோர் தங்கள் பாவத்திலிருந்து விடுதலைபெறுவதற்கு, சுயமேன்மையோ பெருமைபாராட்டுதலோ காணப்படக்கூடாது. தங்களுடைய பாவம்தான், தேவகுமாரனுடைய இருதயம் கிழியத்தக்கதான வேதனையை ஏற்படுத்தியதென்று அவர்கள் உணரவேண்டும்; சுயத்தை வெறுக்குமாறு அந்த உணர்வு அவர்களை வழிநடத்தவேண்டும். இயேசுவோடு

நெருங்கி ஜீவிப்பவர்களே மனிதனின் பாவத்தன்மையையும் இழிநிலையையும் நன்றாகப் பகுத்தறியமுடியும்; சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த இரட்சகரின் புண்ணியம்தான் அவர்களுடைய ஒரே நம்பிக்கையாக இருக்கும்.

கிறிஸ்தவ உலகம் இன்று முக்கியப்படுத்துகிற பரிசுத்தமாகுதலில், தன்னை மேன்மைப்படுத்தும் மனநிலை காணப்படுகிறது; நியாயப்பிரமாணம் புறக்கணிக்கப்படுகிறது; வேதாகமத்திற்கும் பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் சம்பந்தமில்லாததுபோல் காட்டப்படுகிறது. 'பரிசுத்தமாக்கப்படுதல் என்பது உடனடியாக நடைபெறும் ஒரு மாற்றம்' என்றும், 'விசுவாசத்தினால் பூரண பரிசுத்தத்தை அடையலாம்' என்றும் அதன் அபிமானிகள் சொல்கிறார்கள். 'நம்பினால்மட்டும் போதும், ஆசீர்வாதம் கிடைத்துவிடும்' என்கிறார்கள். அதைப் பெறுகிறவர் வேறெந்த முயற்சியும் செய்யத் தேவையில்லாததுபோல் பேசுகிறார்கள். தேவ கட்டளையின் அதிகாரத்தை அவர்கள் மறுதலிக்கிறார்கள்; கற்பனைகளைக் கைக்கொள்ளும் கடமையிலிருந்து தாங்கள் விடுதலைபெற்றுள்ளதாகவும் கூறுகிறார்கள். தேவ இயல்பையும் சித்தத்தையும் விவரிக்கும் நியதிகளுக்கு இசைந்துபோகாமல் பரிசுத்தமாக இருப்பது சாத்தியமா?

கிரியைகளில்லாத விசுவாசம்பற்றிக்கூறும் வஞ்சகமான இக்கருத்து தேவனுடைய வார்த்தையின் சாட்சிக்கு விரோதமாக இருக்கிறது. என்ன நிபந்தனைகளின்பேரில் இரக்கத்தைப் பெறமுடியுமோ, அந்த நிபந்தனைகளுக்கு ஒத்துப்போகாமல், பரலோகத்தின் தயவை விசுவாசம் பெற்றுத்தராது. அப்படித் தயவைப் பெறலாமென நினைப்பது துணிகரம். யாக்கோபு 2:14-24.

தேவனுடைய கற்பனைகளில் ஏதாவது ஒன்றை விருப்பத்தோடு மீறினாலும், பரிசுத்தராகலாமென்று உங்களை ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். தெரிந்தே பாவம்செய்தால், ஆவியானவரின் சத்தத்தை அது அமுக்கிவிடும்; தேவனிடமிருந்து ஆத்துமாவைப் பிரித்துவிடும். அன்பைப்பற்றிதான் முழுக்கமுழுக்கப் பேசுகிறார் யோவான். ஆனாலும், தேவனுடைய பிரமாணத்தை மீறிக்கொண்டே,

தாங்கள் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளதாகக் கூறுவோரின் உண்மைக் குணத்தை விவரிக்கவும் அவர் தவறவில்லை. 'அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்'. 1யோவான் 2:4,5. ஒவ்வொரு மனிதனும் அவன் சொல்வது உண்மைதான் என்று வெளிப்படுவதற்காகச் சோதிக்கப்படுகிறான். தேவனுடைய போதகங்களை அவமதித்து, ஏளனமாக எண்ணினால், 'கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப்' போதித்தால், அவர்களுடைய பேச்சு ஆதாரமற்றதென அறியலாம்.

தன்னில் பாவம் இல்லையென ஒருவன் சொன்னால், அவனிடத்தில் பரிசுத்தமில்லை என்பதற்கு அது அத்தாட்சி. தேவனுடைய மெய்யான பரிசுத்தம்- தூய்மைபற்றியும், பாவத்தின் தீமை-மோசம்பற்றியும் மெய்யறிவு இல்லாதவனாக அவன் இருப்பான். கிறிஸ்துவைவிட்டு எவ்வளவு தூரம் விலகியிருக்கிறானோ, அவ்வளவுக்கு அவன் தன் கண்ணுக்கு நீதிமானாகத் தெரிவான்.

வேதாகமப் பரிசுத்தமாகுதல்

பரிசுத்தமாகுதலில் ஒரு மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. 1தெச 5:23. கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களைப் 'பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க' வேண்டும். ரோமர் 12:1. மனப்பலத்தையும் சரீரப்பலத்தையும் கெடுக்கிற ஏதாவது ஒரு பழக்கம் ஒருவனிடம் இருந்தால், அவன் தன் சிருஷ்டிகருக்குச் சேவைசெய்வதற்கான தகுதியை இழந்துவிடுகிறான். தங்கள் முழு இருதயத்தோடு தேவன் மேல் அன்பாக இருப்பவர்கள், தங்களுடைய திறன்கள் ஒவ்வொன்றையும் தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு இசைந்ததாக்க முயன்றுகொண்டே இருப்பார்கள்; அதன் மூலம், அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிற திறனைப் பெறுவார்கள். தங்கள் பரலோகப் பிதாவிற்கு தங்களையே காணிக்கையாகக் கொடுக்கும்போது, அந்தக் காணிக்கை

யைத் தங்கள் இச்சைகளாலும் உணர்ச்சிகளாலும் பெலவீனப்படுத்தமாட்டார்கள்; தீட்டுப்படுத்தவும் மாட்டார்கள்.

பாவ ஆசைகளைத் திருப்திப்படுத்த முயல்கின்றபோதெல்லாம், ஆவிக்குரிய உணர்வும் யோசிக்கும் திறனும் மழுங்கிப்போகின்றன; ஆவியானவரும் வேதமும் சிறிதளவு தாக்கத்தையே இருதயத்தில் ஏற்படுத்தமுடியும். அதனால், 'மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்'. 2கொரி. 7:1.

கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்ளும் எத்தனைபேர் பெருந்தீனியாலும் மதுபானங்களாலும் சிற்றின்பநுகர்வாலும் தங்களிலுள்ள தேவசாயலைத் தீட்டுப்படுத்துகிறார்கள்! சபையும் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பால் தனது கருவூலத்தை நிறைக்கமுடியாமல், தீமையை ஊக்கப்படுத்துவதன்மூலம் நிறைக்கப்பார்க்கிறது. இன்றைய ஆலயங்களுக்கு இயேசு வந்து, மதத்தின் பெயரில் அங்கே நடைபெறும் கொண்டாட்டங்களைக் கண்டால், தேவாலயத்திலிருந்து காசுக்காரரைத் துரத்தியதுபோல, இந்தத் தீட்டுக்காரரையும் துரத்தமாட்டாரா?

'உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.' 1கொரி 6:19,20. தன் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்று அதைப் பேணுகிறவன் தீயப்பழக்கத்திற்கு அடிமைப்படமாட்டான். அவனுடைய திறன்கள் கிறிஸ்துவுக்கே சொந்தம்; அவனுடைய சொத்தும் கிறிஸ்துவுக்கே சொந்தம். தேவன் தந்த மூலதனத்தை அவன் எப்படி வீணே செலவிடமுடியும்?

தங்கள் லௌகீக இச்சைகளை நிறைவேற்ற, பெயர்க் கிறிஸ்தவர்கள் வருடாவருடம் ஏராளமான பணம் செலவிடுகிறார்கள். தசமபாகத்தையும் காணிக்கையையும் தேவ

னிடமிருந்தே கொள்ளையடிக்கிறார்கள்; ஏழைகளுக்கும் நற்செய்திப் பணிக்கும் உதவ மனமில்லாமல், அழிவைத் தருகிற இச்சைகளுக்காக, பணத்தைக் கொட்டித்தீர்க்கிறார் கள். கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள் வோர் உண்மையிலேயே பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தால், பிரயோஜனமற்றவையும் வேதனைத்தரக்கூடியவையுமான சிற்றின்பங்களுக்காக தங்கள் பொருட்களைச் செலவழிக்கா மல், ஆண்டவருடைய கருவூலத்திற்கு அவற்றை அனுப்பு வார்கள். இச்சையடக்கத்திற்கும் சுயமறுப்புக்கும் கிறிஸ்த வர்கள் முன்மாதிரியாக விளங்கவேண்டும். அப்போது உல கத்திற்கு வெளிச்சமாக அவர்கள் பிரகாசிக்கமுடியும்.

'மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவ னத்தின் பெருமையும்' மக்களில் அநேகரைப் பீடித்துள்ளது. 1யோவான் 2:16. ஆனால், கிறிஸ்துவின் பின்னடியாருக்கு பரிசுத்த அழைப்பு உள்ளது. 'அவர்கள் நடுவிலிருந்து புறப் பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்' என்கிறார் தேவன். நிபந்தனைப்படி நடப்போரிடம், 'நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப் பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப் பீர்கள்' என்று ஆண்டவர் வாக்குரைக்கிறார். 2கொரி 6:17,18.

தேவனிடம் நேரடியாகவே செல்லலாம்

விசுவாசமும் கீழ்ப்படிதலுமுள்ள ஒருவர் எடுத்து வைக்கிற ஒவ்வோர் அடியும், உலகத்தின் ஒளியானவரிடம் அவரைக் கொண்டுசெல்கிறது. நீதியின் சூரியனுடைய பிரகாசமான ஒளிக்கதிர்கள் தேவ ஊழியர்மேல் பிரகாசிக் கும்; அவருடைய வெளிச்சத்தை அவர்கள் பிரதிபலிக்க வேண்டும். பரலோகத்தில் இருக்கும் ஒளியின் மகிமைதான் தங்களைப் பிரகாசிக்கச்செய்கிறதென்று நட்சத்திரங்கள் நமக் குச் சொல்கின்றன. அதுபோல, தேவன் ஒருவர் சிங்காச னத்தில் வீற்றிருக்கிறதையும், அவருடைய குணத்தை நாம் போற்றிப்பின்பற்றவேண்டும் என்பதையும் கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தவேண்டும். அவருடைய சாட்சிகளில் அவ ருடைய குணத்தின் பரிசுத்தத்தன்மை வெளிப்படும்.

கிறிஸ்துவின் புண்ணியங்களால் சர்வவல்லவரின்

சிங்காசனத்தருகே செல்கிற சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். 'தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?' ரோமர் 8:32. இயேசுவும், 'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்' என்கிறாரே. லூக்கா 11:13; யோவான் 14:14; யோவான் 16:24.

எனவே, தேவன் அங்கீகரிக்கிற, ஆசீர்வதிக்கிற ஒரு வாழ்க்கையை வாழும் சிலாக்கியம் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. நாம் குற்றவாளிகளாக எப்போதும் இருளில் இருக்கவேண்டுமென்பது, நம் பரலோகப் பிதாவின் சித்தமல்ல. இருதயம் முழுவதும் சுயத்தால் நிறைந்திருந்தால், தலைவணிந்தாலும் அது உண்மையான தாழ்மை அல்ல. நாம் இயேசுவிடம் சென்று சுத்திகரிக்கப்பட்டு, நியாயப்பிரமாணத்தின்முன் அவமானமும் நிந்தையுமின்றி நிற்கலாம்.

விழுந்துபோன ஆதாமின் புத்திரர்கள், இயேசுவின் மூலம் 'தேவனுடைய புத்திரர்' ஆகிறார்கள். 'அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை'. விசுவாசமும் வெற்றியும் சந்தோஷமும் உடையதாக கிறிஸ்தவ வாழ்க்கை திகழவேண்டும். 'கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்.' 'எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.' நெகே. 8:10; 1தெச. 5:16-18.

வேதாகமம் கூறும் மனமாற்றமும் பரிசுத்தமாகுதலும் இப்படிப்பட்ட கனிகளைத்தான் கொடுக்கும். நீதியான உன்னத நியதிகள் கற்பனையில் உள்ளன. அவற்றில் அக்கறை

காட்டாதபோது இப்படிப்பட்ட கனிகளைக் காண்பதும் அரிதாக இருக்கிறது. அதனால்தான், முந்தையக் காலங்களில் ஆவியானவரின் ஆழமான கிரியையால் ஏற்பட்ட எழுப்புதல்களை இப்போது காண்பது அரிதாக இருக்கிறது.

இயேசுவை நோக்கிப்பார்க்கும்போது நாம் மாற்றமடைகிறோம். தேவனுடைய குணத்தின் பூரணமும் பரிசுத்தமும் வெளிப்படுகிற நியாயப்பிரமாணத்தைப் புறக்கணிக்கும்போதும், மனிதரின் போதனைகளால் மக்களின் மனது ஈர்க்கப்படும்போதும், சபையில் பக்தி குறைய ஆரம்பிக்கும். தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுத்தால்தான், தேவனுடைய மக்கள் மத்தியில் விசுவாசமும் பக்தியும் உன்னத எழுச்சி அடையும்.

அதிகாரம் 7

நம்முடைய ஒரே பாதுகாப்பு

அந்தகார ஆவிகளின் வஞ்சக வல்லமையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு, வேதாகமத்தை ஆராயவேண்டுமென்று தேவன் தமது மக்களிடம் சொல்கிறார். மக்கள் வேத அறிவுபெறாதபடி தடுக்க, தன்னால் முடிந்த உபாயங்களை எல்லாம் சாத்தான் பயன்படுத்துகிறான். தேவபணியில் எழுப்புதல் ஏற்படும்போதெல்லாம், அவனும் தீவிரமாகச் செயல்பட ஆரம்பிக்கிறான். கிறிஸ்துவுக்கும் அவருடைய அடியார்களுக்கும் எதிரான கடைசி யுத்தம் சீக்கிரம் நிகழவிருக்கிறது. போலிகள் எல்லாம் மிகமிக உண்மையானவை போலத்தெரியும்; வேதாகமத்தை வைத்துதான் அவற்றில் வித்தியாசங் காணமுடியும்.

தேவனுடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிய முயல்கிறவர்கள் எதிர்ப்பையும் அவமானத்தையும் சந்திப்பார்கள். தேவவார்த்தை சொல்கிற அவருடைய சித்தத்தை அறிந்தால்மட்டுமே சோதனைகளைச் சகித்து, அவற்றை வெல்லமுடியும். தேவனுடைய குணத்தையும் ஆளுகையையும் நோக்கங்களையும் உள்ளபடி அறிந்து, அவற்றுகேற்ப நீங்கள் செயல்பட்டால்தான், உங்கள் தேவனை நீங்கள் கனம்பண்ணமுடியும். வேத சத்தியங்களால் தங்கள் இருதயத்தை நிரப்பினவர்கள்மட்டுமே, கடைசி மாபெரும்போராட்டத்தில் நிலைத்திருந்து, ஜெயம் பெற முடியும்.

இரட்சகர் மரித்து, உயிர்த்தெழ இருந்ததுகுறித்து அவர் சிலுவையில் அறையப்படுவதற்குமுன் தம் சீடர்களி

டம் கூறினார். அங்கிருந்த தேவதூதர்கள் அந்த வார்த்தை களை சீடர்களின் இருதயங்களிலும் சிந்தைகளிலும் பதிய வைத்தார்கள். ஆனால், சீடர்களின் சிந்தையிலிருந்து அந்த வார்த்தைகள் மறைய ஆரம்பித்தன. இயேசு மரித்து, சோதனை வந்தபோது, இயேசு தங்களை எச்சரித்ததை மறந்து, தங்கள் நம்பிக்கையை முற்றிலும் இழந்தார்கள். கிறிஸ்து தம் சீடர்களுக்குச் சொன்னதுபோலவே, நம் எதிர் காலம்பற்றியும் தீர்க்கதரிசனங்கள் சொல்கின்றன. ஆனால், அப்படி எதுவும் தேவன் தெரிவிக்காததுபோல, இந்த முக்கிய சத்தியங்களை அறியாமல் இருப்பவர்கள் ஏராளம்.

தேவன் எச்சரிக்கும்போது, பகுத்தறிவுள்ளவர்கள் அதைப் புரிந்துகொள்ளவேண்டுமென அவர் விரும்புகி றார். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழுது கொள்வதற்கு எதிராகக் கடுமையான நியாயத்தீர்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. வெளி 14:9-11. எனவே, **மிருகத் தின் முத்திரை என்னவென்பதையும், அதைப் பெறாதிருக்க என்ன செய்யவேண்டுமென்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.**[1] ஆனால், வேதாகமச் சத்தியமானது பாவ இருதயத்தின் ஆசைகளுக்கு எதிராக இருப்பதால், அநேகர் அதை விரும்புவதில்லை. அவர்கள் விரும்புகிற வஞ் சனைகளை சாத்தான் அவர்களுக்குக் கொடுக்கிறான்.

ஆனால், சகல உபதேசங்களுக்கும் தரக்கோலாக வும், சகல சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையாகவும் வேதாகமத்தைமாத்திரமே கருதும் ஒருகூட்ட மக்களை தேவன் தமக்கென வைத்திருக்கிறார். மேதைகளின் கருத்து கள், அறிவியலின் முடிவுகள், சபைகளின் தீர்மானங்கள் போன்றவற்றை வைத்து எந்தக் கொள்கையையும் மதிப் பிடக்கூடாது. 'கர்த்தர் என்ன சொல்கிறார்?' என்பதே ஒரு கொள்கை சரி அல்லது தவறு என்பதற்கு ஆதாரமாக இருக்கவேண்டும். மக்கள் தாங்களாகவே வேத வாக்கியங் களை ஆராய்வதற்குப் பதிலாக, போதகர்களையும் வேத வல்லுநர்களையும் தங்கள் வழிகாட்டிகளாக நோக்கிப்

---

[1] மாபெரும் போராட்டம் புத்தகத்தின் அத்தியாயம் 38 இல் இந்தக் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

பார்க்கும்படி சாத்தான் வழிநடத்துகிறான். இந்தத் தலைவர் களைக் கட்டுப்படுத்திவிட்டால், ஏராளமானவர்களை தன் வழிக்குக் கொண்டுவர முடியுமல்லவா?

கிறிஸ்து வந்தபோது, சாமான்யர்கள் சந்தோஷமாக அவருக்குச் செவிகொடுத்தார்கள். ஆனால், தப்பெண் ணங்களில் மூழ்கியிருந்த ஆசாரியர்களும் தலைவர்களும் 'கிறிஸ்துதான் மேசியா' என்பதற்கான ஆதாரத்தை மறுத் தார்கள். 'நம்முடைய ஆளுநர்களும் வேதபாரகர்களும் இயேசுவை நம்பவில்லையே, அது எப்படி?' என்று மக்கள் கேட்டார்கள். யூததேசம் தங்கள் மீட்பரை மறுதலிப்பதற்கு அந்தப் போதகர்கள்தாம் காரணமாயிருந்தார்கள்.

மனித அதிகாரத்தை உயர்த்துதல்

பிறர் மனச்சாட்சியை ஆளுவதற்கு மனிதர் தங்கள் அதிகாரத்தை உயர்த்துவார்களென்பது இயேசுவுக்கு முன் னரே தெரியும். பிறர் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்துகிற தன்மை எல்லாக் காலங்களிலும் சாபமாகத்தான் இருந்திருக் கிறது. குருடராகிய தலைவர்களைப் பின்பற்றக்கூடாதென அவர் எச்சரித்தவை பிற்காலத் தலைமுறையினருக்கு அறிவுரையாக எழுதிவைக்கப்பட்டுள்ளது.

வேத வாக்கியங்களை விளக்கும் அதிகாரம் மதக் குருக்களுக்குத்தான் உண்டென்று ரோமச் சபை உரிமை பாராட்டுகிறது. சீர்திருத்தத்திற்குப்பின்னர், வேதாகமம் எல்லோருக்கும் கிடைத்தாலும், காலாகாலமாக ரோம் வலி யுறுத்திவந்த நியதியால், புரொட்டஸ்டன்ட் சபையிலிருந்த பெரும்பாலானவர்கள் சொந்தமாக வேதாகமத்தை ஆராய் வதில்லை. சபைசொல்கிற விளக்கத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இவர்களுக்கும் கற்றுக் கொடுத் திருக்கிறார்கள். தங்கள் கொள்கைக்கு முரணாக இருந்த சரியான கொள்கைகளை வேதாகமம் தெளிவாகக் காட்டி னாலும், ஆயிரக்கணக்கானோர் அவற்றை ஏற்றுக்கொள்வ தில்லை.

மதக்குருக்களிடம் தங்கள் ஆத்துமாக்களை பலர் ஒப்படைக்கிறார்கள். தங்களை அறியாமலேயே இரட்ச கரின் போதகங்களைக் காணமுடியாமல் போய்விடுகிறது.

ஊழியக்காரர்கள் சொல்வதில் தவறே இருக்காதா? அவர்கள் வழிகாட்டிகள் என்பதை வேதம் உறுதிப்படுத்தாவிட்டால், அவர்கள் வழிகாட்டலை நாம் ஏற்கமுடியுமா? ஒழுக்கத்துணிவு இல்லாத அநேகர், மேதைகளின் கருத்துகளை ஏற்றுக்கொண்டு, பொய்யில் பிணைக்கப்படுகிறார்கள். நிகழ்காலச்சத்தியம் வேதத்திலிருந்து அறிவிக்கப்படுவதை உணருகிறவர்களும், மதக்குருக்களின் பேச்சைக் கேட்டு, வெளிச்சத்தைப் புறக்கணிக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரானவர்களோடு பாசம் எனும் பட்டுக்கயிற்றால் பலரைப் பிணைத்து, அவர்களைத் தன்னிடம் ஈர்க்கிறான் சாத்தான். பெற்றோர்-பிள்ளை உறவு, கணவன்- மனைவி உறவு, சமுதாய உறவு போன்ற பாசப்பிணைப்பில் அகப்படுகிறவர்கள் தங்கள் கடமையுணர்வின்படி நடப்பதற்குத் துணிவதில்லை.

'ஒருவன் என்ன விசுவாசிக்கிறான் என்பது முக்கியமல்ல; அவன் வாழ்க்கை சரியாக இருந்தால் போதும்' என்று பலர் சொல்கிறார்கள். ஆனால், விசுவாசம் ஒருவனுடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும். சத்தியம் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தும் அதை அலட்சியம்பண்ணுதல், அதைப் புறக்கணிப்பது ஆகும். அது வெளிச்சத்தை விட்டுவிட்டு இருளைத் தேர்ந்தெடுப்பதாகும்.

தேவ சித்தத்தை அறிவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கும்போது, பாவம்செய்துவிட்டு, அறியாமையால் செய்துவிட்டேனென்று சொல்லமுடியாது. பயணி ஒருவன் பல சாலைகள் பிரியும் இடத்திற்கு வருகிறான். ஒவ்வொரு சாலையும் எங்குச் செல்கிறதெனக் காட்ட கைகாட்டி அங்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்பைப் பார்க்காமல், ஏதாவது ஒரு சாலையில் செல்கிறானென்று வைத்துக் கொள்வோம். அவன் கபடற்றவனாக இருந்தால், அவனுடைய தேர்வில் தவறு இருக்காதென்று சொல்லமுடியுமா?

முதலாவது உன்னதக் கடமை

ஒருவனுக்கு நல்ல நோக்கம் இருந்தால்மட்டும் போதாது. தனக்குச் சரியாகத் தெரிவதைச் செய்தால் போதும் என்று சொல்லிவிடமுடியாது; தன் போதகர்

சொல்வதுபோல் நடந்தால் போதும் என்றும் சொல்லமுடியாது. ஒவ்வொருவரும் வேதாகமத்தைத் தானே ஆராய வேண்டும். பரலோகப் பயணத்திற்கு வழிகாட்டும் குறிப்புகள் அதில் உள்ளன; எதையும் அவர்கள் யூகிக்கக்கூடாது.

உண்மை என்னதென்று வேத வாக்கியங்களிலிருந்து அறியவேண்டும்; பிறகு அதன் வெளிச்சத்தில் நடக்க வேண்டும்; தன் முன்மாதிரியைப் பின்பற்றும்படி பிறரையும் ஊக்கப்படுத்தவேண்டும். இதுதான் பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் செய்யக்கூடிய, முதல் உன்னதக் கடமை. நம் எண்ணங்கள்பற்றியும் நாம் தேவனிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியதை மனதில்வைத்து, நாம் செல்லவேண்டிய பாதையைத் தீர்மானிக்கவேண்டும்.

பெரிய அறிவாளிகளென்று தங்களை நினைத்துக் கொள்கிற மேதைகள், 'வேதவாக்கியங்களில் இரகசிய ஆன்மிக உண்மைகள் இருப்பதால், வசனத்தை அப்படியே அர்த்தம் பார்க்கக்கூடாது' என்கிறார்கள். இவர்கள் பொய்ப் போதகர்கள். உருவகமாக அல்லது அடையாளமாகச் சொல்லப்பட்டவைதவிர பிற வசனங்களை அங்குள்ள சொற்கள் சொல்கிறபிரகாரம்தான் அர்த்தங்காண வேண்டும். வேதவசனங்களுக்கு அதில் உள்ளபடியே அர்த்தங் கண்டால், பொய்யான பாதையில் அலைந்து திரியும் ஆயிரக்கணக்கானோரை கிறிஸ்துவின் மந்தைக்குள் கொண்டுவருகிற வேலையை எளிதாக்கலாம்.

முக்கியமில்லையென மேதைகள் புறக்கணிக்கும் வேதவசனங்கள், கிறிஸ்துவின் பள்ளியில் படிப்போருக்கு ஆறுதலின் வசனங்களாக இருக்கும். அறிவுக்கூர்மையோடு வேதாகமத்தை ஆராய்கிறோம் என்பதை வைத்து, வேதாகமச் சத்தியத்தை அறியமுடியாது. ஒரே நோக்கத்தோடும், நீதியின்மேல் பசிதாகத்தோடும் ஆராய்ந்தால் வேதசத்தியத்தை அறிந்துகொள்ளலாம்.

ஜெபம்-வேதவாசிப்பைப் புறக்கணித்தல்

ஜெபம்செய்யாமல் வேதாகமத்தை வாசிக்கவே கூடாது. எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடியவற்றின் முக்கியத்துவத்தை உணரச்செய்வதும், கடினமான சத்தியங்க

ளைத் திரித்துப்பார்க்காமல் புரிந்துகொள்ளவைப்பதும் பரிசுத்த ஆவியானவரால்மட்டுமே முடியும். வேதத்தைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்தை பரலோகத்தூதர்கள் உருவாக்குகிறார்கள். அப்போதுதான் அதன் அழகு நமக்கு விளங்கும்; அதன் வாக்குறுதிகள் நம்மைப் பெலப்படுத்தும். ஒருவன் சோதிக்கப்பட்டால், உடனடியாக தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூரவேண்டும்; வசனமாகிய ஆயுதத்தோடு சாத்தானை எதிர்க்கவேண்டும்; வாக்குறுதிகளை நினைவுகூர முடியாத விசுவாசிகள், சோதனையை வெல்லமுடியாதென்று நினைக்கிறார்கள். ஆனால், கற்றுக்கொள்ளும் மனவாஞ்சையோடு உள்ளவர்களைச் சுற்றிலும் தேவதூதர்கள் இருக்கிறார்கள்; தேவையான சத்தியங்களை அவர்கள் நினைவுக்குக் கொண்டுவருவார்கள்.

'பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'. யோவான் 14:26. கிறிஸ்துவின் போதனைகள் ஏற்கனவே நம் மனதில் பதிந்திருந்தால்தான், சோதனை நேரங்களில் ஆவியானவர் அவற்றை நினைவுபடுத்தமுடியும்.

பூமியில் உள்ளவர்களின் முடிவு தீர்மானிக்கப்படுகிற வேளை வந்துவிட்டது. கிறிஸ்துவின் சீடன், 'ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்?' என்று கேட்க வேண்டும். அப் 9:6. தேவகாரியங்களில் ஆழமான அனுபவத்தைப் பெற நாம் முயலவேண்டும். ஒரு கணம்கூட தாமதிக்கமுடியாது. சாத்தானின் வஞ்சகப்பூமியில் நாம் இருக்கிறோம். வேத வீரர்களே, கண்ணயர்ந்துவிடாதீர்கள்!

'தாங்கள் தவறானவற்றைச் செய்வதில்லை' என்று பலர் தங்களைப் பாராட்டிக்கொள்கிறார்கள். தேவனுடைய தோட்டத்தின் மரங்களாக விளங்க, தவறுசெய்யாதிருப்பது மட்டும் போதாது; கனிகொடுக்கவேண்டும். இல்லையேல், 'பூமியை ஆக்கிரமித்துள்ள வீணான களைகள்' என்று பரலோகப் புத்தகத்தில் அவர்கள் குறியிடப்படுவார்கள். தேவ இரக்கத்தை அற்பமாக எண்ணி, அவருடைய கிருபையை அவமதித்தவர்களிடமும் நீடிய பொறுமையுள்ள அன்பு மன்றாடிக்கொண்டே இருக்கிறது.

பசுமைமாறா மரங்களுக்கும் மற்ற மரங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கோடைகாலத்தில் அதிகம் காண முடியாது. ஆனால், குளிர்காலம் தீவிரமடையும்போது, பசுமைமாறா மரங்கள் அப்படியே இருக்கும்; மற்ற மரங்களோ இலைகளை இழந்துவிடும். எதிர்ப்பு வலுத்தால், தாங்கமுடியாப் பிரச்சனை ஏற்பட்டால், உபத்திரவம் எழும்பினால், அரைகுறை மனம் உடையோரும் மாயக்காரரும் தங்கள் விசுவாசத்தைத் துறந்துவிடுவார்கள்; ஆனால், உண்மையான கிறிஸ்தவன், உறுதியாக நிற்பான். செழிப்பான நாட்களைக்காட்டிலும் இப்போது அவனுடைய விசுவாசம் பெலப்படும்; நம்பிக்கை பிரகாசிக்கும். 'அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.' எரேமியா 17:8.

Stuy well

அதிகாரம் 8

சத்தியத்தின் பாதுகாவலனாக

தேவன் சிருஷ்டிகர் எனும் உண்மையின் அடிப்படையில்தான், அவரைத் தொழுதுகொள்ளும் கடமை இருக்கிறது. 'நம்மை உண்டாக்கின கர்த்தருக்குமுன்பாக நாம் பணிந்துகுனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்' என்கிறார் சங்கீதக்காரர். சங்கீதம் 100:3; 95:6.

மனிதர் தங்கள் சிருஷ்டிகரைத் தொழவேண்டுமென்றும், தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் வெளி 14 அழைப்புவிடுக்கிறது. தேவன்தாம் சிருஷ்டிகரென அந்தக் கற்பனைகளில் ஒன்று நேரடியாகவே சுட்டிக்காட்டுகிறது. 'ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.' யாத் 20:10,11. ஓய்வுநாள்பற்றிக் கூறும்போது, "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளம்" என்று ஆண்டவர் சொல்கிறார். எசே 20:20. எல்லா மனிதரும் ஓய்வுநாளைக் கைக்கொண்டிருந்தால், சிருஷ்டிகரே பயபக்திக்கும் தொழுகைக்கும் பாத்திரரென்று மனிதனின் நினைவுகளும் எண்ணங்களும் அவரைநோக்கி இழுக்கப்பட்டிருக்கும்; ஒருக்காலத்திலும் சிலைவழிபாட்டுக்காரனோ, நாத்திகனோ, அவிசுவாசியோ தோன்றியிருக்கமாட்டான். ஓய்வுநாளைக் கைக்கொள்வது, 'வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின' உண்மையான தேவன்

மேல் மெய்ப்பற்று வைத்திருப்பதற்கு அடையாளமாக இருக்கிறது. தேவனைத் தொழுதுகொள்ளுமாறும், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுமாறும் கொடுக்கப்படுகிற அழைப்பானது, நான்காம் கற்பனையைக் கைக்கொள்ளுமாறு கொடுக்கப்படுகிற அழைப்பாகும்.

சத்தியம் மீண்டும் நிலைநாட்டப்படல்

கடைசி நாட்களில் நடைபெறும் ஓய்வுநாள் சீர்திருத்தம்பற்றி ஏசாயா முன்னுரைக்கிறது. "நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள்; என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது. இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப் பற்றிக்கொண்டிருந்து, ஓய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக் கொண்டிருக்கிற மனுபுத்திரனும் பாக்கியவான். கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும், அவருக்கு ஊழியக்காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, ஓய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, என் உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும், நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து, என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப் பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 56:1,2,6,7.

கிறிஸ்தவ யுகத்தைப்பற்றி இவ்வார்த்தைகள் பேசுகின்றன. வச 8. தேவ ஊழியர்கள் நற்செய்தியை சகல தேசங்களிலும் பிரசங்கிக்கும்போது, நற்செய்தியைக் கேட்ட புறஜாதியார் ஒன்றுகூடி வருவதுபற்றி இப்பகுதியில் முன்னுரைக்கப்படுகிறது.

'என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு' என்று ஆண்டவர் கட்டளையிடுகிறார். ஏசாயா 8:16. தேவ பிரமாணத்தின் முத்திரை நான்காம் கற்பனையில் உள்ளது. பத்துக்கற்பனைகளில் இந்தக் கற்பனைதான், கற்பனை கொடுத்தவரின் பெயரையும் பதவியையும் குறிப்பிடுகிறது. பாப்புமார்க்கத்தின் கையிலிருக்கிற நியாயப்பிரமாணத்தில் முத்திரை இல்லை. ஏனெனில், தன் அதிகாரத்தால்

பாப்புமார்க்கம் **ஓய்வுநாள் கட்டளையை மாற்றிவிட்டது.**[1] சிருஷ்டிகரின் நினைவுச்சின்னமாகவும் அவருடைய அதிகாரத்தின் அடையாளமாகவும் ஓய்வுநாளை மீண்டும் உயர்த்தும்படி, தம் சீடர்களிடம் இயேசு சொல்கிறார்.

ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால், அதுதான் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளென்று புரொட்டஸ் டன்ட் கிறிஸ்தவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் கிறிஸ்துவோ, சீடர்களோ அந்த நாளை அவ்வாறு மேன்மை படுத்தவில்லை. ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாக ஆசரிக் கப்படுவதற்கு 'அக்கிரமத்தின் இரகசியம்தான்' காரணம். 2தெச 2:7. பவுலின் நாட்களிலேயே அது தன் வேலையைத் துவக்கிவிட்டது. வேதாகமம் அங்கீகரிக்காத ஒரு மாற்றம் ஏற்பட்டதற்கு, என்ன காரணம் சொல்லமுடியும்?

''வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளைப்பற்றியோ, அதை எப்படிக் கைக்கொள்வது எனும் விதிகள்பற்றியோ புதிய ஏற்பாட்டில் எதுவும் வெளிப்படை யாகச் சொல்லப்படவில்லை.''[2]

''கிறிஸ்து மரிக்கும்வரை, அவர் அந்த நாளில் எந்த மாற்றமும் செய்யவில்லை. ஏழாம்நாள் ஓய்வுநாள் ஒழிந்து விட்டது என்பதற்கான வெளிப்படையான கட்டளையோ, வாரத்தின் முதலாம் நாளில் அதைக் கைக்கொள்ள வேண்டு மெனும் கட்டளையோ அப்போஸ்தலரால் கொடுக்கப்பட வில்லை. இதை புரொட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.''[3]

ஓய்வுநாளை தங்கள் சபைதான் வேறொரு நாளுக்கு மாற்றினது என்றும், ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிப்பதன்மூலம் புரொட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் தங் கள் அதிகாரத்தை அங்கிகரிக்கிறார்களென்றும் ரோமன் கத் தோலிக்கக் கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள்: **''பழைய பிர மாணத்தின்போது, சனிக்கிழமைதான் பரிசுத்தமாக்கப்பட்ட**

---

[1] மாபெரும் போராட்டம் புத்தகத்தின் அத்தியாயம் 3 இல் இந்த மாற்றம் விளக்கப்பட்டுள்ளது.

[2] George Elliott, *The Abiding Sabbath,* p. 184.

[3] A. E. Waffle, *The Lord's Day,* pp. 186-188.

நாளாக இருந்தது; ஆனால், இயேசு கிறிஸ்துவின் அறிவுரையின்படியும், ஆவியானவரின் நடத்துதலின்படியும் சனிக்கிழமைக்குப்பதிலாக ஞாயிற்றுகிழமையை சபை நியமித்துள்ளது. எனவே, நாங்கள் ஏழாம்நாளை அல்ல, முதல்நாளைப் பரிசுத்தப்படுத்துகிறோம். ஞாயிற்றுக் கிழமையே கர்த்தருடைய நாள்'' என்கிறார்கள்.[4]

'சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலை தெரிவி' என்று கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. ஏசாயா 58:1. 'என் ஜனம்' என்று ஆண்டவர் குறிப்பிடுகிற மக்கள், தங்களை நீதிமான்களென எண்ணிக்கொண்டார்கள். ஆனால், அவர்கள் தங்கள் மீறுதல்களின்நிமித்தம் கண்டிக்கப்படவேண்டிய நிலையில் இருந்தார்கள். தேவனுடைய போதனைகளை அலட்சியப்படுத்திவந்தார்கள். இருதயத்தை ஆராய்கிறவரின் நீதியான கடிந்துகொள்ளுதல் இதை வெளிப்படுத்துகிறது.

மறக்கப்பட்டிருந்த ஒரு கட்டளையை தீர்க்கதரிசி பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்: 'உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய். என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப் பேச்சைப் பேசாமலுமிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்.' ஏசாயா 58:12-14.

ஓய்வுநாளை ரோம வல்லமை மாற்றியபோதுதான், தேவனுடைய கட்டளையில் 'திறப்பு' ஏற்பட்டது. ஆனால்,

---

[4] *Catholic Catechism of Christian Religion.*

அந்தத் திறப்பைச் சரிசெய்வதற்கு நேரம் வந்திருக்கிறது.

ஏதேனில் பாவமில்லாதிருந்த ஆதாம் ஓய்வுநாளைக் கைக்கொண்டான்; பாவத்தில் விழுந்து, மனந்திரும்பி, தோட்டத்தைவிட்டு துரத்தப்பட்ட பிறகும் ஓய்வுநாளைக் கைக்கொண்டான். ஆபேல், நோவா, ஆபிரகாம், யாக்கோபு முதலான முற்பிதாக்கள் ஓய்வுநாளைக் கைக்கொண்டார்கள். இஸ்ரவேலை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தபோது, அந்தத் திரளான கூட்டத்தாருக்கு அவர் தம் பிரமாணத்தைத் தெரிவித்தார்.

ஓய்வுநாள் எப்போதும் கைக்கொள்ளப்பட்டது

அந்நாள் முதல் இந்நாள்வரை ஓய்வுநாள் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. தேவனுடைய பரிசுத்த நாளை 'பாவ மனிதன்' தன் காலின்கீழ் போட்டு மிதித்த சமயத்தில், இரகசிய இடங்களில் மறைந்திருந்த உண்மையான ஆத்துமாக்கள் அதைக் கனப்படுத்தினார்கள். சீர்திருத்தத்திற்குப்பின் இருந்த தலைமுறையிலும், இதைக் கைக்கொள்ளும் சிலர் இருந்துகொண்டே இருக்கிறார்கள்.

'நித்திய சுவிசேஷத்தோடு' கூடிய இந்தச் சத்தியங்கள்தாம், கிறிஸ்துவின் சபையை அவருடைய வருகையின்போது வேறுபடுத்திக் காட்டும். தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களே பரிசுத்தவான்கள். வெளி 14:12.

பரிசுத்த ஸ்தல சத்தியத்துக்கும்[5] நியாயப்பிரமாணத்துக்கும் இருந்த தொடர்புபற்றிய வெளிச்சத்தைப் பெற்றவர்கள் சந்தோஷத்தால் நிறைந்தார்கள். கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் அந்த வெளிச்சம் செல்லவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆனால், உலகத்தோடு ஒத்துப்போகாத சத்தியங்கள்மேல் பெயர்க் கிறிஸ்தவர்களுக்கு விருப்பம் இல்லை.

ஓய்வுநாள்பற்றி சொன்னதுமே, "நாங்கள் எப்போதுமே ஞாயிற்றுக்கிழமைதான் ஆராதனைசெய்கிறோம். எங்கள் பிதாக்களும் அப்படித்தான் செய்தார்கள்; மரித்துப்

[5] மாபெரும் போராட்டம் புத்தகத்தின் அத்தியாயம் 23, 24 ஐ வாசித்துப்பாருங்கள்.

போன நல்லவர்கள் அநேகர் அந்நாளில் ஆராதனைசெய் திருக்கிறார்கள். புதியதொரு ஓய்வுநாளை நாங்கள் கைக் கொண்டால், உலகத்தோடு எங்களுக்கு ஒட்டில்லாமல் போய்விடும். உலகம்முழுவதுமே ஞாயிற்றுக்கிழமை யைக் கைக்கொண்டிருக்க, அவர்களை எதிர்த்து, ஏழாம் நாளைக் கைக்கொள்ளும் சிறுகூட்டத்தால் என்ன செய்து விடமுடியும்?'' என்கிறார்கள். கிறிஸ்துவைப் புறக்கணித்த யூதரும் இதேபோன்ற வாதங்களால்தாம் தங்களை நியாயப் படுத்தினார்கள். லூத்தருடைய காலத்திலும், 'மெய்க் கிறிஸ் தவர் பலர் கத்தோலிக்க விசுவாசத்தோடு மரித்திருக்கிறார் கள். எனவே, கத்தோலிக்க மதமே போதும்' என்று கத்தோ லிக்கர் சொன்னார்கள். இத்தகைய வாதம் விசுவாச வளர்ச்சிக்குத் தடையாகத்தான் இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைசெய்வதுதான், உலகமெங்கும் உள்ள சபைகளில் காலாகாலமாக இருக்கிற தென பலர் கூறுகிறார்கள். ஆனால், ஏழாம்நாள் ஓய்வு நாளைக் கடைப்பிடிப்பது பூர்வீகமானது; உலகம் உண்டான முதற்கொண்டே அது அனுசரிக்கப்பட்டு வருகிறது. நீண்ட ஆயுசுள்ளவர்தாமே அதை ஏற்படுத்தினார்.

வேதத்தில் ஆதாரம் இல்லையென்பதால், "ஓய்வு நாள்பற்றி நீங்கள் சொல்வதை முக்கியமானவர்கள் ஏன் புரிந்துகொள்ளவில்லை? ஒரு சிலர்தான் இதை நம்புகிறீர் கள். நீங்கள் சொல்வது சரியாகவும், மேதைகள் சொல்வது பொய்யாகவும் எப்படி இருக்கும்?'' என்று கேட்கிறார்கள்.

இத்தகைய வாதங்களுக்குப் பதில்தர, வசனங்க ளைக் காட்டுங்கள்; தேவன் தம் மக்களை நடத்தின விதத்தைச் சொல்லுங்கள். மேதைகளையும் தலைவர்களையும் தேவன் பெரும்பாலும் சீர்திருத்தவாதிகளாகத் தெரிந்து கொள்வதில்லை. ஏனெனில், தேவனிடமிருந்து கற்க வேண்டியதின் அவசியத்தை அவர்கள் உணர்வதில்லை; தங்கள் கொள்கையையும் தங்கள் சொந்தக் கல்வியையும் தான் நம்புவார்கள். சத்தியத்தை அறிவிப்பதற்கு, குறை வான கல்வியறிவு பெற்றவர்களையும் தேவன் தெரிந்து கொள்கிறார். அவர்கள் கல்லாதவர்கள் என்பது அதற்குக் காரணமல்ல; தேவனிடம் கற்கத் தேவையில்லை எனும் சுய

நிறைவு மனப்பான்மை அவர்களிடம் இல்லாததுதான் காரணம். தாழ்மையும் கீழ்ப்படிதலும் அவர்களைப் பெரியவர்களாக்குகிறது.

விசுவாசமும் தைரியமும்

இஸ்ரவேலர் நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்தது தேவ சித்தமல்ல. நேரடியாகவே அவர்களை கானானுக்குள் அழைத்துப்போய், ஒரு பரிசுத்த ஜாதியாக, சந்தோஷமான மக்களாக அங்கு அவர்களை ஸ்தாபிக்கவே விரும்பினார். ஆனால், 'அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போனார்கள்'. எபிரெயர் 3:19. அதுபோல, கிறிஸ்துவின் வருகை வெகுகாலம் தாமதித்து, அவருடைய பிள்ளைகள் பல வருடங்கள் இந்தப் பாவ உலகில் வேதனைப்பட வேண்டுமென்பது தேவ சித்தமல்ல. அவிசுவாசமே தேவனைவிட்டு அவர்களைப் பிரித்தது. பாவிகள் எச்சரிப்பின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, தேவ கோபாக்கினை ஊற்றப்படும்முன் அடைக்கலம் தேடிக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே, இயேசு வரத் தாமதிக்கிறார். இது அவருடைய இரக்கம்.

முந்தையக் காலங்களைப்போல இப்போதும் சத்தியத்தைச் சொன்னதும் எதிர்ப்பு கிளம்பும். பலர் விரும்பாத சத்தியத்திற்கு ஆதரவாகப் பேசுகிறீர்களா? உங்கள் குணத்தையும் நோக்கங்களையும் தீயவர்கள் மோசமாகக் காட்டுவார்கள். எலியா, இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணியவராம்; எரேமியா, தேசத்துரோகியாம்; பவுல், ஆலயத்தைத் தீட்டுப்படுத்தியவராம். சத்தியத்திற்கு உண்மையாக இருக்கிறவர்களை, 'தேசத்துரோகிகள், மதத்துரோகிகள், சமுதாயத்துரோகிகள்' என்றுதான் அன்றுமுதல் இன்றுவரை பழிசாட்டுகிறார்கள்.

பரிசுத்தவான்களும் இரத்தச்சாட்சிகளும் பரிசுத்த ஜீவியத்திற்கும் உறுதியான ஒழுக்கத்திற்கும் முன்மாதிரிகள். இப்போது, தேவனுக்குச் சாட்சிகளாக நிற்க அழைக்கப்படுகிறவர்களுக்கு அந்த முன்மாதிரிகளின் சாட்சி ஊக்கம்தருகிறது. 'சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு

அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி. நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்; ஆகையால், நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக' என்று இப்போதுள்ள தேவனுடைய ஊழியர்களுக்குக் கட்டளைகொடுக்கப்படுகிறது. ஏசா 58:1; எசே 33:7.

சத்தியம் நம் சௌகரியத்துக்கு வளைந்துகொடாமல், நம்மைக் கண்டித்து உணர்த்துவதுதான் அதை ஏற்றுக்கொள்வதற்குள்ள பெரிய தடை. சத்தியத்திற்கு எதிராகக் கூறப்படும் ஒரே குற்றச்சாட்டு இதுதான். சத்தியவான்கள் இதை மறுக்கமுடியவில்லை. ஆனால், சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்முன் அது பிரபலமாகவேண்டுமென்று கிறிஸ்துவின் மெய்ச்சீடர்கள் காத்திருப்பதில்லை. 'அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது' என்று பவுலோடும், 'எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம்' என்று மோசேயோடும் சேர்ந்து, சிலுவையை ஏற்றுக்கொள்வார்கள். 2 கொரி 4:17; எபிரெயர் 11:26.

சரியானதென்பதால் சரியானதைத் தெரிந்துகொள்ளவேண்டும்; விளைவுகளை தேவனிடம் விட்டுவிடவேண்டும். உலகின் மாபெரும் சீர்திருத்தவாதிகளிடம் நியதியும் கொள்கையும் விசுவாசமும் துணிவும் உண்டு. உலகம் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களைப் போன்றவர்களால் இன்றும் அப்படிப்பட்ட சீர்திருத்தப் பணிகள் நடைபெறவேண்டும்.

அதிகாரம் 9

மெய்யான நம்பிக்கை

மீட்பின் மாபெரும் பணியை நிறைவுசெய்ய கிறிஸ்து இரண்டாம் முறை வருவாரெனும் வாக்குத்தத்தம்தான் பரிசுத்த வேதாகமத்தின் முக்கியக் கருத்து. இழந்த பரதீசுக்குள் தங்களை மீண்டும் அழைத்துச்செல்லப்போகிறவரின் வருகைக்காக ஏதேன்முதலே விசுவாசப்பிள்ளைகள் காத்திருக்கிறார்கள்.

ஏதேனில் வசித்த ஆதாம்-ஏவாளுக்கு ஏழாம் தலைமுறையில் பிறந்தவர் ஏனோக்கு. அவர் மூன்று நூற்றாண்டுகளாக தேவனோடு சஞ்சரித்தவர். அவர் சொல்லியிருக்கிறார்: "இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கு, ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்" என்று முன்னறிவித்தார். யூதா 14,15. உபத்திரவக்குகையின் இருட்டிலிருந்த யோபு, "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்" என்றார். யோபு 19:25-27. வேதாகமத்தின் தீர்க்கதரிசிகளும் கவிஞர்களும், கிறிஸ்துவின் வருகைகுறித்து அனல்பறக்கும் வார்த்தைகளை எழுதித் தள்ளியிருக்கிறார்கள். 'கர்த்தருக்குமுன்பாக வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகுவதாக. அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்' என்று சங்கீதக்காரர் பாடியிருக்கிறார். சங் 96:11-13.

“அக்காலத்திலே, ‘இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந் தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழு வோம்’ என்று சொல்லப்படும்” என்கிறார் ஏசாயா. ஏசாயா 25:9.

தாம் மீண்டும் வரப்போவதை நிச்சயமாகச் சொல்லி, தம் சீடர்களைத் தேற்றினார் இரட்சகர். “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் மறு படியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளு வேன். அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தி னவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்” என்கிறார் இயேசு. யோவான் 14:2,3; மத்தேயு 25:31,32.

இயேசு மறுபடியும் வருவதுபற்றின வாக்குறுதியை சீடர்களிடம் தூதர்கள் மீண்டும் கூறினார்கள்: ‘உங்களிடத்தி னின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு வானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத் துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்’ அப். 1:11. பவுலும், ‘கர்த்தர்தாமே ஆரவாரத் தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்கா ளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்’ என்கிறார். 1 தெச. 4:16. ‘இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்’ என்று பத்மு தீவிலிருந்த தீர்க்க தரிசி சொல்கிறார். வெளி 1:7.

நீண்டகாலமாய் ஆளுகைசெய்த தீமை ஒழியும். ‘உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவரு டைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதா காலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்’. வெளி 11:15. ‘கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும்முன்பாக நீதி யையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.’ ஏசா 61:11.

மேசியாவின் சமாதான ராஜ்யம் அப்போது ஸ்தாபிக் கப்படும். 'கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் அவாந்தர வெளியைக் கர்த்தரின் தோட்டத் தைப் போலவும் ஆக்குவார்' ஏசாயா 51:3.

ஆண்டவர் வருகைதான் எல்லாக் காலங்களிலும், அவருடைய உண்மைப் பிள்ளைகளின் நம்பிக்கை. வேத னைக்கும் உபத்திரவத்திற்கும்மத்தியிலும், 'மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமை யின் பிரசன்னமாகுதல்தான் ஆனந்த பாக்கியம்'. தீத்து 2:13. இரட்சகரின் வருகையின்போது உயிர்த்தெழுதல் நடை பெறுமென்றும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அப்போது உயிர்த்தெழுவார்களென்றும், உயிரோடிருக்கிறவர்கள் அவருக்கு எதிர்கொண்டுபோக, ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்களென்றும் பவுல் சொல்கிறார். 'இவ்வித மாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை யொருவர் தேற்றுங்கள்' என்று சொல்கிறார். 1தெச 4:17,18.

'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்' எனும் வாக்குத்தமானது பத்மு தீவிலிருந்த பிரியமான சீடன் காதில் விழுந்தபோது, அவர் சொன்ன பதில்: 'ஆமென், கர்த்தரா கிய இயேசுவே வாரும்.' இதுதான் சபையின் ஜெபம்.

முன்பு பரிசுத்தவான்களும் இரத்தச்சாட்சிகளும் சத்தியத்திற்குச் சாட்சியாக நிலவறைகளிலும் கழுமரங்களி லும் தூக்குமேடைகளிலும் வெளிப்படுத்தின அவர்கள் விசு வாசமும் நம்பிக்கையும் நூற்றாண்டுகள் கடந்தும் சாட்சி யிட்டுவருகின்றன. **'அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை யும், அவர் வருகையில் நாம் உயிர்த்தெழுவோம் என்பதை யும் நம்பி, மரணத்தை துச்சமாக எண்ணி, வெற்றிசிறந்தார் கள்'**[1] என்று அந்தக் கிறிஸ்தவர்களில் ஒருவரே கூறுகிறார். வால்தேனியர்கள் அதேபோன்ற விசுவாசத்தை உடையவர் கள். வைக்ளிஃப், லூத்தர், கேல்வின், நாக்ஸ், ரிட்லி, பாக்ஸ்

---

[1] Daniel T. Taylor, *The Reign of Christ on Earth: or, The Voice of the Church in All Ages*, p. 33.

டர் **போன்றோர்**[2] ஆண்டவருடைய வருகையை விசுவாசத்தோடு எதிர்பார்த்தார்கள். அப்போஸ்தலர் காலச் சபையின் விசுவாசமும், வனாந்தரத்திலிருந்த சபையின் விசுவாசமும், சீர்திருத்தவாதிகளின் விசுவாசமும் அப்படிப்பட்டதுதான்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்விதம் இருக்கும்? அதன் நோக்கம் என்ன? இவற்றை மாத்திரமல்ல, அந்த நாள் நெருங்கிவிட்டதை மனிதர் அறிந்துகொள்வதற்கான அடையாளங்களையும் தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கிறது. 'சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்' லூக்கா 21:25. 'சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின் மேல் வருகிறதைக் காண்பார்கள்.' மாற்கு 13:24-26. இரண்டாம் வருகை நடப்பதற்குமுன் பூமியில் நடக்க இருந்த அடையாளங்களில் முதலாவது அடையாளத்தை வெளிப்படுத்தல் புத்தகத்தில் யோவான் பின்வருமாறு விவரிக்கிறார்; 'பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று.' வெளிப்படுத்தல் 6:12.

இரண்டாம் வருகைக்குமுன், மனிதர் தங்களுடைய தேவனைவிட்டு பின்வாங்கிச் செல்கிற நிலை காணப்படுமென்று இரட்சகர் முன்னுரைக்கிறார். அந்தக் காலக்கட்டத்தில் வாழ்கிறவர்களிடம், 'உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்' என்றும், 'ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்

[2] மாபெரும் போராட்டம் புத்தகத்தில், வால்தேனியர்களையும் மற்ற புரட்டஸ்ட்டந்து சீர்திருத்தவாதிகளையும்பற்றிய அதிக விவரத்தையும் வாசிக்கலாம்.

திருங்கள்' என்றும் அறிவுரை கூறுகிறார் இயேசுகிறிஸ்து. லூக்கா 21:34, 36.

ஆயத்தப்படுவதற்கு அழைப்பு

அந்த மகத்தான நாளுக்காக, தேவனுடைய பிள்ளைகள் மனந்திரும்பி, அவர் முகத்தைத் தேடவேண்டுமென்று தேவ வார்த்தை அழைக்கிறது.

'கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது. சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள். முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளைக் கூட்டுங்கள். கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுவார்களாக. நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.' யோவேல் 2:1,15-17,12,13.

தேவனுடைய நாளில் நிலைநிற்கக்கூடிய ஒருகூட்ட மக்களை ஆயத்தம்பண்ணும் மாபெரும் சீர்திருத்தப் பணி நடைபெறவேண்டியுள்ளது. தம்முடைய மக்களை விழித்தெழச் செய்யவும், ஆண்டவருடைய வருகைக்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு அவர்களை ஆயத்தப்படுத்தவும் அவர் தம் இரக்கத்தால் ஒரு செய்தியை அனுப்பயிருக்கிறார்.

வெளி 14 இல், அந்த எச்சரிப்பின் செய்தி சொல்லப்படுகிறது. அதில் பரலோகத் தூதுவர்கள் மூன்று தூதுகளை அறிவிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, 'பூமியின் பயிரை' அறுவடைசெய்ய, மனுஷகுமாரன் வரப்போவதாகவும் தூதர்கள் கூறுகிறார்கள். வானத்தின்மத்தியிலே பறக்கும் ஒரு தூதனை தீர்க்கதரிசி முதலில் காண்கிறார். அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்

தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனா யிருந்து, மிகுந்த சத்தமிட்டு, ''தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்'' என்று கூறினான். வெளி 14:6,7.

'நித்திய சுவிசேஷத்தின்' ஒரு பகுதிதான் அந்தச் செய்தி. அதைப் பிரசங்கிக்கும் பணியை தேவன் மனிதரிடம் ஒப்படைத்திருக்கிறார். பரிசுத்த தூதர்கள் வழிநடத்துகிறார்கள்; ஆனால், **நற்செய்தி அறிவிக்கும் பணியை,**[3] பூமியில் உள்ள கிறிஸ்துவின் ஊழியர்கள்தாம் செய்துவருகிறார்கள்.

நற்செய்தியின் அழைப்பை மறுப்பதின் ஆபத்து

தேவனுடைய இரக்கத்தின் மன்றாட்டுகளை மறுதலிக்கும் யாவருக்கும், எருச லேமின் அழிவு ஓர் உன்னத எச்சரிப்பு. எருசலேமின் மேலான நியாயத்தீர்ப்பு பற்றி இரட்சகர் சொன்ன தீர்க்கதரிசனம், வேறொரு நிறைவேறுதலையும் சுட்டிக்காட்டியது. தேவனுடைய இரக்கத்தைப் புறக்கணித்து, அவருடைய பிரமாணத்தை அவமதிக்கிற ஓர் உலகின் அழிவை எருசலேம் அழிவு முன்னுரைக்கிறது. பூமியில் மனிதவாழ்க்கையில் ஏற்பட்ட நாசமோசங்கள் மிக மோசமானவை. பரலோக அதிகாரத்தைப் புறக்கணிப்பதின் விளைவுகள் கொடுமையானவை. ஆனால், வருங்காலம் பற்றிய வெளிப்படுத்தல்களில், இன்னும் மோசமான ஒரு காட்சியைக் காண்கிறோம். பாவத்தைத் தடுத்துவரும் ஆவியானவரின் உணர்த்துதல் முற்றிலும் நின்றுவிடும் போது, சாத்தானின் கோபமும், மனிதரின் உணர்ச்சிப் பெருக்கும் கட்டுப்படுத்தப்படாமல் விடப்படும். அப்போது

[3] இந்தச் செய்தியைப்பற்றிய அதிக விளக்கத்தையும், இதை அறிவித்தவர்களையும் பற்றியும் மாபெரும் போராட்டம் புத்தகம் அத்தியாயம் 17, 18 களிலும் வாசிக்கலாம். அடுத்துவரும் அத்தியாயங்களில் தொடர்ந்து நடக்க இருக்கிற பிரச்சனைகளைப் பற்றி வாசிக்கலாம்.

203 good

சாத்தானுடைய ஆளுகையின் விளைவுகளை இதுவரையி லும் கண்டிராத விதத்தில் உலகம் காணும்.

எருசலேம் அழிக்கப்பட்டபோது நிகழ்ந்தபடி, அந்த நாட்களிலும் தேவனுடைய மக்கள் விடுவிக்கப்படுவார்கள். ஏசா 4:3; மத்தேயு 24:30,31. தமக்கு உண்மையானவர்களை தம்மிடம் சேர்த்துக்கொள்ள, இரண்டாம் முறையாக கிறிஸ்து வருவார். 'அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோ டும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தத் தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளி லுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்.' மத்தேயு 24:30,31.

கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புறக்கணிக்காதிருக்க, கவனமாய் இருப்போமாக. எருசலேம் அழியும்போது தப்பிப்போகும்படி அவர் தம் சீடர்களை எச்சரித்ததுபோல, இறுதி அழிவின் நாளிலிருந்து தப்பிக்கும்படி, உலகத்தை அவர் எச்சரிக்கிறார். விருப்பமுள்ள யாவரும், வரப்போ கும் கோபாக்கினையிலிருந்து தப்பிக்கொள்ளலாம். 'சூரிய னிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்.' லூக்கா 21:25; மத்தேயு 24:29; மாற்கு 13:24-26; வெளி 6:12-17. 'அப்படியே நீங்களும் விழித்திருங்கள்' என்று கிறிஸ்து எச்சரிக்கிறார். மாற்கு 13:35. அந்த எச்சரிப்புக்குச் செவிகொடுக்கிறவர்கள் இரு ளில் விடப்படுவதில்லை.

எருசேலமைக்குறித்து இரட்சகர் எச்சரித்தபோது, அந்த எச்சரிப்பை ஏற்றுக்கொள்ள யூதர்கள் ஆயத்தமாக இல்லை; அதுபோல்தான் இன்றைய எச்சரிப்பையும் உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. எப்பொழுது வேண்டுமா னாலும் கர்த்தருடைய நாள் வரக்கூடும்; ஆனால், பாவிகள் எதிர்பார்த்திராத சமயத்தில் அது வரப்போகிறது. வழக்கம் போல வாழ்க்கையின் அலுவல்கள் நடைபெற்றுக்கொண்டி

ருக்கும்; இன்பத்திலும் வியாபாரத்திலும் சம்பாத்தியத்தி லும் மனிதர் மூழ்கியிருப்பார்கள்; மதத்தலைவர்கள் உலகின் முன்னேற்றம்குறித்துப் பேசிக்கொண்டிருப்பார்கள்; பொய் யான பாதுகாப்பில் மக்கள் மயங்கிநிற்பார்கள். அப்போது, பூட்டப்படாத வீட்டில் திருடன் நடுராத்திரியில் நுழைவது போல, அசட்டையாக வாழும் பாவிகள்மேல் அழிவு சடிதி யில் வரும். 'அவர்கள் தப்பிப்போவதில்லை'. 1தெச5:2-5.

மக்களைக் கட்டுப்படுத்த, சாத்தானின் முயற்சி

'ஆத்துமா அழியாதது, ஞாயிற்றுக்கிழமை பரிசுத்த மான நாள்' எனும் இரண்டு பெரும் பொய்களின்மூலம், மக் களை தன்னுடைய வஞ்சகங்களின்கீழ் சாத்தான் சிக்கவைப் பான். முதல் பொய், ஆவிமார்க்கத்திற்கு அடித்தளமிடுகி றது; இரண்டாம் பொய், ரோமுடன் ஒத்துப்போக வைக் கிறது.

ஆவிமார்க்கத்தின்மூலம், மனித இனத்திற்கு நன்மை செய்பவன்போலும், வியாதிகளைக் குணமாக்குகிறவன் போலும் சாத்தான் தன்னைக் காண்பிக்கிறான்; அதன்மூலம் புதிய தொழுகையை முன்நிறுத்தி, திரளானவர்களை அழி வுக்குள் வழிநடத்துகிறான். இச்சையடக்கம் இல்லாததால் பகுத்தறிவு போகிறது; சிற்றின்பம், சண்டை, இரத்தம்சிந் துதல் ஆகியவை பின்தொடர்கின்றன. யுத்தங்களால் ஆத் துமாவின் இழிவான உணர்வுகள் பெருகுகின்றன; பாவத் திலும் இரத்தஞ்சிந்துதலிலும் மூழ்கிவிடுகிறார்கள். நித்தி யத்தை இழந்துபோவார்கள். தேசங்களுக்கிடையே போரை மூட்டுவது சாத்தானின் நோக்கம்; தேவனுடைய நாளில் நிலைநிற்பதற்கு மக்கள் ஆயத்தம்செய்யாமலிருக்கும்படி அவர்களைத் திசைதிருப்புகிறான்.

இயற்கையின் இரகசியங்களை சாத்தான் படித்து வைத்திருக்கிறான்; தேவன் அனுமதிக்கும் அளவுக்கு அவற்றைக் கட்டுப்படுத்த, தன் வல்லமை அனைத்தையும் பயன்படுத்துகிறான். தேவன்தாம் தம் சிருஷ்டிகளை அந்த அழிவுக்காரனிடமிருந்து காப்பாற்றுகிறார். ஆனால், கிறிஸ் தவ உலகமோ தேவனுடைய பிரமாணத்தை ஏளனமாய்ப் பார்க்கிறது; ஆண்டவரும் தாம் சொன்னதை நிச்சயம் செய்

வார். அதாவது, அவருடைய பிரமாணத்துக்கு எதிராகக் கலகம்செய்து, அவ்வாறு செய்யும்படி பிறரையும் கட்டா யப்படுத்துவோரை அவர் இனிப் பாதுகாக்க மாட்டார். தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பைப் பெறாத அனை வரையும் சாத்தான் கட்டுப்படுத்திவிடுவான். அவன் தன் திட்டங்களை நிறைவேற்றும்படி, சிலருக்குத் தயவுகாட்டி, அவர்களைச் செழிக்கப்பண்ணுவான்; மற்றவர்களுக்குத் துன்பம்கொடுத்து, தேவன்தாம் அவர்களைத் துன்பப் படுத்துவதாகச் சொல்லி, அந்தப் பொய்யை அவர்கள் நம்பும்படிசெய்வான்.

மக்களுடைய சகல வியாதிகளையும் குணமாக்க வல்ல மாபெரும் வைத்தியனாக சாத்தான் தன்னைக் காண் பிப்பான்; ஆனால், மாநகரவாசிகள் அழிந்துபோகுமள வுக்கு வியாதியையும் அழிவையும் ஏற்படுத்துவான். கட லிலும் நிலத்திலும் ஏற்படும் விபத்துகள், பெருந்தீ, கடும் சூறாவளிகள், புயல்கள், சுழல்காற்றுகள், சுனாமிகள், பூமி அதிர்ச்சிகள் போன்ற ஆயிரமாயிரமான விதங்களில் சாத்தான் தன் வல்லமையைக் காட்டுகிறான். விளைச்சலை அழித்து, பஞ்சமும் வேதனையும் ஏற்படும்படி செய் கிறான். காற்றை மாசுபடுத்தி, ஆயிரக்கணக்கானோரைக் கொல்கிறான்.

தேவனுடைய கற்பனைகளுக்குக்கீழ்ப்படிந்து, அந்தக் கீழ்ப்படிதலால் தங்கள் தவறுகளைக் கண்டித்தவர்கள்தாம் தங்கள் துன்பங்களுக்கெல்லாம் காரணர்களென்று துன்மார்க் கர் நம்பும்படி மகா வஞ்சகன் தூண்டுகிறான். 'ஞாயிற்றுக் கிழமையில் ஆராதனைசெய்யாததால் மனிதர்கள் தேவ னைக் கோபப்படுத்துகிறார்கள். அந்தப் பாவம்தான் அழி வுகளைக் கொண்டுவருகிறது. ஞாயிற்றுதொழுகை கட்டாய மாக்கப்படும்மட்டும் அந்த ஆபத்து நீங்காது' என்று அறி விப்பார்கள். 'ஞாயிற்றுக்கிழமையின் புனிதத் தன்மை யைக் கெடுக்கிறவர்கள், தேவதயவும் ஆசீர்வாதமும் கிடைப்பதைத் தடைசெய்கிறார்கள்' என்று தேவ ஊழியர் களைக் குற்றஞ்சாட்டுவார்கள். ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி, "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா?" என்று குற்றஞ்

சாட்டியது போல்தான் இனியும் நடக்கும். 1 இராஜா 18:17,18.

வேதாகமம் சொல்லும் ஓய்வுநாளைக் கைக்கொள்கிறவர்கள் சட்டஒழுங்கிற்கு எதிரானவர்களென்றும், சமுதாயத்தின் ஒழுக்கக்கட்டுப்பாடுகளை மீறுகிறவர்களென்றும், நாட்டில் குழப்பத்தையும் சீர்கேட்டையும் ஏற்படுத்துகிறவர்களென்றும், பூமியின்மேல் தேவனுடைய தண்டனைகளை வருவிக்கிறவர்களென்றும், அரசாங்கத்தை நேசிக்காதவர்களென்றும் குற்றஞ்சாட்டுவார்கள். அரசாங்கச் சட்டத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமென்று பிரசங்கிக்கிற போதகர்கள் தேவ சட்டத்துக்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருப்பார்கள். கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள், அரசவைகளிலும் நீதிமன்றங்களிலும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படுவார்கள். அவர்களுடைய பேச்சுக்கு தவறான அர்த்தம் கற்பிக்கப்படும்; அவர்களுடைய நோக்கங்கள் தவறாகச் சித்தரிக்கப்படும்.

சபைத்தலைவர்களும் தேசத்தலைவர்களும் கைகோர்த்து, 'ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டும்' என்று அனைவரையும் வற்புறுத்துவார்கள். சுதந்தரமிக்க அமெரிக்காவிலும்கூட, ஞாயிறு ஆசரிப்பைக் கட்டாயமாக்கும் சட்டம் வேண்டுமெனும் பெரும்பான்மையினரின் கோரிக்கைக்கு தலைவர்களும் செனட் உறுப்பினர்களும் சம்மதிப்பார்கள். மனச்சாட்சியின் சுதந்தரத்துக்காக ஒரு காலத்தில் மாபெரும் தியாகங்கள் செய்தார்கள். அதற்கு இப்போது மதிப்பு இருக்காது. சீக்கிரத்தில் வரப்போகும் இந்தப் போராட்டத்தில், 'வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று' எனும் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நிறைவேறும். வெளி 12:17.

தேவ ஊழியர்களின் முகம் பரிசுத்த அபிஷேகத்தால் பிரகாசிக்கும். ஒவ்வோர் இடமாக விரைந்து சென்று, பரலோகச் செய்தியை அறிவிப்பார்கள். அற்புதம் செய்வார்கள்; வியாதியஸ்தர்களைக் குணமாக்குவார்கள். சாத்தானும் பொய் அற்புதங்களைச் செய்வான்; வானத்திலிருந்து

அக்கினி இறங்கச் செய்வான். வெளி 13:13. இப்படியாக, பூமியின் குடிகள் தங்கள் நம்பிக்கைகுறித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏற்படும்.

அவர்களுடைய வாதத்திறமையால் அல்ல, ஆவியானவரின் ஆழமான உணர்த்துதலால் செய்தி அறிவிக்கப்படும். திறமையான பேச்சும், புத்தக வெளியீடுகளும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், சத்தியத்தை முற்றிலும் அறிந்துகொள்ளாதபடி பலர் தடுக்கப்படுவார்கள்.

இப்போது சத்தியம் தெளிவாக விளங்கும். குடும்பப்பந்தங்களாலும் சபை உறவுகளாலும் தேவனுடைய உண்மையான பிள்ளைகளைத் தடை செய்ய முடியாமல் போகும். சத்தியத்திற்கு எதிராக அதிகாரங்கள் கைகோர்த்த போதிலும் ஏராளமானோர் ஆண்டவர்பக்கம் நிற்கத் தீர்மானிப்பார்கள்.

பூமியில் நிறைந்திருக்கிற சண்டைகளும் இரத்தஞ்சிந்துதலும் ஏற்பட தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்கிறவர்கள்தாம் காரணர்களென்று கருதப்படுவார்கள். கடைசி எச்சரிப்புடன் வெளிப்பட்ட வல்லமையைக் கண்டு, பாவிகள் கடுங்கோபமடைந்தார்கள். அந்தத் தூதை ஏற்றுக்கொண்ட எல்லோருக்கும் எதிராக சாத்தான் வெறுப்பை ஊற்றி, உபத்திரவத்தை உண்டாக்கினான்.

நிலைத்திருக்கும் விசுவாசம்

சோதனையும் வேதனையுமான காலக்கட்டங்களில், சோர்வையும் தாமதத்தையும் பசியையும் விஞ்சி நம் விசுவாசம் நிலைத்திருக்கவேண்டும்; கடுமையான சோதனையிலும் அது தளர்ந்துபோகக்கூடாது. இடைவிடாமல், கெஞ்சி ஜெபிக்கும் ஜெபத்திற்கு யாக்கோபின் வெற்றிதான் ஒரு நல்ல முன்மாதிரி. தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவரைப்போல பற்றிக்கொள்ளும் யாவரும் அவரைப் போலவே வெற்றிபெறலாம். தேவனோடு மன்றாடி ஜெபிக்கும்விதம் ஒரு சிலருக்குத்தான் தெரிந்திருக்கிறது. சோர்வின் அலைகள் வீசும்போது, விசுவாசத்தோடு வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ள சிலருக்குத்தான் தெரிந்திருக்கிறது.

பயங்கரமான அமானுஷ்யக் காட்சிகள் சீக்கிரமே வானத்தில் தோன்றும்; அற்புதம்செய்யும் பிசாசுகளின் வல்லமைக்கு அவை அடையாளமாக விளங்கும். பூமியின் ராஜாக்களிடமும் உலகம் முழுவதிற்கும் செல்கிற பிசாசின் ஆவிகள், பரலோக அரசுக்கு எதிராக சாத்தான் செய்யும் கடைசிப்போராட்டத்தில் இணையுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளும். 'நாங்களே கிறிஸ்து' என்று தங்களை அழைத்துக்கொள்ளும் மனிதர்கள் எழும்புவார்கள். வியாதிகளைக் குணமாக்கும் அற்புதங்களை அவர்கள் செய்வார்கள்; 'பரலோகத்திலிருந்து எங்களுக்கு வெளிப்பாடு கிடைத்தது' என்று வேதவாக்கியங்களுக்கு எதிரான கருத்துகளைக் கூறுவார்கள்.

உச்சக்கட்டச் செயல்

வஞ்சக நாடகத்தின் உச்சக்கட்டச் செயலாக, சாத்தானே கிறிஸ்துபோல் காட்சியளிப்பான். இரட்சகரின் வருகையே தனக்குள்ள நம்பிக்கையின் நிறைவேறுதலென்று திருச்சபை வெகுகாலமாகக் காத்திருக்கிறது. அதனால், கிறிஸ்துவே வந்துவிட்டதுபோல் மகா வஞ்சகன் தன்னைக் கிறிஸ்துவாகக் காட்டுவான். வெளிப்படுத்தல் 1:13-15 இல் தேவகுமாரன் வர்ணிக்கப்பட்டுள்ளவிதமாக, ஜொலிக்கும் பிரகாசத்தோடு மகத்துவமான விதத்தில் சாத்தான் காட்சியளிப்பான்.

அவனைச் சுற்றிலும் காணப்படும் மகிமை, மனிதர் இதுவரையிலும் தங்கள் கண்களால் கண்டிராத அளவுக்கு மேலானதாக இருக்கும். 'கிறிஸ்து வந்துவிட்டார்' என்று வெற்றியின் முழக்கம் தொனிக்கும். மக்கள் அவனுக்குமுன்பாக முகங்குப்புற சாஷ்டாங்கமாக விழுவார்கள். சாத்தான் தன்னுடைய கரங்களை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதிப்பான். அவன் குரல் மென்மையாகவும் இனிமையாகவும் இருந்தது. இரட்சகர் கூறின பரலோகச் சத்தியங்களில் சிலவற்றை, பரிவுமிக்க குரலில் கூறுவான். வியாதிகளைக் குணமாக்குவான்; கிறிஸ்துவின் அதிகாரம் படைத்தவன் போல், ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிவிட்டதாகச் சொல்வான். ஏழாம்நாளை பரிசுத்த நாளாகக் கைக்

கொள்கிறவர்கள், தன்னுடைய பெயரைத் தூஷிப்பதாகக் கூறுவான். இது கைதேர்ந்த, பலத்த ஒரு வஞ்சனையாக விளங்கும். ஏராளமானோர் அந்த தீய ஆவியின் சத்தத் துக்குச் செவிகொடுப்பார்கள். இதை நம்பிவிடும் அநேகர், "இது தேவனுடைய பெரிதான சக்தி" என்று அறிக்கையிடு வார்கள். அப் 8:10.

தேவ மக்கள் வழி விலகுவதில்லை

அவனால் தேவனுடைய மக்களை தவறான பாதை யில் நடத்தமுடியாது. இந்தக் கள்ளக்கிறிஸ்துவின் கள்ளப் போதனைகள் வேதாகம வாக்கியங்களுக்கு ஒத்துப் போகாதவை. மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழுகிறவர்களுக்கு சாத்தான் ஆசீர்வாதம் கொடுத்தான். ஆனால், மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழு கிற இவர்கள்மேல்தான், தேவனுடைய கலப்பில்லாத கோபாக்கினை ஊற்றப்படுமென்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.

இரண்டாம் வருகைபற்றிய விஷயத்தில் மனிதர் வஞ்சிக்கப்படக்கூடுமென இரட்சகர் எச்சரித்திருக்கிறார்: 'கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக் கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங் களையும் செய்வார்கள். ஆகையால், "அதோ, வனாந் தரத்தில் இருக்கிறார்" என்று சொல்வார்களானால், புறப் படாதிருங்கள்; "இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார்" என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக் கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.' மத்தேயு 24:24-27. பின்வரும் வசனங்களையும் வாசித்துப் பாருங்கள். மத்தேயு 25:31; வெளி 1:7; 1தெச 4:16,17. உலகத் தார் அனைவரும் காணும்படியாகத்தான் இந்த வருகை இருக்கும். இந்த வருகையைப் பொய்யாய்ச் செய்துகாண் பிக்க யாராலும் முடியாது. அதாவது, கிறிஸ்து எவ்விதத் தில் வருவாரோ, அதேவிதத்தில் கிறிஸ்துவின் தோற்றத் தில் பொய்யாய் வர சாத்தானுக்கு அனுமதியில்லை.

சத்தியத்தின்மேல் அன்புவைத்து, கருத்தோடு வேதாகமத்தை ஆராய்கிறவர்கள்மட்டும்தான், உலகத்தை வஞ்சிக்கும் அந்த மகா வஞ்சகத்திலிருந்து தப்பமுடியும். வேதாகமம் சொல்வதை வைத்து, வஞ்சகனின் வேஷத்தை இவர்கள் புரிந்துகொள்வார்கள். தங்கள் புலன்கள் சொல்லும் காரியங்களை ஒதுக்கக்கூடிய அளவுக்கு, அவருடைய பிள்ளைகள் இப்போது தேவனுடைய வார்த்தையில் ஊன்றக்கட்டப்பட்டிருக்கிறார்களா? நெருக்கடி ஏற்படும் போது, வேதாகமத்தைமாத்திரம் பிடித்திருப்பார்களா?

அதிகாரம் 10

மாபெரும் மீட்பு

தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்கிறவர் களுக்குப் பாதுகாப்பாக இருந்த அரசுச் சட்டங்கள் விலக்கப் பட்டதும், எல்லா நாடுகளிலும் அவர்களை அழிக்கும் படியான முயற்சிகள் ஒரே நேரத்தில் எடுக்கப்படும். அரசு ஆணைகளில் நியமித்திருந்த நேரம் நெருங்கியதும், தங்களுக்கு எதிரான தங்கள் தவற்றை உணர்த்தி வந்த சத்தத்தை ஒரே இரவுக்குள் ஒரே அடியில் தீர்த்துவிட சதித் திட்டம் தீட்டுவார்கள்.

தீயதூதர்களின் தூண்டுதலின்படி, தேவமக்களைக் கொல்வதற்காக ஆயுதமணிந்தவர்கள் வருவார்கள். அப் போது தேவனுடைய பிள்ளைகளில் சிலர் சிறைச்சாலைகளி லும், சிலர் காடுகளிலும், சிலர் மலைகளிலும் இருப்பார்கள். இவர்கள் தேவனுடைய பாதுகாப்புக்காக மன்றாடுவார்கள். நிலைமை கட்டுக்கடங்காது போகும் வேளையில், தேவன் தாமே தலையிடுவார். வேதாகமம் சொல்கிறது: 'பண்டிகை ஆசரிக்கப்படும் இராத்திரியிலே பாடுகிறதுபோலப் பாடுவீர் கள்; கர்த்தருடைய பர்வதமாகிய இஸ்ரவேலின் கன்மலை யண்டைக்குப்போக நாகசுரத்தோடே நடந்து வருகிறபோது மகிழுகிறதுபோல மகிழுவீர்கள். கர்த்தர் மகத்துவமானவர்; தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணி, உக்கிர கோபத்தினா லும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும், இடி பெரு வெள்ளம் கல்மழையினாலும் தமது புயத்தின் வல்லமை யைக் காண்பிப்பார்.' ஏசாயா 30:29,30.

துன்மார்க்கர் பெருங்கூட்டமாக நீதிமான்கள்மேல் பாய ஆயத்தமாவார்கள்; அப்போது இரவைவிட கடுமை

யான இருள், பூமியை மூடும். வானத்தில் தோன்றின வானவில் ஒன்று, ஜெபிக்கும் ஒவ்வொரு கூட்டத்தையும் சுற்றியிருப்பதுபோல் தெரியும். கோபத்தோடு துரத்திவந்த கூட்டம் திகைத்துநிற்கும். யாரைத் துரத்தி வந்தார்கள் என்பது மறந்துவிடும். தேவ உடன்படிக்கையின் சின்னத்தைப் பார்த்து, அதன் பிரகாசத்திலிருந்து தப்ப ஏங்குவார்கள்.

'மேலே பாருங்கள்' எனும் சத்தத்தை தேவனுடைய மக்கள் கேட்பார்கள். ஆதி காலத்தில் உயிர்த்தியாகம் செய்த ஸ்தேவான்போல, அவர்கள் மேலேபார்த்து, தேவனுடைய மகிமையையும், மனுஷகுமாரன் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பதையும் காண்பார்கள். அப் 7:55,56. தாழ்மையின் தழும்புகளை அடையாளங் கண்டுகொள்வார்கள். 'நான் எங்கே இருக்கிறேனோ அங்கே நீர் எனக்குத் தந்தவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்' என்று அவர் வேண்டுவதைக் கேட்பார்கள். யோவான் 17:24. 'தீங்கும் தீட்டும் இல்லாத பரிசுத்தர் வருகிறார்கள்; இவர்கள் என் பொறுமைபற்றிய வார்த்தையைக் காத்துக்கொண்டவர்கள்' என்று சொல்கிற சத்தம் கேட்கும்.

விடுதலை வருகிறது!

தேவன் தம் மக்களை விடுவிக்கும்படி, நடுராத்திரியில் தம் வல்லமையை விளங்கச்செய்வார். சூரியன் முழுப் பிரகாசத்தோடு ஜொலிப்பதுபோல் தோன்றும். அற்புத அடையாளங்கள் நிகழும். அந்தக் காட்சி துன்மார்க்கருக்குத் திகிலானதாகத் தோன்றும்; நீதிமான்களோ, அவை தங்கள் விடுதலைக்கான அடையாளங்களென அறிந்துகொள்வார்கள். பயங்கரமாகக் காட்சியளிக்கும் வானத்தில், தெளிவாக மகிமை காணப்படும் வேளையில், திரளான தண்ணீர்களின் பிரவாகம் ஒலிக்கும் சத்தத்தைப்போல், 'ஆயிற்று' என்று தேவனுடைய பெருஞ்சத்தம் கேட்டது. வெளி 16:17.

அந்தச் சத்தம் வானங்களையும் பூமியையும் அதிரச்செய்தது. 'பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை.' வெளி 16:18. கன்மலைகள் வெடித்து, எல்லாப்பக்கங்களிலும் சிதறின. சமுத்திரம்

சீற்றங்கொண்டு எழுந்தது. பிசாசுகளின் பேரொலிபோல் சூறாவளி ஓலமிட்டது. பூமியின் மேல்மட்டம் தகர்ந்துபோக ஆரம்பித்தது; அதன் அஸ்திபாரங்கள்தாமே நகர்வதுபோல் தெரிந்தன. துன்மார்க்கத்தினால் அழிந்த சோதோமைப் போல், சீறிவந்த தண்ணீர்களுக்குள் துறைமுகங்கள் மூழ்கின. 'தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தை "மகா பாபிலோனுக்குக்' கொடுக்கும்படி, தேவனுக்குமுன்பாக நினைவூட்டப்பட்டது. வெளி 16:19. மகா கல்மழை உண்டாகி, அழிவை ஏற்படுத்தியது. பெருமையான நகரங்கள் தாழ்த்தப்பட்டன. மனிதர் வெகுவாக முதலீடுசெய்திருந்த செல்வச்செழிப்பான இடங்கள், அவர்களுடைய கண்களுக்குமுன் நொறுங்கி விழுந்தன. சிறையின் சுவர்கள் இரண்டாகப் பிளந்தன; தேவனுடைய பிள்ளைகள் விடுதலையடைந்தார்கள்.

கல்லறைகள் திறந்தன. 'பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்'. அவரைக் குத்தினவர்களும், கிறிஸ்துவின் மரணவேதனையைக் கண்டு பரியாசம்பண்ணினவர்களும், அவருடைய சத்தியத்தைத் தீவிரமாக எதிர்த்தவர்களும் உயிர்த்தெழுவார்கள்; உண்மையோடும் கீழ்ப்படிதலோடும் வாழ்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கனத்தைப் பார்ப்பார்கள். தானி 12:2; வெளி 1:7.

பூமியைச்சுற்றிலும் தீக்கதிர்கள்போல் ஆக்ரோஷமாக மின்னல்கள் பிரகாசித்தன. இடிமுழக்கத்தைவிட பலத்த, பயங்கரமான, விநோதமான ஒலிகள் துன்மார்க்கரின் அழிவை அறிவித்தன. தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொண்ட மக்களைக் கொடுமைப்படுத்தினவர்கள், அகந்தையும் இறுமாப்பும் உள்ளவர்கள் இப்போது பயத்தால் நடுங்கினார்கள். பிசாசுகள் திகிலடைந்திருக்க, மனிதர்கள் இரக்கம்வேண்டிக் கெஞ்சினார்கள்.

கர்த்தருடைய நாள்

'பூமியைத் தக்களிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய

மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்பு களிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும் படிக்கு, மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கி யிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும் தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக் கும் எறிந்துவிடுவான்' என்கிறது ஏசாயா 2:20,21.

கிறிஸ்துவுக்காக அனைத்தையும் தியாகம்செய்தவர் கள் இப்போது பத்திரமாக இருப்பார்கள். இவர்கள் தங் களுக்காக மரித்தவர்மேல் தங்களுக்கிருந்த நம்பிக்கையை உலகத்தார்முன் மரணத்தறுவாயிலும் சாட்சிசொன்னவர் கள். சற்றுமுன்பு, வெளிறிப்போயிருந்த அவர்கள் முகங்கள் இப்போது ஆச்சரியத்தால் பிரகாசித்தன. 'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூல மான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினா லும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கி னால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்' என்று வெற்றிக்கீதம் எழுப்பினார்கள். சங்கீதம் 46:1-3.

பரிசுத்த நம்பிக்கையின் இந்த வார்த்தைகள் தேவனு டைய சந்நிதியைச் சென்றடைந்ததும், பரலோக நகரத்தின் மகிமையானது, திறந்திருந்த அதன் கதவுவழியே, அலை அலையாய் புறப்பட்டு வந்தது. அப்போது, இரு கற்பலகை களைப் பிடித்திருந்த கரம் வானத்தில் காணப்பட்டது. சீனா யில் அறிவிக்கப்பட்ட பரிசுத்த நியாயப்பிரமாணத்தை வைத்தே நியாயத்தீர்ப்பு என்று சொல்லப்பட்டது. எல்லோ ரும் வாசிக்கக்கூடியவிதத்தில் நியாயப்பிரமாணத்தின் சொற்கள் தெளிவாகத் தெரிந்தன. நினைவுகள் விழித்தன; தவறான கொள்கை, விசுவாசத்துரோகம் ஆகியவற்றின் அந்தகாரம் ஒவ்வொருவர் சிந்தையிலுமிருந்து நீங்கின.

தேவனுடைய பிரமாணத்தை அவமதித்தவர்களுக்கு இப்போது ஏற்பட்ட பயத்தையும் ஏமாற்றத்தையும் சொற் களால் விவரிக்க முடியாது. உலகத்தாரின் தயவுக்கு ஆசைப் பட்டு, கட்டளைகளைத் தள்ளினார்கள்; அவற்றை மீறும்படி மற்றவர்களையும் தூண்டினார்கள். இப்போது, அவர்கள் புறக்கணித்த கட்டளையே அவர்களைக் குற்றவாளிகளாகத்

தீர்க்கிறது. இனிச் சாக்குச் சொல்ல வாய்ப்பில்லையென்று தெரிந்துகொண்டார்கள். நியாயப்பிரமாணத்தின் எதிரிகள் சத்தியத்தையும் தங்கள் கடமையையும் விளங்கிக்கொண்டார்கள். ஓய்வுநாளே ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை என்று புரிந்துகொண்டார்கள்; மணலான அஸ்திபாரத்தின் மேல் தாங்கள் கட்டியிருப்பதையும், தேவனுக்கு எதிராக சண்டையிட்டதையும் காலம்கடந்து புரிந்துகொண்டார்கள். போதகர்கள் இவர்களைப் பரதீசுக்கு வழிநடத்துவதாகச் சொல்லி, அழிவுக்கு வழிநடத்தியிருந்தார்கள். பரிசுத்த பணியைச் செய்வதில் மனிதரின் கடமைதான் எத்துணை பெரியது! அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்தால் அதன் விளைவுகள் எத்துணை கொடியவை!

இராஜாதி இராஜா வருகிறார்

இயேசு வரப்போகிற நாளும் நேரமும் சொல்லப்பட்டது. தேவமக்கள் அதைக் கேட்டார்கள். அவர்கள் முகங்கள் மகிமையால் ஜொலித்தன. அந்நேரத்தில் கிழக்கில் சிறிய கருமேகம் ஒன்று தோன்றியது. அது இரட்சகரைச் சூழ்ந்திருந்த மேகம். அது தங்களை நெருங்கிவருவதை தேவமக்கள் ஆர்வத்தோடு அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பக்கத்தில் வந்தபோது, அது பெரிய வெண்மேகமாகத் தெரிந்தது. அதன் அடிப்பாகம், பட்சிக்கிற அக்கினி போல் பிரகாசித்தது; மேலே, உடன்படிக்கையின் வானவில் காணப்பட்டது. 'பாடுகள் நிறைந்த மனிதனாக' அல்ல, ஜெயங்கொள்கிற வல்லவராக வந்தார் இரட்சகர். பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவும் கணக்கிலடங்காப் பரிசுத்த தூதர்கள் அவரைச் சுற்றிலும் இருந்தார்கள். ஜீவாதிபதியை எல்லாக் கண்களும் கண்டன. அவர் சிரசில் மகிமையின் மணிமுடி இருந்தது; முகச்சாயல், மதிய நேர சூரிய வெளிச்சத்திலும் பிரகாசமாயிருந்தது. 'ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது'. வெளி 19:16.

எரியும் அக்கினி ஜுவாலை சூழ்ந்திருக்க, இராஜாதி இராஜா மேகங்களின் மேல் இறங்கிவந்தார். அவருக்குமுன் பூமி அதிர்ந்தது. 'நம்முடைய தேவன் வருவார், மவுனமா

யிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்'. சங்கீதம் 50:3,4.

'பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும்நோக்கி, "நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள். அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்?" என்றார்கள்'. வெளி 6:15-17. கேலிப்பேச்சு நின்றது. பொய்பேசின உதடுகள் மூடின. வேண்டுதலின் சத்தமும், அழுகிறவர்களின் சத்தமும்தவிர வேறு சத்தம் ஏதும் கேட்கவில்லை. தங்களால் புறக்கணிக்கப்பட்டவரின் முகத்தைக் காண்பதைவிட, கன்மலைகளின்கீழ் புதைவது நல்லதென்று துன்மார்க்கர் நினைத்தார்கள். மரித்தோரின் காதுகளைத் துளைத்துச் சென்ற சத்தம் அவர்களுக்குத் தெரிந்த சத்தம்தான். மனந்திரும்புமாறு கனிவோடு அவர்களை அழைத்த அந்தக் குரலை பலமுறை கேட்டிருந்தார்கள். ஒரு நண்பனாக, சகோதரனாக, மீட்பராக எத்தனை முறை பேசியிருக்கிறார். புறக்கணிக்கப்பட்ட எச்சரிப்புகளையும் நிராகரிக்கப்பட்ட அழைப்புகளையும் அந்தக் குரல் நினைவுக்குக் கொண்டு வந்தது.

கிறிஸ்துவை அவர் தாழ்மையில் பரியாசம் பண்ணியவர்கள் உண்டு. 'மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்' என்று அவர் சொன்னபடி, அவர் மகிமையில் வருவதையும், சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் அவர்கள் காண்பார்கள். மத்தேயு 26:64. இயேசுவின் ராஜமேன்மையைப் பரியாசம்செய்த அகங்காரி ஏரோது அங்கிருப்பான். அவர் சிரசில் முள்முடி சூட்டியோரும், அவர் கையில்

சொல்லிக் கேலிசெய்தோரும், பரியாசம் பண்ணு வதற்காக அவருக்கு முள்முடி சூட்டினோரும், அவர்மேல் துப்பினோரும் அவர் பிரசன்னத்திலிருந்து தப்பியோட எத்தனிப்பார்கள். அவர் கரங்களில் ஆணி அறைந்தவர்கள் அந்தக் காயங்களைப் பார்த்தோடு பார்ப்பார்கள்.

ஆசாரியரும் தேசாதிபதிகளும் வெற்றிச்சிரிப்பால் 'மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை' என்று தங்கள் தலைகளைத் துலுக்கிச் சிரித்ததைப் பார்த்தோடு நினைவுகூருவார்கள். மத் 27:42. "அவனைச் சிலுவையில் அறையும், அவனைச் சிலுவையில் அறையும்!" என்ற சத்தம் எருசலேமில் எதிரொலித்ததே! அந்தச் சத்தத்தை மிஞ்சிய ஒலியாக, "அவர் தேவகுமாரன்" எனும் சத்தம் கேட்கும். இராஜாதி ராஜாவின் பிரசன்னத்திலிருந்து தப்பியோட அவர்கள் எத்தனிப்பார்கள்.

சத்தியத்தைப் புறக்கணிப்போரின் வாழ்விலும் மனச்சாட்சி விழித்துக்கொள்ளும் தருணம் வரும்; அப்போது, பயனற்ற மனஉளைச்சல் ஆத்துமாவை இம்சைப்படுத்தும். ஆனாலும், இனி ஏற்படப்போகும் குற்றஉணர்வோடு ஒப்பிட்டால், இவை எம்மாத்திரம்! அவர்கள் திகிலடையும் வேளையில், 'இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்' என்று பரிசுத்தவான்கள் சந்தோஷமாக ஆர்ப்பரிக்கும் சத்தத்தைக் கேட்பார்கள். ஏசாயா 25:9.

தேவனுடைய பிள்ளைகளின் உயிர்த்தெழுதல்

நித்திரையாயிருக்கும் பரிசுத்தவான்களை தேவகுமாரனுடைய சத்தம் விழிக்கச்செய்யும். பூமிமுழுவதிலுமுள்ள மரித்தோர் அந்தச் சத்தத்தைக் கேட்பார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்கிறவர்கள் உயிர்த்தெழுந்து, ஒரு பெரிய சேனையாக நிற்பார்கள். மரணச்சிறையிலிருந்து விடுதலையடைந்து, அழியா மகிமையைத் தரித்தவர்கள், "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" என்று ஆர்ப்பரிப்பார்கள். 1 கொரி 15:55.

கல்லறைக்குள் சென்றபோது இருந்தவண்ணமாகவே எல்லாரும் வெளியேவருவார்கள். ஆனால், நித்திய

இளமையைப் பெற்ற புத்தம்புதியவர்களாய், உற்சாகத் தோடு எழுந்திருப்பார்கள். இழந்துபோனதை மீட்டுத் தரவே கிறிஸ்து வந்தார். இழிவான நம் சரீரங்களை தம் மகிமையின் சரீரத்திற்கு ஒத்தவையாக அவர் மாற்றுவார். முன்பு பாவக்கறை படிந்து, சீர்கெட்டு, அழியும் தன்மை பெற்றிருந்த சரீரம், இப்போது பூரணமும் அழகும் அழியாத்தன்மையும் உடையதாக மாறும். குறைபாடுகள் கல்லறையிலேயே விடப்படும். மனிதர் ஆதியில் பெற்றி ருந்த மகிமையை நிறைவாகப் பெறும்மட்டும், பாவ சாபத் தின் கடைசிச்சுவடு மறையும்மட்டும் மீட்கப்பட்டவர்கள் 'வளருவார்கள்'. மல்கியா 4:2. கிறிஸ்துவுக்கு உண்மை யானவர்கள் தங்கள் மனதிலும் ஆத்துமாவிலும் சரீரத்தி லும் ஆண்டவர் சாயலைப் பூரணமாகப் பிரதிபலிப்பார்கள்.

உயிரோடிருக்கும் நீதிமான்கள், 'ஒரு இமைப்பொழு தில்' மறுரூபமாவார்கள்; தேவ சத்தம் கேட்டவுடன் அழியாமை பெறுவார்கள். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான் களோடு சேர்ந்து, கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக ஆகா யத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். தேவதூதர்கள், 'அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசை களிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்'. மத் 24:31. தாய்மார் கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் கரங்களில் அணைத்துக் கொள்வார்கள். மரணம் பிரித்த நண்பர்கள் மீண்டும் இணை வார்கள்; இனி அவர்கள் பிரிவதில்லை; சந்தோஷக் கீதங் களோடு தேவனுடைய நகரத்தைநோக்கிச் செல்வார்கள்.

பரிசுத்த நகரத்திற்குள்

மீட்கப்பட்ட திரளான கூட்டத்தாரின் கண்கள் இயேசு வையே நோக்கியிருக்கும். மனுஷனைப்பார்க்கிலும் அவர் முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவர் ரூபமும் முன்பு அந்தக்கேடு அடைந்திருந்தது. இப்போது அவர் மகிமையை ஒவ்வொரு கண்களும் கண்டன. ஏசாயா 52:14. ஜெயங்கொண்டவர்களின் சிரசுகளில் மகிமையின் கிரீடத்தை இயேசு சூட்டுவார். அனைவரும் தங்களுக்குரிய 'புது நாமம்' எழுதியிருந்த கிரீடத்தைச் சூடி

யிருந்தார்கள். வெளி. 2:17. 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்று அதில் எழுதப்பட்டிருந்தது. வெற்றிக் குருத்தோலையும் சுரமண்டலமும் பிடித்திருந்தார்கள். பாடற்குழு தூதர்கள் சுருதிகூட்ட, ஒவ்வொருவரும் தங்கள் சுரமண்டலங்களை நயத்தோடு மீட்டி, இன்னிசை எழுப்பினார்கள். 'நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக' என்று ஒவ்வொருவரும் நன்றியோடு துதித்தார்கள். வெளி 1:5,6.

மீட்கப்பட்டோர்முன் பரிசுத்த நகரம் இருந்தது. அதன் கதவுகளை இயேசு திறந்தார்; சத்தியத்தைக் காத்துக்கொண்டவர்கள் உள்ளே சென்றார்கள். 'வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்' எனும் இயேசுவின் சத்தம் கேட்டது. மத்தேயு 25:34. தம் இரத்தத்தால் மீட்டுக்கொண்டவர்களை, 'இதோ, நானும், நீர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும். அவர்களைக் காத்துக்கொண்டு வந்தேன்' என்று சொல்லி, தம் பிதாவின்முன் நிறுத்தினார். எபிரெயர் 2:13; யோவான் 17:12. ஓ! மீட்கப்பட்டவர்கள் நித்திய பிதாவைக் காணும் வேளை எத்துணை மகிழ்ச்சியானது! அவர் சாயலைக் காண்பார்கள்; பாவக்கேடுகள் ஒழிந்தன; மனிதர் மீண்டும் தேவனோடு இசைந்திருப்பார்கள்.

தாம் வேதனையும் நிந்தையும் அடைந்து, இரட்சித்த ஆத்துமாக்களை தம்முடைய மகிமையின் ராஜ்யத்தில் காணும்போது, இரட்சகர் சந்தோஷமடைவார். மீட்கப்பட்டோரும் அவருடைய சந்தோஷத்தில் பங்குகொள்வார்கள்; தங்கள் ஜெபத்தாலும் பிரயாசத்தாலும் அன்பான தியாகங்களினாலும் தாங்கள் ஆதாயப்படுத்தினோரையும் காண்பார்கள். ஆதாயப்பட்டோர் இன்னும் பலரை ஆதாயப்படுத்தினதையும், இவர்கள் இன்னும் பலரை இரட்சிப்புக்குள் வழிநடத்தினதையும் கண்டு, அவர்களுடைய இருதயம் சந்தோஷத்தால் பொங்கும்.

மீட்கப்பட்டவர்கள் தேவனுடைய நகரத்திற்குள் நுழைந்ததும், சந்தோஷ ஆரவாரம் எதிரொலிக்கும். இரண்டு ஆதாம்களும் சந்திக்கும் வேளை அது. மனித இனத்தின் தகப்பனை தேவ குமாரன் வரவேற்பார். அவரே அவனைச் சிருஷ்டித்தார். அவன் பாவம்செய்துவிட்டான்; அவன் பாவங்களுக்காக அவர் சிலுவையில் அறையப் பட்டு, தழும்புகளைப் பெற்றார். அந்தத் தழும்புகளைக் கண்டதும், அவமானத்தோடு கிறிஸ்துவின் பாதத்தில் ஆதாம் விழுவான். இரட்சகர் அவனை எழுப்பிவிடுவார்; அவன் வெகுகாலத்திற்குமுன் இழந்துபோன ஏதேன் வீட்டை மீண்டும் அவனுக்குக் காட்டுவார்.

ஆதாமின் வாழ்வில் வேதனை நிறைந்திருந்தது. இலை உதிர்ந்தபோதும், பலியிடப்பட்ட போதும், மனித னின் பரிசுத்தத் தன்மை களங்கப்பட்டபோதும் அவனுக்கு தன் பாவமே நினைவுக்கு வந்தது. அவன்தான் பாவத்திற்கு காரணனெனக் குற்றஞ்சாட்டப்பட்ட போதெல்லாம், குற்ற உணர்வு அவனை வாட்டியது. மெய்யாகவே அவன் தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, உயிர்த்தெழுதலின் நம்பிக் கையோடு மரித்தான். பாவநிவாரணத்தால் மீண்டும் முன் பிருந்த நிலைக்குத் திரும்பியிருக்கிறான்.

தான் பாவம் செய்வதற்குமுன்பு, தனக்குக் கனிதந்து, தன்னை மகிழ்வித்த மரங்களைக் கண்டபோது, ஆதாமுக்கு மகிழ்ச்சி பொங்கும். தன் கைகள் வளர்த்த கொடிகளையும், தன் பராமரிப்பில் வளர்ந்த பூக்களையும் கண்டு மகிழ்வான். மெய்யாகவே இதுவே புதிதான ஏதேன்.

ஜீவ விருட்சத்திடம் இரட்சகர் அவனை அழைத்துச் சென்று, அதன் கனியைப் புசிக்கும்படி கூறுகிறார். தன் குடும்பத்தில் திரளானவர்கள் மீட்கப்பட்டிருப்பதைக் காண் கிறான். அவன் தன் கிரீடத்தை இயேசுவின் பாதத்தில் வைத்து விட்டு, மீட்பரைக் கட்டியணைத்துக்கொள்கிறான். அவர் சுரமண்டலத்தை மீட்ட ஆரம்பித்ததும், 'ஆட்டுக்குட்டியா னவர் கனத்துக்குரியவர், ஆட்டுக்குட்டியானவர் மாண் டாரே' எனும் ஜெயகீதம் பரலோக மாளிகை எங்கும் பிரதி பலிக்கிறது. ஆதாமின் குடும்பத்தார் தங்கள் கிரீடங்களை

இரட்சகரின் பாதத்தில் வைத்து, அவரைப் பணிந்து தொழுகிறார்கள். ஆதாம் வீழ்ந்தபோது தேவதூதர்கள் அழுதார்கள்; ஆனால், தம்முடைய நாமத்தை விசுவாசித்த அனைவரையும் கல்லறையிலிருந்து இயேசு விடுவித்தபோது, அவர்கள் களிகூருகிறர்கள். மீட்பின் பணி இப்போது நிறைவுபெற்றதைக் கண்டு, ஏகக்குரலில் தேவனைத் துதிக்கிறார்கள்.

'மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலருகே' கூடி நிற்பார்கள். வெளி 15:2,3. மனிதரிலிருந்து மீட்கப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர், மோசேயின் பாடலும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலுமாகிய 'புதுப்பாட்டைப்' பாடுவார்கள். இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரைத் தவிர வேறு யாரும் அந்தப் பாட்டைப் பாடக்கூடாதிருக்கும். வேறெந்த கூட்டத்தாரும் அனுபவித்திராத அனுபவப் பாடல் அது. 'ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள்' இவர்களே. 'இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்'. வெளி 14:4,5. தேசத்தார் இதுவரையிலும் கண்டிராத ஓர் இக்கட்டுக் காலத்தை இவர்கள் கடந்துவந்தவர்கள். யாக்கோபின் இக்கட்டுக்காலத்தின் வேதனையைச் சகித்தவர்கள். தேவனுடைய கடைசி வாதை ஊற்றப்பட்ட சமயத்தில், தங்களுக்காகப் பரிந்துபேச யாருமே இன்றி நின்றவர்கள். அவர்கள், 'தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்'; தேவனுக்குமுன்பாக 'இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை'' "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை' 'சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாம் இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்'. வெளி 7:14; 14:5; 7:16,17.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இரட்சகரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் குறுகலான பாதையில்தான் நடந்தார்கள். அவர்கள் உபத்திரவமெனும் குகையில் சுத்திகரிக்கப்பட்டார்கள். இயேசுவுக்காகப் பகையும் அவதூறும் சுயமறுப்பும் பெரும் ஏமாற்றங்களும் அனுபவித்தார்கள். பாவத்தின் தீமை, வல்லமை, குற்றஉணர்வு, வேதனைகளைப் புரிந்துகொண்டார்கள்; அதனால் பாவத்தை அருவருப்புடன் பார்த்தார்கள். அதைப் போக்குவதற்குச் செய்யப்பட்ட நித்தியபலியை உணர்ந்தபோது, அவர்களில் தாழ்மை பிறந்தது; உள்ளத்தில் நன்றி நிறைந்தது. அதிகம் மன்னிக்கப்பட்டதால், அதிகம் அன்பு கூர்ந்தார்கள். லூக்கா 7:47. கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொண்டு, அவருடைய மகிமையில் பங்குகொள்ளத் தகுதிபெற்றார்கள்.

தேவனுடைய சுதந்தரவாளிகள் மோட்டு அறைகளிலும் தொழுவங்களிலும் நிலவறைகளிலும் தூக்குமேடைகளிலும் மலைகளிலும் வனாந்தரங்களிலும் குகைகளிலும் குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். சாத்தானுக்கு அடிபணிய மறுத்ததினால் பழிசுமத்தப்பட்டு, இலட்சக்கணக்கானோர் மரணத்தைச் சந்தித்தார்கள். இனி உபத்திரவமும் சிறுமையும் இல்லை; தப்பித்து ஓடவேண்டியதும் இல்லை. பூமியின் பெரும் மன்னர்கள் உடுத்தியிருந்த அங்கிகளைவிட விலையுயர்ந்த அங்கிகளை பரிசுத்தவான்கள் இதுமுதல் உடுத்துவார்கள்; பூலோக பேரரசர்களுக்குச் சூட்டப்பட்ட கிரீடங்களைவிட மகிமைவாய்ந்த கிரீடங்களைச் சூடியிருப்பார்கள். மகிமையின் ராஜா அவர்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார். துதியும் தெளிவும் இனிமையும் இசைவும் நிறைந்த பாடல்களைப் பாடுவார்கள். 'சிங்காசனத் தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் இரட்சிப்பின் மகிமை உண்டாவதாக' என்று பரலோகச் சபைகளில் இன்னிசை எதிரொலிக்க, 'ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக' என்று பதில் பாடலும் கேட்டது. வெளி 7:10,12.

மீட்பு எனும் அற்புதக் கருத்தைப்பற்றி இந்த உலகில் நாம் அறிந்துகொள்வது ஓர் ஆரம்பம்தான். குறைவான நம் அறிவைக்கொண்டு நாம் எவ்வளவு முயன்றாலும், வெட்கம்-மகிமை, மரணம்-ஜீவன், சிலுவையில் சந்தித்த நியாயம்-இரக்கத்தைப்பற்றியும், அவற்றின் முக்கியத்துவம்பற்றியும் முழுவதும் புரிந்துகொள்ள முடியாது. நம்மை மீட்டுக்கொண்ட அன்பின் நீளத்தையும் அகலத்தையும் ஆழத்தையும் உயரத்தையும் குறைவாகவே புரிந்து கொள்ளமுடியும். மீட்கப்பட்டவர்களும்கூட தாங்கள் காண்கிற பிரகாரம் கண்டுகொண்டாலும், அறிகிறபிரகாரம் அறிந்துகொண்டாலும், மீட்பின் திட்டத்தை முற்றிலும் புரிந்துகொள்ள முடியாது. ஆனால், முடிவில்லாக் காலங்களாக, புதுப்புது உண்மைகள் புலப்படும்; மனதில் மகிழ்ச்சியும் வியப்பும் நிறையும். பூமியின் வேதனைகள், துக்கங்கள், சோதனைகளோடு அவற்றை விளைவித்தவைகளும் ஒழிந்தாலும், தங்கள் இரட்சிப்புக்குக் கொடுக்கப்பட்ட விலையை, தேவபிள்ளைகள் நினைவில் வைத்திருப்பார்கள்.

சிலுவைதான் மீட்கப்பட்டவர்களின் நித்தியப் பாடலாகத் திகழும். மகிமைப்பட்ட கிறிஸ்துவில் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைக் காண்பார்கள். விழுந்துபோன மனிதனை உயர்த்துவதற்கு, பரலோக மன்னர்தாமே தம்மைத் தாழ்த்தினார்; பாவத்தின் சாபத்தையும் வெட்கத்தையும் சுமந்தார்; தம்முடைய பிதாவின் முகம் அவருக்கு மறைக்கப்பட்டது; தொலைந்துபோன உலகின் பாவபாரங்கள் அவர் உள்ளத்தை உடைத்து, அவர் ஜீவனையே போக்கியது; மீட்கப்பட்டவர்கள் இவற்றையெல்லாம் ஒரு நாளும் மறக்கமாட்டார்கள். சர்வலோகங்களையும் சிருஷ்டித்தவர், மனிதன்மேல் வைத்த அன்பினால், தம் மகிமையைத் துறந்தார் என்பது சர்வலோகத்தையும் எப்போதும் திகைக்கச்செய்யும். இரட்சிக்கப்பட்ட கூட்டத்தார் தங்கள் மீட்பரை நோக்கிப்பார்த்து, அவருடைய ராஜ்யத்திற்கு முடிவே இல்லையென அறிந்துகொள்வார்கள்; 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரர்; அவர் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் தேவனுக்காக நம்மை மீட்டுக்கொண்டார்' என்று பாடுவார்கள்.

சிலுவையின் இரகசியமே பிறமறைபொருட்கள் அனைத்தையும் விளக்கமுடியும். சர்வஞானியானவர் நம்மை இரட்சிப்பதற்கு, தம் குமாரனைப் பலியாக்குவதை விட வேறுதிட்டம் எதையும் தீட்டமுடியாதிருந்தது தெரிய வரும். பரிசுத்தமும் மகிழ்ச்சியும் அழியாமையும் கொண்ட வர்களாய் மீட்கப்பட்டோரை பூமியில் வாழச்செய்வதால் அவருக்குக் கிடைக்கிற மகிழ்ச்சியே அந்தப் பலிக்குத் தகுந்த சன்மானமாகும். தாம் செலுத்தின விலைக்காக தேவன் திருப்தியடையக்கூடிய அளவுக்கு, ஒவ்வோர் ஆத்துமா வும் அவருக்கு முக்கியமானது. கிறிஸ்துவும்கூட, தம் முடைய மகத்தான தியாகத்தின் பலனைக் கண்டு திருப்தி அடைவார்.

அதிகாரம் 11

அன்பின் வெற்றி

மீட்கப்பட்டோர் கூட்டத்தோடும், தூதர் பரிவாரத்தோடும் 1000 வருட முடிவில்[1] கிறிஸ்து பூமிக்குத் திரும்பி வருவார். மரித்த துன்மார்க்கர் தங்கள் நித்திய அழிவைப் பெறும்படி, அவர்களை உயிர்த்தெழுப்புவார். கடற்கரை மணல் போன்ற திரளானவர்களாய், நோய்களின் அறிகுறிகளோடும், மரணத்தின் சாயலோடும் அவர்கள் எழுந்து வருவார்கள். முதலாம் உயிர்த்தெழுதலுக்கும் இதற்கும் எத்துணை வித்தியாசம்!

தேவகுமாரனின் மகிமையைக் காணும்படி ஒவ்வொரு கண்ணும் உற்றுநோக்கும். துன்மார்க்கக் கூட்டத்தார், 'கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்' என்று ஒரே குரலில் கூறுவார்கள். மத்தேயு 23:39. அன்பினால் இப்படிச் சொல்லமாட்டார்கள்; உண்மையின் கட்டாயம் அவர்களை அப்படிச் சொல்லவைக்கும். துன்மார்க்கர் தாங்கள் கல்லறைக்குள் சென்றபோது இருந்தது போலவே, கல்லறையிலிருந்து வெளிவரும்போதும் கிறிஸ்துவுக்கு எதிரான அதே பகையோடும் கலகக்குணத்தோடும் காணப்படுவார்கள். தங்கள் கடந்தகால வாழ்வைச் சரிசெய்ய, தவணையின் காலம் இனி அவர்களுக்கு இருக்காது.

'அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின் மேல் நிற்கும். ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதி

[1] இதுதான் வெளிப்படுத்தல் 20:1-6 இல் சொல்லப்பட்டுள்ள ஆயிரவருட ஆட்சி. மாபெரும் போராட்டம் அத்தியாயம் 41 இல் இதைப்பற்றி அதிகம் வாசிக்கலாம்.

ராகப் பிளந்துபோம்' என்கிறது சகரியா 14:4. புதிய எருச லேம் பரலோகிலிருந்து இறங்கி, அதற்கென ஆயத்தமாக் கப்பட்ட இடத்தில் வைக்கப்படும். கிறிஸ்து தம் பிள்ளை களோடும் தேவ தூதர்களோடும் நகரத்திற்குள் செல்லுவார்.

பிறரை ஏமாற்ற வழியின்றி, ஏமாற்றமும் வெறுப்பும் நிறைந்திருக்கும் அந்தகாரப்பிரபு, மரித்த துன்மார்க்கர் உயிர்த்தெழுந்ததும் புது உற்சாகம் அடைவான்; ஏராளமா னோர் தன் பக்கத்தில் இருப்பதாக நினைப்பான். மாபெரும் போராட்டத்தில் பின்வாங்குவதில்லையென்று உறுதிகொள் வான். பாவிகளை தன் பக்கம் சேர்ப்பான். கிறிஸ்துவை மறுதலித்து, அந்தக் கலகக்காரனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டவர்கள் அவர்கள்; அவன் சொல்வதைச் செய்ய ஆயத்தமாக இருப்பவர்கள். அவன் ஆதியில் செய்தது போலவே இப்போதும் தன்னைச் சாத்தானென ஒத்துக் கொள்ளமாட்டான். தான்தான் உலகத்தின் சொந்தக்கார னென்றும், அநியாயமாக அது தன்னிடமிருந்து பிடுங்கப் படுகிறதென்றும் கூறுவான். தானே மீட்பரென்றும், தன் வல்லமையால்தான் அவர்கள் கல்லறைகளிலிருந்து எழுந்ததாகவும் சொல்லி, தன்னால் வஞ்சிக்கப்பட்டவர் களை ஏமாற்றுவான். பெலவீனர்களைப் பெலப்படுத்தி, தனக்கு வல்லமை இருப்பதாகச் சொல்லி அனைவரையும் ஊக்கப்படுத்தி, தேவ நகரத்தைக் கைப்பற்ற அவர்களை நடத்திச்செல்வான். மரித்த நிலையிலிருந்து உயிர்த்த கணக்கிலடங்காதோரைச் சுட்டிக்காட்டி, தானே அவர்களின் தலைவனென்றும், சிங்காசனத்தையும் ராஜ்யத்தையும் தன்னால் மீண்டும் கைப்பற்றமுடியுமென்றும் கூறுவான்.

திரளான அந்தக் கூட்டத்தில், ஜலப்பிரளயத்திற்கு முன் நெடுங்காலம் வாழ்ந்த ஆஜானுபாகுவான மனிதர்களும் அறிவில் சிறந்தவர்களும் நிற்பார்கள்; தங்கள் அற்புத வேலைகளால் உலகத்தை மயக்கினவர்களும் இருப்பார்கள்; ஆனால், அவர்கள் கொடுமை, தீயகண்டுபிடிப்புகளின் நிமித்தமே தேவன் அவர்களை பூமியிலிருந்து அழித்திருந் தார். ஒரு யுத்தத்தில்கூட தோற்காத இராஜாக்களும் தளபதி களும் அதில் நிற்பார்கள். மரித்தபின் அவர்களில் எந்த மாற்றமும் இல்லை. கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த

6. what is called programs?

Programs that will help you learn more about Jesus, the Great Hope for our world:

Radio

ADVENTIST WORLD RADIO

Program Schedule

25 March 2012 to 27 October 2012

Language	Days	Time	Band-Frequency	Station
Assamese	(Sun, Wed)	7:00pm	19-15660	Guam
Bangla	Daily	6:30pm	19-15215	Guam
Bangla	Daily	6:00pm	16-17535	Germany
English	Daily	5:30pm	16-17535	Germany
English	Daily	9:30pm	25-11750	Guam
English	Daily	9:30pm	19-15360	Guam
English	Daily	8:30pm	19-15255	Germany
English	Daily	10:00pm	25-11740	Guam
Hindi	Daily	9:00pm	19-15605	Guam
Hindi	Daily	9:00pm	19-15255	Germany
Kannada	Daily	9:00pm	25-11780	Guam
Malayalam	Daily	9:00pm	25-11870	Guam
Marathi	Daily	9:00pm	41-7410	Guam
Mizo	Daily	8:30pm	19-15690	Guam
Nepali	Daily	8:30pm	19-15595	Germany
Punjabi	Daily	8:30pm	19-15255	Germany
Tamil	Daily	8:30pm	25-11870	Guam
Telugu	Daily	8:30pm	25-11640	Guam
Urdu	Daily	9:30pm	25-11835	Guam

Also Available

FREE Health & Bible Correspondence Courses

Please write to the Director, Adventist Media Centre, PO Box 1446, Pune 411 037, Maharashtra India.

E-mail: amc3@vsnl.com, amc@pn2.vsnl.net.in

Telephone: 020-24271483

JESUS

EXPERTS ON COMPLETE HEALTH

Books for a better life

Oriental Watchman Publishing House introduces an international collection of books which offers treatment and practical advice towards physical, mental, social and spiritual health.

Wholesome foods, harmful foods
Essential for the whole family
New lifestyle
Recipes that heal and prevent
Feeling good: Women live longer
Developing a healthy mind
Developing a healthy body
Kids collection
Plants that heal
Natural remedies

Family magazines for vibrant living

Herald of Health (English), Nalwazhi (Tamil)

Exploding every myth and explaining every truth

Our Times (a spiritual insight magazine in English)

Contact us: Oriental Watchman Publishing House, PB 1417, Salisbury Park, Pune 411 037, India.
Phone: 020 24261441, Fax: 020 24261638.